பக்கங்கள்:23 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 17 ஞாயிற்றுக்கிழமை 30.01.2022 கதிர் 86

### இனி அது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியல்வாதி ஒருவருடன் தொலைபேசியில் நேற்றிரவு பேசினேன்.

"நாளை (இன்று) கஜேந்திரகுமார் அணி நடத்தும் போராட்டத்துக்கு அதற்கு முன்னரே வெற்றி கிடைத்துவிட்டது" – என்றார் ஒரு நக்கல் – நமுட்டு –

☞2

# எதிரணிகளை ஒன்றிணைத்து நாட்டை மீட்க கூட்டு முயற்சி!

## சுமந்திரனின் முன்னெடுப்பில் ஆரம்பம்

**மிகமோசமான பொருளாதார நெருக்குவாரத்தில் சிக்கியிருக்கும் நாட்டை மீட்டெடுப்பதற்கான கூட்டு முயற்சி ஒன்றை பிரதான எதிர்க்கட்சிகள் ஆரம்பித்திருக்கின்றன.**

**தென்னிலங்கைத் தரப்புகளின் கோரிக்கைக்கு அமைய இந்த முயற்சிக்கான மைய செயற்பாட்டாளராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. பணியாற்றுகின்றார்.**

☞2

## 13 உம், மாகாண சபை முறைமையும் புதிய அரசமைப்பில் அடியோடு அவுட்!




இலங்கையின் உத்தேச புதிய அரசமைப்பில் மாகாண சபை முறைமையே முழுமையாக நீக்கப்பட்டுள்ளதாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை முழுமையாக நீக்கப்படுவதோடு அதன் கீழ் தற்போது பணியாற்றும் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் தற்போது பணியாற்றும் துறையின் மத்திய அரச நிர்வாகத்தின் கீழ் மாற்றப்படுவார்கள் எனவும் அந்த நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான நகல் வடிவைத் தயாரிப்பதற்கு 14 பேர் அடங்கிய நிபுணர் குழு ஒன்றை அரசு நியமித்து இருந்தது. அந்த நிபுணர் குழு நீண்டகால கலந்தாய்வுகளின் பின்னர் நகல் வடிவம் ஒன்றை அரசிடம் கையளித்து இருப்பதாகக் கூறப்படுகின்றது அந்த நகல் வடிவத்திலேயே மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிரும் மாகாணசபை முறைமை முழுமையாக நீக்கப்பட்டு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

## சூட்டுக்காயத்துடன் எஸ்.ரி.எவ். அதிகாரி சடலமாக மீட்பு

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகிய நிலையில் உயிரிழந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை (எஸ்.ரி.எவ்.)அதிகாரி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் தியத்தலாவை ☞2

## ஓர் அமைச்சர், ஓர் எம்.பி. மீது ஒழுங்கு நடவடிக்கை பாயும்?

இராஜாங்க அமைச்சர் ஒருவர் மற்றும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்க அரச தலைவர்கள் தயாராகி வருகின்றனர் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டத்தில் இருந்து தப்பிப்பதற்காக வெளிநாட்டில் பதுங்கி இருந்த வர்த்தகர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தின் முக்கிய பிரமுகர்கள் வெளியேறும் முனையத்தின் ஊடாக அழைத்து வந்தார் என இவர்கள் ☞2

## இரு பிள்ளைகளைக் கொன்ற பின் தற்கொலை செய்த இளம் தந்தை!

### ஆஸியில் இலங்கையரின் செயல்



ஆஸ்திரேலியாவில் பேர்த் நகரில் வசிக்கும் 40 வயதுடைய இலங்கையர் ஒருவர் தனது இரண்டு பிள்ளைகளைக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என ☞2

## பதுளை நீர் வீழ்ச்சியில் மூழ்கி ஐவர் உயிரிழப்பு

### மற்றொருவரைக் காணோம்

பதுளை, ஜன. 30

பதுளை மாவட்டம் உமா ஓயா – கெரண்டி எல்ல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற 4 பேர் உயிரிழந்துள்ளமையுடன், ஒருவர் காணாமல் போயுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நீர்வீழ்ச்சிக்கு நேற்று 11 பேர் நீராட சென்றுள்ளனர், அவர்களில் 5 பேர் இவ்வாறு நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அவர்களுள் நால்வர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போன நபரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டணியின் புதிய நிர்வாகிகளை அறிவித்தது சங்கரிக்கு எதிரான குழு

ஆனந்தசங்கரிக்கு மாறான குழுவினர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட பொதுச் சபைக் கூட்டத்தை யாழ்ப்பாணம் ☞2



## மாடியிலிருந்து விழுந்து சிறுவன் உயிரிழப்பு

பம்பலப்பிட்டியில் ஏழு மாடி கட்டடத்தில் இருந்து தவறி விழுந்த 15 வயதுடைய சிறுவன் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் ☞2

## ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஐ நிராகரித்து தமிழ்த் தேசமாய் இன்று அணிதிரள்வோம்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13ஆம் திருத்தச் சட்டத்தினுள் முடக்கும் சதிமுயற்சியை முறியடிக்க இன்று இடம்பெறும் பேரணியில் அனைத்துத் தமிழ் மக்களையும் அணிதிரண்டுவருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

– இவ்வாறு பகிரங்க அறிக்கை மூலம் அழைப்பு விடுத்திருக்கின்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்தவறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு:–

இலங்கை தீவிலிருந்து பிரித்தானியர் வெளியேறிய 1948 தொடக்கம் இன்று வரை நடைமுறையில் இருக்கும் சிங்கள பௌத்த மேலாதிக்கம் கொண்ட ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்களானவை, ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரிப்புடன்.

எனக்கு விளங்கவில்லை. "ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள்?" என்று விளக்கம் கேட்டேன்.

"அதுதான் புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைக்காகத் தெரிவு செய்யப்பட்ட நிபுணர் குழு உத்தேச புதிய அரசமைப்புக்கான நகலைக் கொடுத்து விட்டதே. அதில் மாகாணசபை என்ற பேச்சே இல்லை எனக் கொழும்பு சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அப்படியானால் மாகாண சபை முறைமை முழுமையாக அவுட் என்பது தானே அர்த்தம்? ஆக, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தும் '13' ஐ ஒழிக்க வேண்டும் என்ற விவகாரம் புதிய அரசமைப்புடன் நடைமுறைக்கு வந்து விடும்தானே. அதன் பின்னர் 13 குறித்து தமிழ் கட்சிகள் இந்தியாவுடனும் பேச முடியாது, வேறு யாரிடமும் பேச முடியாது. தமிழர்களின் அபிலாஷைகளை 13 இற்குள் யாரும் பிறகு முடக்கவும் முடியாதல்லவா? ஆகவே இறுதி வெற்றி கஜேந்திரகுமாருக்குத்தானே!" - என்றார் அவர்.

எனக்கு முடிவு சொல்ல முடியவில்லை. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே?

* * *

காலம் பார்த்து, நேரம் கணித்து பிஸ்னஸ் செய்வதில் நம் யாழ்ப்பாணத்து வர்த்தகர்கள் படு சூரர்கள். ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஒரு வர்த்தக நண்பரைச் சந்தித்தேன். தன்னுடைய பெறுமதிமிக்க வீட்டை வங்கியில் அடகு வைத்து ஐந்தாறு கோடி ரூபா புரட்டும் முயற்சியில் மிக சீரியஸாக இருந்தார். ஏன் இவ்வளவு அவசரம், இவ்வளவு பணம் தேவை என்று கேட்டேன். அவர் சொன்ன காரணத்தை கேட்டு சிலிர்த்துப் போனேன்.

ஓமந்தைக்கு அப்பால் தண்டவாளங்களைத் திருத்தப் போகின்றார்கள். அதனால் மார்ச் மாதத்திலிருந்து அடுத்த ஐந்து மாதங்களுக்கு யாழ் - கொழும்பு ரயில் சேவை நடக்காது. முற்றாக முடங்கி விடும். இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ் - கொழும்பு பஸ் சேவையில் ஒரு சோடி சொகுசு பஸ்களை சேவையில் ஈடுபடுத்தினால் 5 மாத காலத்துக்குள் போட்ட முதலை எடுத்துவிடலாம் என்றார் அவர். நேரம் கணித்து பிஸ்னஸ் செய்வதில் என் நண்பரும் சூரர்தான் - நமது ஏனைய யாழ் வர்த்தகர்களைப் போல...!

- மின்னல் -

## கூட்டுக்காயத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், மரணத்திற்கான



காரணம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஹப்புத்தளை பொலிஸ் விடே அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த அதிகாரி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஒற்றையாட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் மீதான திட்டமிட்ட இனப்படுகொலைக்கும், நிலப்பறிப்பு, திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், பௌத்த மயமாக்கல்கள் உள்ளிட்ட கட்டமைப்புசார் இனவழிப்புக்கும் காரணமாக அமைந்து வந்தன. அதன் காரணமாகவே தமிழர்கள் நாம் ஒற்றையாட்சியை நிராகரித்து சமஷ்டி ஆட்சியைக் கோரி போராடி வந்துள்ளோம்.

இப்போராட்டப்பயணத்தின் இடையில் தமிழ் மக்களின் சம்மதம் இன்றி, 1987ஆம் ஆண்டு ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆம் திருத்தச் சட்டம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது. 34 ஆண்டுகள் கடந்தும் அதன் மூலம் தமிழ் மக்களுக்கு எந்த அதிகாரமும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் 1978 ஆம் ஆண்டு ஒற்றையாட்சி அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்டு 44 வருடங்களின் பின்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்போவதாகக் கூறி இலங்கைக்கான 4 ஆவது ஒற்றையாட்சி அரசியல் யாப்பு விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. இந்நிலையில் கடந்த 34 வருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு தமிழ் கட்சிகளால் கோரப்பட்டுள்ளது. இச் செயற்பாடு தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் சதிமுயற்சியாகும். இச் சதிமுயற்சியை முறியடிக்கவும் தமிழ்த் தேசம் இறைமை, சுயநிர்ணயமுள்ள சமஷ்டித் தீர்வை வலியுறுத்தியும் மாபெரும் பேரணி இன்று இடம்பெறுகின்றது. இப் பேரணிக்கு அனைத்துத் தமிழ் மக்களையும் அணிதிரண்டு வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

இன்று காலை 10.00 மணிக்கு யாழ். நல்லூர் கந்தன் வீதியில் இருந்து பேரணி ஆரம்பமாகும்.

பொதுக் கூட்டம் நல்லூர், முத்திரைச் சந்தி கிட்டு பூங்காவில் நடைபெறும். - என்று உள்ளது.

## இரு பிள்ளைகளைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

படுகொலை செய்யப்பட்ட சிறுவனுக்கு 6 வயதும் சிறுமிக்கு 4 வயதும் என ஆஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திக்க குணதிலக்க என்ற நபரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இந்த சம்பவத்துடன் வேறு நபர்கள் தொடர்புபடவில்லை என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அந்த நாட்டு பொலிஸ் உயர்அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மரணத்திற்கான சரியான காரணம் மற்றும் சூழ்நிலைகள் முழுமையாக ஆராயப்படும், இதற்கு சிறிது நேரம் எடுக்கும், ஆனால் இந்த கட்டத்தில் நான் உங்களுக்கு சொல்கிறேன், இந்த சம்பவத்தை நாங்கள் இரட்டை கொலை மற்றும் தற்கொலையாகக் கருதுகிறோம் - என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

## மாடியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

பம்பலப்பிட்டி, க்ரஸ்டர் பிளேஸில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் மாலை குறித்த சிறுவன் தவறி விழுந்துள்ளார்.

இதில், படுகாயமடைந்த சிறுவன்



வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கூட்டணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளம் கலைஞர் மண்டபத்தில் நேற்று நடந்த கட்சியின் புதிய நிர்வாகிகளை அறிவித்திருக்கின்றனர்

நேற்றுக் கூட்டப்பட்ட கூட்டத்தின் பிரகாரம், கட்சியின் புதிய தலைவராக தம்பையா இராசலிங்கம் தேர்வு செய்யப்பட்டார். செயலாளர் நாயகமாக கணபதிப்பிள்ளை யோகராஜா தெரிவானார். அத்துடன் நிர்வாகச் செயலாளராக கதிர வேலு கௌரிகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். சிரேஷ்ட உப தலைவராக சண்முகராஜா அரவிந்தன் ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் மகளிரணி செயலாளர், இளைஞரணி செயலாளர் தெரிவுகளும் நேற்றைய தினம் இடம்பெற்றன.

இது தொடர்பில் அத்தரப்பினால் கூறப்பட்டவை வருமாறு:-

கட்சியினுடைய பதவி நிலைகள் தேர்தலின் அடிப்படையில் வடக்கு - கிழக்கில் உள்ள அனைவருக்கும் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. தொடர்ச்சியாக ஜனநாயக ரீதியிலான கொள்கையின் அடிப்படையில் கட்சியைக் கொண்டு செல்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்ப்பதற்கு இளைஞர்கள் எமது கட்சியில் இணைந்துள்ளார்கள். அவர்கள் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த 25ஆம் திகதி நாங்கள் கட்சி அலுவலகத்துக்கு சென்றபோது அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. அது தொடர்பில் முறைப்பாடுகளை யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கியிருக்கிறோம். - என்றனர்.

# யாழ்.மாவட்ட சாரதிப் பாடசாலைகளின் உரிமையாளர்கள் அமைப்பின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்.மாவட்ட சாரதி பாடசாலை உரிமையாளர்கள் அமைப்பு தங்கள் கட்டமைப்பில் அங்கத்துவம் பெற்ற நிறுவனங்களின் பட்டியலை பொது மக்களுக்கு வெளியிட்டுள்ளது.

தற்சமயம் யாழில் மக்களை ஏமாற்றும் நோக்குடன் சிலர் செயற்பட்டு வருகின்றனர் எனவும், மக்கள் இவ்விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்து இவ்விவரத்தை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக யாழ் மாவட்ட சாரதி பாடசாலை உரிமையாளர் அமைப்பில் பின்வரும் சாரதி பயிற்சி பாடசாலைகளே அங்கம் வகிக்கின்றன.

தமது அமைப்பில் அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சி பாடசாலைகள் என அது வெளியிட்டுள்ள விவரம் வருமாறு:-

★கிருபா லேணர்ஸ்
★நியூ நெல்சன் லேணர்ஸ்
★சீபன் பாஸ்கர் லேணர்ஸ்
★ESTY லேணர்ஸ்
★சசிகா லேணர்ஸ்
★விக்கி லேணர்ஸ்
★ரஜீபன் லேணர்ஸ்
★குலேன் லேணர்ஸ்
★ரொசான் லேணர்ஸ்

## ஓர் அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவருக்கும் எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தச் சம்பவம் தொடர்பாக புலனாய்வு பிரிவின் அறிக்கை பெறப்பட்டுள்ளமையுடன் ஜனாதிபதி இது குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்க உள்ளார் எனவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இந்த விடயம் குறித்து விரிவாகக் கலந்துரையாடிய பின்னர் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து சம்பந்தப்பட்டவரில் ஒருவர் நீக்கப்படலாம் எனவும் தெரியவருகிறது.

கைது செய்வதற்காக பொலிஸாரால் தேடப்பட்டுவந்த நிலையில், சம்பந்தப்பட்ட வர்த்தகர் நீண்டகாலத்திற்கு முன்னர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார்.

அண்மையில் அவர் நாடு திரும்பியமையுடன் மேற்படி அரசியல்வாதிகளின் உதவியுடன் அவர் விமான நிலையத்தின் முக்கியபிரமுகர்கள் வெளியேறும் முனையத்தின் ஊடாக நாட்டிக்குள் வந்துள்ளார்.

இவ்வாறு நாடு திரும்பிய அந்த வர்த்தகர் அந்த அரசியல்வாதிகளின் உதவியுடன் பொலிஸாரிடம் சரணடைந்தமையுடன், நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுமுள்ளார். இந்த வர்த்தகர் எத்தனோல் மதுசாரம் கடத்தலில் ஈடுபட்டு வந்தவர் எனக்கூறப்படுகிறது.

## எதிரணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் இந்த முயற்சியில் பங்குபற்றுகின்றன.

சுமந்திரன் எம்.பியின் அழைப்பின் பேரில் இவ்விடயம் தொடர்பான முதல் கூட்டம் கடந்த வியாழக்கிழமை 27ஆம் திகதி மாலை 5.00 மணி முதல் 7.30 மணிவரை கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலின் கருத்தரங்கு ஒன்றுகூடல் மண்டபம் ஒன்றில், மூடிய அறைகளுக்குள் நடந்தது.

இந்த கலந்துரையாடலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா, ரணில் விக்கிரமசிங்க, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எரான் விக்கிரமரத்ன, ஹர்ஷ டி சில்வா, கபீர் காசிம் மற்றும் ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், திஸ்ஸ விதாரண போன்ற தலைவர்கள் பங்குபற்றினர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்ற இருந்தார். எனினும் சுகவீனம் காரணமாக அவர் கடைசி நேரத்தில் தமது வருகையை ரத்துச் செய்தார்.

எனினும், வரும் 10ஆம் திகதி அடுத்த சுற்றுப் பேச்சு நடைபெறும் போது தாம் நிச்சயம் பிரசன்னமாவார் என சுமந்திரனைத் தொடர்பு கொண்டு அவர் உறுதியளித்துள்ளார் என அறியவந்தது.

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார கொழும்புக்கு வெளியில் இருந்தமையால் நிகழ்ச்சியில் பங்கு பற்றவில்லை. எனினும் அக்கட்சியின் பிரதிநிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி, நிகழ் நிலையில் முழு அளவில் பங்கு பற்றினார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, மனோ கணேசன் போன்றோரும் இக்கூட்டத்தில் பங்குபற்றவிருந்தனர். எனினும் வேறு ஒழுங்குகள் காரணமாகப் பங்கு பற்ற முடியாமல் போயிற்று என்றும் அடுத்த கூட்டத்தில் பங்குபற்றுவர் என்றும் கூறப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி பற்றிய அடிப்படையில் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டமையினால் அதில் உலக வங்கியுடன் 28ஆண்டுகள் பணியாற்றிய பொருளாதார வல்லுநர் கலாநிதி சாந்த தேவராஜன், சர்வதேச நிதிக் கொள்கை விடயங்களில் நிபுணரான கலாநிதி றொஷான் பெரேரா, மத்திய வங்கியின் உதவி ஆளுநராகப் பணியாற்றிய கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்கா, பொருளாதார வல்லுநரான கலாநிதி நிஷாந்த டி மெல், விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு பேச்சு நடத்தியபோது ஜனாதிபதிக்கு சிரேஷ்ட ஆலோசகராக இருந்த கலாநிதி ராம் மாணிக்கலிங்கம் போன்றோரும் பங்குபற்றிக் கருத்துரைத்தனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான அடிப்படை அம்சங்கள், அதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான கூட்டு முயற்சி போன்றவை குறித்து அங்கு விரிவாகப் பேசப்பட்டதாகத் தெரிகின்றது.

அடுத்த கூட்டத்தில் - பெரும்பாலும் எதிர்வரும் 10ஆம் திகதி - முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் போன்றோரும் பங்குபற்றும் நிலையில் - தீர்க்கமான சில முடிவுகளை எடுத்து முன் நகர்வது என்று பூர்வாங்கமாகத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. (உ)

# ஊடகங்கள் மீதான தாக்குதல்களுக்கு நீதி கோரி கறுப்பு ஜனவரி அனுஷ்டிப்பு









ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களுக்கு நீதி கோரி, ஊடக அமைப்புக்களினால் நேற்று முன்தினம் கறுப்பு ஜனவரி அனுஷ்டிக்கப்பட்டது. கறுப்பு ஜனவரியை அனுஷ்டிக்கும் வகையில், கொல்லப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் படங்கள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

## சிறந்த இளம் எம்.பிக்கான விருது சாணக்கியனுக்கு!




2021ஆம் ஆண்டுக்கான சிறந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினருக்கான விருது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

Institute of Politics என்ற அமைப்பினால் இந்த விருது இரா.சாணக்கியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இடம்பெற்றிருந்தது.

எனினும், மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புகள் மற்றும் வேறு சில முக்கிய காரணங்களினால் இரா.சாணக்கியன் அந்த நிகழ்வில் பங்கேற்றிருக்கவில்லை என அவரது ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் கடந்த வாரம் Institute of Politics என்ற அமைப்பின் அலுவலகத்தில் வைத்து இரா.சாணக்கியனுக்கான விருது கையளிக்கப்பட்டுள்ளது.

## கொத்மலை பூனாஓயாவில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு



கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொத்மலை ரம்பொட தோட்டத்தில் உள்ள கொத்மலை நீர்தேக்கத்துக்கு நீர் வழங்கும் பூனாஓயாவில் நேற்று முன்தினம் ஆணின் சடலமொன்று நண்பகல் அளவில் மீட்கப்பட்டது என கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமொன்று பூனா ஓயாவில் இருப்பதை கண்ட பிரதேசவாசிகள் கொத்மலை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அதன்பின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இவர் நீரில் அடித்துக் கொண்டு வந்து உயிரிழந்தாரா? அல்லது எவராவது கொலை செய்து ஓயாவில் எறிந்து சென்றார்களா? அல்லது தவறி விழுந்து உயிரிழந்தாரா? என்பவை தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. உயிரிழந்தவர் சுமார் 40ற்கும் 50ற்கும் இடையிலான வயது மதிக்கத்தக்கவர். மேலதிக விசாரணைகளை தொடர்வதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா நீதிவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
Grade 10, GCE O/L
Literature 2022, 2023
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்நகர்.

விற்பனை
மூன்று மாதம் பாவித்த குளிர் ஊட்டி (A/C) யும், பாவித்த DVD Player மற்றும் பாவித்த மேசை, கதிரைகள் என்பன விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு:- 075 340 3985, 077 5900 517

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
கனடா & நோர்வே - Rs.1650
சுவிஸ் - Rs.1550
075 330 5500,070 330 5500
076 122 1566
யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால்- நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை- மூதூர் - கொழும்பு
POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

BRRENS Fashion Planet
Reborn Signature MINISTER
எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும், பிரத்யேகமான திருமணம், பூப்பனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.
பிறென்ஸ் பஷன் பிளானட்
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
Fb.Brrens Fashion Planet
Email.brensfashionplanet@gmail.com
075 527 9110
077 332 1937
021 2221 2777

Northern PC Park
BenQ
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தூங்கும் நீதி அமைச்சர்

தூங்குபவனை எழுப்பலாம். தூங்குபவன் போல பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது என்பர்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் கருத்து வெளியிட்ட இலங்கையின் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றியின் நிலைமையும் இப்படித்தான் உள்ளது போலத் தோன்றுகின்றது.

அவர் இருக்கும் அரசுப் பதவியில் அவர் அப்படித்தான் பேச முடியும். பேச வேண்டும். சில விடயங்கள் தெரிந்தும், தெரியாதவர் போல – தூங்குபவர் போல – பாசாங்கு செய்ய வேண்டிய இக்கட்டு அவருக்கு. அது ஓரளவுக்குப் புரிந்து கொள்ளத் தக்கதே.

பௌத்த – சிங்களப் பேரினவாத வெறிப்போக்கில் முன்நகரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசில், ஓர் அமைச்சர் என்ற முறையில் ராஜபக்ஷக்களின் முன்னைய இருண்ட கால ஆட்சி யுகத்தில் கட்டவிழ்ந்த விடயங்கள் தொடர்பில் தூங்கியவர் போலத்தான் அவர் பாசாங்கு பண்ண வேண்டும். இல்லையேல் அவர் அமைச்சர் பதவியில் தொடரமுடியாது. அதுவும் பௌத்த – சிங்களப் பேரினவாத வெறியர்களினால் இனவாத எரிச்சலோடும் சீற்றத்தோடும் நோக்கப்படும் சிறுபான்மையினத்தவரான முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த அவர் அப்படித்தான் கட்டாயம் செயற்பட வேண்டும். “நாய் வேடம் போட்டால் குரைத்துத் தானேயாக வேண்டும்?”. கோட்டாபய ராஜபக்ஷவின் தீவிர பௌத்த – சிங்கள வெறிப் போக்கு ஆட்சிப் பீடத்தில் இணைந்தால் அவர் அப்படித்தான் செயற்பட முடியும்; செயற்பட வேண்டும்.

ஆனால், அந்த அரசில் அவர் அமர்ந்திருப்பது வேறு அமைச்சுகள் என்றால், இந்தக் காரண காரியங்கள் ஏற்புடையவை. ஆனால் அவர் ஏற்றிருப்பதோ நீதி அமைச்சர் பதவி.

நீதி அமைச்சராக இருந்து கொண்டு எந்தக் காரணம் கருதியும் அநீதிக்குத் துணைபோகின்றவராக அவர் நடந்து கொள்ள முடியாது; நடந்து கொள்ளக் கூடாது.

அதுவும், உயரிய சட்டத்துறையைத் தனது வாழ்க்கைத் தொழிலாக வரித்துக் கொண்ட பின், நீதித் துறையில் அவர் அநீதியாக நடந்து கொள்வது பொருத்தமற்றது. எந்தக் காரணம் கருதியும் நியாயப்படுத்த முடியாதது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

காணாமலாக்கப்பட்ட உறவுகளின் பிரச்சினை என்பது வெறும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், இழப்பீடுகளை வழங்குதல் போன்றவை சம்பந்தமானது என்றால், அந்த உறவுகளின் பிரதிநிதிகள் அவர் அழைத்தபோது பேசியிருக்கலாம்; பேசியிருப்பர்.

ஆனால், அவர்களின் பிரதான பிரச்சினை – எதிர்பார்ப்பு – அதுவல்ல. காணாமலாக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு உண்மையில் நேர்ந்தது என்ன என்பது கண்டறியப்பட வேண்டும். அது தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைய நீதி விசாரணைகள் நடத்தப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படவேண்டும் என்பதுதான்.

வலிந்து காணமலாக்கப்பட்ட நம்மவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது எனக்குத் தெரியாது என வெறுமனே கைவிரிக்கும் – அதற்கு மேல் நீதி, நியாயமான விசாரணை நடத்தும் எண்ணமே இல்லாத – ஒருவரை ‘நீதி அமைச்சராக’ மதிக்கவோ, அவருடன் பேசவோ காணமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் மறுப்பது முற்றிலும் நியாயமானதே.

முன்னைய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின் இருண்ட பக்கங்களை மூடி மறைக்கும் கபடத் திட்டத்துடன் பதிலளிக்கும் – செயற்படும் – ஒரு நீதி அமைச்சரிடம் பாதிக்கப்பட்ட மக்கள் நீதியையும் எதிர்பார்க்க முடியாது. நம்பிக்கையும் வைக்க முடியாது.

அதனைத்தான் நேற்று அவர்கள் யாழ்ப்பாணத்தில் பிரதிபலித்தார்கள்.

# ‘பெருந்தொற்றுக்குச் சவால் விடுத்த மனிதநேயத்திற்கு செய்யும் மரியாதை’

## நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வு





(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜன.29

கொரோனாக் காலத்தில் பணியாற்றிய ஊழியர்கள் மற்றும் உத்தியோகஸ்தர்களுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

பெருந்தொற்றுக்கு சவால் விடுத்த மனித நேயத்திற்கு செய்யும் மரியாதை எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் நிகழ்வின் ஓர் அங்கமாக வடமாகாணத்திற்கான நிகழ்வு மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பெருந்தொற்றின் போது உயிர் நீர்த்தவர்களுக்கு ஒரு நிமிட மௌன வணக்கம் செலுத்தப்பட்டதுடன் பெருந்தொற்றின் போது செயற்பட்ட சகல தரப்பினருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாகாண அமைச்சின் செயலாளர்கள், முப்படைகளின் உயர் அதிகாரிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் கொவிட் தொற்று காலத்தின் மனித நேயப்பணிகளை முன்னெடுத்த வைத்தியர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ். பல்கலையில் நான்கு பேர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு



பேரா. பி. குமரேந்திரன்



பேரா. என்.கெங்காதரன்



பேரா. கே.லிங்கேசியா



பேரா. ஆர். ஸ்ரீகரன்

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் நால்வர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக நான்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் இந்தப் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர், வைத்திய நிபுணர் பி. குமரேந்திரன் சமுதாய வைத்தியத் துறையில் பேராசிரியராகவும், வணிக முகாமைத்துவ பீடத்தின் மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி என்.கெங்காதரன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், நிதி முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. லிங்கேசியா நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.ஸ்ரீகரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# கொரோனாத் தொற்றின் பின்பு நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம்

கொரோனாத் தொற்று ஏற்பட்டு மூன்று முதல் ஆறு மாதங்களுக்குள் நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நீரிழிவு சம்மேளனத்தின் தலைவரும், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உட்சுரப்பியல் நிபுணருமான வைத்தியர் மணில்க சுமணதிலக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் ஆறு மாதங்களுக்குப் பின்னர் தங்களது இரத்ததிலுள்ள சர்க்கரையின் அளவினை பரிசோதித்துக்கொள்வது



நல்லது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 06.03.1984 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி<br>கி.பா - செவ் -<br>தகைமை - A/L தொழில் - சுயதொழில்<br>எதிர்பார்ப்பு - உள்ளூர் மணமகள் | பிறந்த திகதி - 16.04.1983 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை 3<br>கி.பா - செவ் - 2 இல் சூரி செவ் தகைமை - BA<br>தொழில் - அபிவிருத்தி உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு - சுய / அரச தொழில் மணமகன் |
| பிறந்த திகதி - 08.12.1979 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூசம்<br>கி.பா - செவ் - 8 இல்<br>தகைமை - Bcom தொழில் - அதிபர்<br>எதிர்பார்ப்பு - அரசதொழில் மணமகள் | பிறந்த திகதி - 31.01.1995 மதம் - இந்து<br>ஜாதி - P பெண் நட்சத்திரம் - திருவோணம்<br>கி.பா - செவ் - தகைமை - A/L<br>தொழில் - எதிர்பார்ப்பு - உள்ளூர் மணமகன் |
| பிறந்த திகதி - 13.02.1982 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சித்திரை 3ம் பாதம்<br>கி.பா - செவ் - 4இல்<br>தகைமை -A/L தொழில் - UK PR<br>எதிர்பார்ப்பு - உள்ளூர் மணமகள் | பிறந்த திகதி - 04.08.1992 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - சித்திரை 2ம்<br>கி.பா - செவ் - தகைமை - BA Studying<br>தொழில் -<br>எதிர்பார்ப்பு - அரச தொழில் மணமகன் |
| பிறந்த திகதி - 14.10.1983 மதம் - இந்து<br>ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம்<br>கி.பா - செவ் - தகைமை -Media Communication in Canada தொழில் - Stock Controller Canada<br>எதிர்பார்ப்பு - உள்ளூர் மணமகள் | பிறந்த திகதி - 18.12.1989 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்<br>கி.பா - செவ் - தகைமை - Diploma in Teaching Science Studying B.Ed Special<br>தொழில் - Science Teacher எதிர்பார்ப்பு - அரச தொழில் |

077 650 5097, 077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா - 0014166661855




| மணமகள் விவரம் | மணமகன் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 02.08.1993 மதம் - இந்து<br>ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவோணம்<br>கி.பா - 88 செவ் - 8 இல்<br>தகைமை - BSc Soft ware தொழில் - Soft ware Eng.<br>எதிர்பார்ப்பு - Singapore இலங்கை பட்டதாரி மணமகன் | பிறந்த திகதி - 17.05.1990 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவோணம் 4<br>கி.பா - 27 செவ் - 12 இல்<br>தகைமை - Chatted Final தொழில் - UK, PR<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி இலங்கை மணமகள் (இலங்கை வருவார்) |
| பிறந்த திகதி - 05.03.1991 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - சுவாதி<br>கி.பா - 18 செவ் 7இல்<br>தகைமை - Business Management தொழில் - Bank Officer<br>எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன் | பிறந்த திகதி - 27.01.1986 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மகம்<br>கி.பா - 25 செவ் 6 இல் தகைமை -G.C.E. A/L<br>தொழில் - France எதிர்பார்ப்பு - G.C.E. A/L மணமகள்.<br>இலங்கை வந்துள்ளார். |
| பிறந்த திகதி - 12.12.1996 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூராடம் 2<br>கி.பா - 24 செவ் 4 இல்<br>தகைமை - G.C.E. A/L தொழில் - France<br>எதிர்பார்ப்பு - France இலங்கை மணமகன் | பிறந்த திகதி - 06.04.1995 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 4<br>கி.பா - 47 செவ் 7 இல்<br>தகைமை - HNDA தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி உள்நாடு/ வெளிநாடு மணமகள் |
| பிறந்த திகதி - 15.01.1990 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூரம்<br>கி.பா - 17 செவ் 4 இல்<br>தகைமை - பட்டதாரி தொழில் - France<br>எதிர்பார்ப்பு - France, இலங்கை மணமகன் தேவை | பிறந்த திகதி - 28.09.1994 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை 3<br>கி.பா - 43 செவ் 8 இல் தகைமை - G.C.E. A/L<br>தொழில் - நிறுவன காசாளர் எதிர்பார்ப்பு - G.C.E. A/L படித்த மணமகள் (காரைநகர் முன்னுரிமை) |
| பிறந்த திகதி - 08.13.1990 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - மகம்<br>கி.பா - 24 செவ் 8 இல்<br>தகைமை - M.B.B.S தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor மணமகன் | பிறந்த திகதி - 21.11.1989 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - மகம்<br>கி.பா - 23 செவ் 1 இல்<br>தகைமை - Cima Complete தொழில் - நிறுவன உரிமையாளர்<br>எதிர்பார்ப்பு - உள்நாடு, வெளிநாடு மணமகள் |
| பிறந்த திகதி - 01.09.1992 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - சித்திரை 4<br>கி.பா - 16 செவ் 16 இல்<br>தகைமை - Bsc, Msc தொழில் - சித்த மருத்துவர்<br>எதிர்பார்ப்பு - Doctor,Eng. மணமகன் | பிறந்த திகதி - 07....1987 மதம் - இந்து<br>ஜாதி - K பகுதி நட்சத்திரம் - ரேவதி 1<br>கி.பா - 65 செவ் 8 இல்<br>தகைமை - HNDA, Bcom தொழில் - நூலக உரிமையாளர்<br>எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் |
| பிறந்த திகதி - 11.09.1990 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - ரோகினி<br>கி.பா - 19 செவ் 7 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor, Eng. மணமகன் | பிறந்த திகதி - 13.10.1984 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - கார்த்திகை 3<br>கி.பா - 69 செவ் 11இல்<br>தகைமை - HNDA தொழில் - UK, PR<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி UK அல்லது இலங்கை மணமகள் |
| பிறந்த திகதி - 03.09.1992 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - விசாகம் 4<br>கி.பா -20 செவ் 12 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor மணமகன் | பிறந்த திகதி -24.05.1981 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 3<br>கி.பா - 25 செவ் 2 இல்<br>தகைமை - Bsc, Msc தொழில் - UK, PR<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் |

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# மாமாங்கத்தில் கடை முற்றாக எரிந்து நாசம்



மட்டக்களப்பு மாமாங்கம் 3 ஆம் குறுக்கு வீதியில் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை வியாபார நிலையம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது. இதனால் வியாபார நிலையத்திற்குள் இருந்த அனைத்து பொருள்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

எரிவாயு கசிவு காரணமாக இந்தத் தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

# வத்திராயன் மீனவர்கள் இருவரைக் காணோம்

வடமராட்சி கிழக்கு வத்திராயனிலிருந்து நேற்று முன்தினம் பிற்பகல் கடலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் இன்னும் கரை திரும்பாதமையால் அப்பகுதி மக்கள் சோகத்தில் மூழ்கியுள்ளனர். இவர்களோடு கடலுக்குச் சென்ற பலர் திரும்பியிருந்த போதிலும் இருவர் மட்டும் நேற்றுகாலை கரை திரும்பாததால் பிரதேசத்திலுள்ள மீன்பிடி படகுகள் மூலம் மீனவர்கள் தேடுதல் நடத்தியிருந்தனர்.

அவர்கள் பயன்படுத்திய வலை வெட்டப்பட்டுத் துண்டங்களாகக் காணப்படுகின்ற போதும் அவர்கள் சென்ற படகு இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனப் பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு காணாமல் போனவர்கள் பாரிய படகுகளுடன் மோதுண்டு கடலில் மூழ்கடிக்கப் பட்டிருக்கலாமென பிரதேச மீனவர்கள் அஞ்சுகின்றனர்.

யோசேப் பிரேம்குமார், அருண்குமார் தணிகைமாறன் என்ற இரண்டு மீனவர்களுமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

# விஜயகலாவுக்கு எதிரான வழக்கு ஜூன் 10க்கு தள்ளிவைக்கப்பட்டது

தமிழீழ விடுதலைப் புலிகளை மெச்சிக் கருத்து வெளியிட்டமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டு வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சி.ராகல முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சந்தேகநபரான விஜயகலா மகேஸ்வரன் நீதிமன்றில் ஆஜராகி இருந்தார்.

அவருக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கை குறித்து சட்டமா அதிபரிடமிருந்து இதுவரை அறிவுறுத்தல்கள் கிடைக்கவில்லை என விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து முறைப்பாட்டை ஜூன் 10 ஆம் திகதி அழைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கடந்த 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளை மீள உருவாக்கும் வகையில் கருத்து வெளியிட்டார் என எழுந்த முறைப்பாட்டையடுத்து இந்த சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இறைச்சிக் கோழி விற்பனை

புறோயலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

வரன் தேட....
இலங்கையின் முதல் தர திருமண சேவை

அருந்ததி
இணைய திருமண சேவை

2014ம் ஆண்டு முதல் ஆயிரக்கணக்கான
வெற்றிகரமான திருமணங்களுடன்

28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்

தொடர்புகளிற்கு
+94 777 164 524

அருந்ததி பிரைவட் லிமிடட்
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்
www.arunthathee.com

கெட்டி மேளம்
மணமக்கள் அறிமுகத்துடன் சிறப்பு பட்டிமன்றமும்

சனிக்கிழமை காலை 10.30 க்கு மற்றும்
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 க்கும்
CAPITAL தொலைகாட்சியில்

# மருத்துவக் கதிர்



# முழங்கால், முதுகு, கழுத்து வலிகளுக்கான நிரந்தரத் தீர்வுகள்

இன்றைய காலப் பகுதியில் முழங்கால் வலி, இடுப்பு வலி, கழுத்து வலி, முதுகு வலி உள்ளிட்ட பல் வேறுபட்ட வலிப்பிரச்சினைகள் பொதுவாக அனைவரும் எதிர்நோக்கும் ஒன்றாக மாறியுள்ளன. அதிலும் குறிப்பாக முழங்கால் வலியானது பெரும்பாலும் வயது முதிர்ச்சி, மூட்டுத் தேய்மானமடைதல் (osteoarthritis), உடல் எடையின் காரணமாக மேல் பகுதியிலுள்ள என்பு கீழ் உள்ள என்பை அழுத்துதல் ஆகிய காரணங்களால் ஏற்படலாம். இரு என்புகள் இணையும் போது அவற்றிற்கிடையில் இடைவெளி காணப்பட்டு அவ் இடைவெளியில் சினோவியல் எனப்படும் ஒருவகைத் திரவம் காணப்படும். இது இரு என்புகளிற்கிடையிலான உராய்வைத் தடுப்பதற்கு உதவுகிறது. இவ்வகை மூட்டுகளில் என்புகளிற்கிடையிலான திரவமானது வற்றி விட்டால் இரு மூட்டுகளும் ஒன்றுடன் ஒன்று உராய்ந்து முழங்கால் வலியை ஏற்படுத்தும். நாம் முழங்கால்களின் மேல் கைவைத்து காலை நீட்டி மடக்கும்போது எமது கைகள் மூலம் நர நர உணர்வை உணரக் கூடியதாக இருக்கும். இவ்வாறு காணப்



டின் எமது மூட்டுத் தேய்மானம் அடைந்துள்ளது என்பதை இலகுவாக உணர்ந்து கொள்ள முடியும். இவ்வாறான பாதிப்புகளால் தோற்றுவிக்கப்படும் முழங்கால் வலிகள் மற்றும் ஏனைய வலிகளுக்கு பெரும்பாலானோர் வலி நிவாரணிகளை உபயோகிக்கிறார்கள். இது முற்றிலும் தவறானதொரு தீர்வாகும். ஏனெனில் வலி நிவாரணிகள் மூலம் குறித்த நேரத்திற்கு மட்டுமே அவ் அவயத்தின் வலியை உணர்த்தாமல் இருக்க முடியும். மேலும் மருத்துவரின் அறிவுறுத்தலின்றி பாவிக்கப்படும் வலி நிவாரணிகள் முற்று முழுதான சிறுநீரகச் செயலிழப்பை ஏற்படுத்தும். மேலும் இவை தற்காலிகத் தீர்வுகள் மட்டுமே. மூட்டுகளிற்கிடையிலான சினோவியல் திரவத்தைச் சுரக்க வைப்பது மட்டுமே இதற்கான நிரந்தரத் தீர்வாகும். இவ்வாறு சினோவியல் திரவத்தை சுரக்க வைக்கும் முறை ஆயுர்வேத மருத்துவத்தில் உண்டு. எனவே சிறிதும் தாமதிக்காமல் ஆயுர்வேத சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் முழங்கால் வலிக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.

## முதுகு வலி

மக்களில் பெரும்பாலானோர் தமது ஏதாவது ஒரு வயதில் முதுகு/ இடுப்பு அடிபட உட்கார்ந்த நிலையில் விழுந்திருப்பார்கள். சிறுவர்கள் விளையாடும் போது கீழே விழுதல், மரத்திலிருந்து கீழே விழுதல், பெண்கள் வீட்டைத் தூய்மை செய்யும்போது வழுக்கி விழுதல், குளியலறையில் வழுக்கி விழுதல், தண்ணீர், எண்ணெயில் வழுக்கி விழுதல் ஆகிய நிலைகளில் அனைவரும் அடிபட்டு விழுந்திருப்பார்கள். இவ்வாறு உட்கார்ந்த நிலைகளில் விழும் போது ஏற்படும் பாதிப்புகளே முதுகு வலியை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளாக அமைகின்றன. இவ்வாறு எவ்வயதில் விழுந்து அடிபட்ட போதும் ஏற்பட்ட பாதிப்புகள் 40 - 50 வயதின் பின்னர் கூட முதுகு வலி சார்ந்த பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

மூளையிலிருந்து வரும் முண்ணான் (நரம்புத் தொகுதி) கொத்தாக எமது முதுகின் அடிப்பாகத்திலேயே வந்து முடிவடைகிறது. நாம் வழுக்கி விழும் போது முள்ளந்தண்டின் அடிப்பாகத்தில் நரம்புகள் ஒன்று சேருமிடத்தில் அடிபட்டால் அவ்விடம் நைந்து போய் பலவீனமாகி விடும். இவ்வாறு முள்ளந்தண்டின் அடிப்பாகம் அடிபட விழுபவர்கள் அதன்பின் அடிக்கடி பளு தூக்கும் செயல்களில் ஈடுபட்டாலோ / அவர்கள் அதிக உடல் எடை உள்ளவர்களாகவோ காணப்படுமிடத்து அவர்கள் மிகவும் முதுகு வலியால் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் CT scan அல்லது MRI Scan செய்து பார்த்தால் அவர்களின் என்பு வட்டு இடம் பெயர்ந்திருத்தல், என்புகளிற்கிடையிலான இடைவெளி குறைவடைந்து காணப்படல், என்புகளின் இறக்கம், நரம்புகளின் மேல் பிரயோகிக்கப்படும் அழுத்தம் வலது இடது கால் நரம்புகள் மேல் பிரயோகிக்கப்படும் அழுத்தம் காரணமாக ஏற்படும் கால்வலி, பிரசவத்தின் போதான அறுவைச் சிகிச்சையின் பின்னான அதிகரித்த முதுகு வலி ஆகிய அறிகுறிகள் காணப்படலாம். இவை எவ்வயதில் ஏற்பட்டாலும் அதற்கான காரணம் இவர்கள் முதுகின் அடிப்பாகம் அடிபட வழுக்கி விழுந்தமையே ஆகும். சிறு வயதில் அடிபட்டு விழுந்தமை கூட பல வருடங்கள் கழித்தும் பிரச்சினையை ஏற்படுத்தலாம்.எனவே இதற்கான நிரந்தரத் தீர்வாக அமைவது Hypericum (200Power) எனும் மருந்தாகும். நாம் வீட்டில் மஞ்சள் தூள், இஞ்சி, பனங்கற்கண்டு போன்ற அன்றாடப் பாவனைப் பொருள்களை மருத்துவத் தேவைக்காக உபயோகிப்பது போல இம்மருந்தையும் நாம் வீட்டில் வைத்திருப்பது நன்மை பயக்கும். இது ஒரு அத்தியாவசிய முதலுதவிப் பொருளாகும். Hypericum(200 Power) மருந்துப் போத்தலை வீட்டில் வாங்கி வைத்திருந்து சிறுவர் முதல் பெரியோர் வரை யார் அடிபட்டு விழும் போதும் இரண்டு நாள்களுக்கு மூன்று வேளைக்கு இம் மருந்தை எடுத்துக் கொண்டால் பல ஆண்டுகள் கழித்து வரும் என்பு இடம் பெயர்தல், முள்ளந்தண்டு இறக்கம், நரம்புகளின் மேலான அழுத்தம் ஆகியவற்றிலிருந்து நிரந்தரத் தீர்வைப் பெறலாம். வழுக்கி விழுந்து முள்ளந்தண்டு பாதிப்பிற்குள்ளாவோர் அப்பாதிப்பிலிருந்து வெளிவர தகடு பொருத்தியிருப்பார்கள். பல வேளைகளில் அவையே கிருமித் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளுறுப்புகளைப் பாதிக்கலாம். எனவே விழுந்து அடிபட்டவுடன் Hypericum எனும் மருந்தை எடுத்துக் கொள்வதன் மூலம் முதுகு வலியிலிருந்து நிரந்தத் தீர்வை பெறலாம். அவ்வாறில்லாமல் காலம் கடந்து ஏற்படும் முதுகு இடுப்புப் பிரச்சினைகளுக்கு உடனடியாக உரிய மருத்துவரை அணுகி முறையான



பிசியோதெரபி பயிற்சிகளைப் பெறுவதன் மூலமும் நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். அதை விடுத்து வலி நிவாரணிப் பாவனை மற்றும் சத்திர சிகிச்சை என்பன பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதே நிதர்சனமான உண்மை ஆகும்.

## கழுத்தென்புத் தேய்மானமும் கழுத்து வலியும்

நாம் உரையாடும்போது நம்மை அறியாமலோ அல்லது மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவோ தலையை அதிகமாக ஆட்டிப் பேசும் வழக்கத்தைக் கொண்டிருப் போம், இது கழுத்தென்புத் தேய்மானத்திற்கு முக்கிய காரணமாகும். இவை மட்டுமன்றி இரண்டு, மூன்று தலையணைகள் மேல் தலையை உயர்த்தி வைத்துப் படுத்தல், கையை தலைக்கு முட்டுக் கொடுத்து



மருத்துவர்
ஆஷா லெனின்
தமிழ்நாடு, இந்தியா

வைத்துப் படுத்தல் இவற்றின் காரணமாக கழுத்தென்புத் தேய்மானம், நரம்புகளில் அழுத்தம், தலைசுற்றல் மேலும் கைகளை தலைக்கு முட்டுக்கு கொடுத்து வைத்துப் படுக்கும் போது கழுத்து வலியும் கைகள் மரத்துப் போகும் தன்மையும் ஏற்படும். கழுத்து தொடர்பான பிரச்சினைகளுக்கு பெரும்பாலான மருத்துவர்கள் கழுத்துப் பட்டியை பரிந்துரை செய்கிறார்கள். ஆனால் கழுத்துப்பட்டிகளில் எந்தவொரு மருத்துவக் குணங்களும் இருப்பதில்லை. அவற்றின் வேலை கழுத்தை அசைவின்றி வைத்திருப்பது மட்டுமேயாகும். எனவே கழுத்தின் தேவையற்ற அசைவுகளைக் குறைத்துக் கொள்வதன் மூலமாக கழுத்துத் தொடர்பான பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம். மேலும் நாம் சிறுவர்களுக்கு தலையாட்டிப் பேசுதல், நிறையத் தலையணைகளை வைத்துப்படுத்தல், பிழையான கொண்ணிலைகளில் அமர்ந்து தொலைக்காட்சி பார்த்தல் ஆகிய செயல்களைத் தவிர்க்க அறிவுறுத்தி வளர்ப்பதன் மூலமும் நாமும் இந்த வகைத் தவறுகளைத் தவிர்ப்பதன் மூலமும் நாமும் எமது சந்ததியினரும் கழுத்துவலி உட்பட பெரும்பாலான கழுத்துப் பிரச்சினைகளிலிருந்து நிரந்தர நிவாரணம் பெறலாம்

முடிவாக என்புகளிற்கிடையிலான சினோவியல் திரவம் இல்லாமல் போவதால் முழங்கால் வலிப் பிரச்சினைகளும், கீழே விழுந்து அடிபடுவதால் முதுகு வலிப்பிரச்சினைகளும, கழுத்துக்கு அளவுக்கு அதிகமாக அசைவுகளை மேற்கொள்வதன் மூலம் கழுத்து வலி சார் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. எனவே வலிநிவாரணிகளைத் தவிர்த்து முறையான சிகிச் சைகளைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக இவற்றிற்கான முழுமையான நிரந்தரத் தீர்வைப் பெறலாம்.





# எழில் கதிர்



# இலங்கையில் அழகுக்கலையில் அதிகரித்த போட்டி



## வல்லுநர்களுக்கு சாதகமாக அமைகிறதா?

**இலங்கையின் முன்னணி அழகுத் துறைக் கலைஞரும் அழகுக் கலைத்துறையில் பல தரப்பட்ட வெற்றிகளைத் தனதாக்கி மிளிரும் சாதனைப் பெண்மணியும் Peo Beauty அழகுக்கலை நிறுவன உரிமையாளருமான திருமதி பிரதீபா ராஜ்குமார் எமது எழில் கதிரிற்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்**

**1) உங்களை பற்றிய ஒரு சிறிய அறிமுகம்மொன்று எங்களுக்காக?**

நான் பிரதீபா ராஜ்குமார்.நான் எனது உயர்தரக் கல்வியை நிறைவு செய்ததன் பின்னர் அழகுக்கலை மீதிருந்த ஆர்வத்தின் காரணமாக நேரடியாக இத்துறையில் கால் பதித்து என் 21 வயதிலிருந்து 20 வருடங்களாக அழகுக்கலைஞராக பணியாற்றி வருகிறேன்.

**2) உங்களுக்கு இத்துறையில் ஆர்வம் ஏற்பட காரணம்?**

எனக்கு சிறுவயதிலிருந்தே மனையியல் பாடத்தின் மீது ஆர்வம் அதிகம்.எனது பாடசாலை காலங்களில் இருந்து மனையியல் துறை சார்ந்த போட்டிகளில் பல பரிசுகளை பெற்றுள்ளேன். மேலும் அழகுக்கலை ஆனது ஆரம்பகாலங்களில் ஒரு சுய தொழில் சார்ந்த துறையாக காணப்பட்டது.எனவே வீட்டில் இருந்தபடியே எமது பணிகளை தொடரலாம் என்ற காரணத்தினால் இத்துறையை தெரிவு செய்தேன்.ஆரம்ப காலத்தில் முக அழகுக் கலையைத் தாண்டி தையல், ஆரி வேர்க், ஆகிய அழகுக்கலை சார்ந்த விடயங்களில் நான் பெரும்பாலும் கவனம் செலுத்தினேன். மேலும் பெண்கள் அழகுக்கலை சார்ந்த விடயங்களை கற்று இருத்தல் அனைத்து விதங்களிலும் அவர்களிற்கு நன்மை பயக்கும் என்ற நம்பிக்கையில் இத்துறையை தெரிவு செய்தேன். ஆனால் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்தது. சிறுவயதிலிருந்தே எனக்கு இத்துறையில் காணப்பட்ட விருப்பம் , ஆர்வம் மற்றும் இயற்கையாகவே என்னுள் உறைந்த திறமையுமே ஆகும்.

**3) நீங்கள் கடந்து வந்த இவ் 21 வருட வெற்றிப் பாதையில் நீங்கள் சந்தித்த சவால்கள் எத்தயகவை ?**

முன்னெப்போதும் இல்லாதவகையில் தற்போது இலங்கையின் அழகுக்கலைதுறையில் அதிகரித்த போட்டித் தன்மை காணப்படுதல், அழகுக்கலைத் துறைக்குரிய சந்தை நிறை போட்டித் தன்மையுடன் காணப்படுதல் ஆகியவை குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சவால்களுக்கும். மேலும் அழகுக்கலைத் துறையில் தரம், திறமை ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் சில வாடிக்கையாளர்கள் இளம் வயதில் உள்ளோருக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்து அவர்களை நாடி செல்லல், அழகுக்கலை என்றால் இளம் வயதினர் மட்டுமே என்ற தவறான நம்பிக்கை ஆகியனவும் முக்கிய சவால்களாகக் காணப்படுகின்றன.

அழகுக்கலைத் துறையில் சேவை வழங்குனரது அழகுக் கலைதொடர்பான கல்வித்தகைமையை பலவாடிக்கையாளர்கள் கவனத்தில் கொள்வதில்லை. கல்வி, அனுபவம், திறமை ஆகியவற்றிக்குரிய அங்கீகாரம் கிடைக்காமை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் அறிந்து கொள்ளகூடிய விடயப் பரப்பு ஒன்றாக அழகுக்கலைத் துறை மாறியுள்ளமை மேலும் இவ்வாறான விடயங்களை பிரயோகிப்பதனூடான பின் விளைவுகள் மற்றும் தரம் ஆகியவற்றை யாரும் கவனத்தில் கொள்வதில்லை போன்ற பல புதிய போக்குகள் போன்றன என்னால் மட்டுமன்றி இத்துறையிலுள்ள பலர் முகங்கொடுக்கும் முக்கிய சவால்களாகும்.

**4) ஆரம்ப காலம் முதல் இன்று வரை வெற்றிகொண்ட விருதுகள் மற்றும் படைத்தசாதனைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ள இயலுமா? இத்தகைய விருதுகளை வெற்றிகொள்வதற்கு உங்களுக்கு ஊக்கமாக இருந்த விடயங்கள்?**

2017 ஆம் ஆண்டு யாழ்மாவட்ட அழகுக் கலைஞர் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட சிறந்த நவீன அழகுக்கலை நிலையத்திற்கான போட்டியில் எமது நிறுவனமான **Peo Beauty** மாவட்ட ரீதியாக 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

மேலும் 2020இல் அகில இலங்கை அழகுச் சிகிச்சை நிபுணர்கள் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட சிகரம் தொட்ட தமிழ்ப் பெண்கள் விருது வழங்கும் விழாவில் சிகரம் தொட்ட தமிழ்ப் பெண் விருது கிடைக்கப்பெற்றது.

2018 ஆம் ஆண்டு **Star Ceramic** நிறுவனம் நடத்திய **Bridal Show** நிகழ்ச்சியில் அகில இலங்கை ரீதியில் 10இற்குள் ஒரே தமிழ்ப்பெண்ணாக தெரிவு செய்யப்பட்டேன். ஏனையோர் சிங்கள மொழிக் கலைஞர்கள் ஆவர். மேலும் அழகுச் சிகிச்சை தொடர்பான பட்டமொன்றைப் கடந்த ஆண்டு பூர்த்தி செய்துள்ளேன். இவற்றிற்கான ஊக்கமாக நான் கருதுவது, எனக்கு இத்துறை மேலுள்ள காதலால் நான் பல புதிய விடயங்களை முயற்சித்துப் பார்ப்பேன். மேலும் அனைத்திலும் சிறந்ததொன்றை வழங்க வேண்டுமென்ற அவா என்னுள் என்றும் காணப்படும். அவைதான் இவ் வெற்றிகளைச் சாத்தியமாக்கிய முக்கிய காரணங்களாகும். இவை அனைத்தையும் விட எனக்கு மிகவும் பெருமையான மற்றும் மகிழ்வளிக்கும் விடயமாகக் காணப்படுவது எனக்குத் தெரிந்த கலையை ஏனையோருக்கும் கற்பித்தல். இவ்வாறு நான் கற்பிக்கத் தொடங்கியும்.

21 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. உங்களால் நான் உருவாகியுள்ளேன்,நன்றாக இருக்கின்றேன் எனும் மாணவர்களின் வாசகங்களையும் நெகிழ்வான தருணங்களையும் எனக்கு கிடைத்த பெறுமதியான விருதுகளாகவே நான் கருதுகின்றேன்.




**5) இன்றைய கால கட்டத்தில் அழகுக்கலைத் துறை மிகவும் போட்டி வாய்ந்த ஒன்றாகஇருக்கின்ற போதிலும் உங்களுக்கென்று பெருமளவிலான வாடிக்கையாளர்கள் தொகை காணப்படுவதுடன் இலங்கையின் அழகுக் கலை சார்ந்த குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வெற்றியாளராகத் திகழ்வது உண்மையிலேயே பெரிய விடயமாகும். எனவே உங்களுடைய பெரும் பலமாக தனித்திறமையாக நீங்கள் எதனைக் கருதுகிறீர்கள்?**

நான் 15 வருடங்களிற்கும் மேலாக யாழ் நகரில் **Peo Beauty** என்ற அழகுக் கலை நிலையத்தை நடத்தி வருகிறேன். அன்றிலிருந்து இன்று வரை எமது நிறுவனத்தை மட்டுமே நாடி வரும் பல வாடிகையாளர்களைக் காணலாம். அதற்கான முதலாவது காரணமாக நான் கருதுவது எனது சேவை மீதான வாடிக்கையாளரின் நம்பகத்தன்மை. அத்தகைய நம்பகத்தன்மையான சேவையை வழங்குவதனூடாகவே நிரந்தரமான வாடிக்கையாளரைப் பெற்றுக்கொள்வதுடன் எமது தொழில் வாழ்க்கையிலும் நிலைத்த தன்மையை உறுதிப்படுத்தலாம். மேலும் நாம் எமது வாடிக்கையாளருடன் பழகும் விதம். எமது நிறுவனத்தின் முக்கிய கோட்ப்பாடுகளுள் ஒன்று வாடிக்கையாளருக்காகத் தான் சேவை வழங்குநர் அல்லாது சேவை வழங்குநருக்காக வாடிக்கையாளர் அல்ல. வாடிக்கையாளர் மனதறிந்து அவர்களின் தேவைக்கேற்ற சேவையை வழங்குவதால் மட்டுமே இத்தனை வருடகாலம் இத்துறையில் பழைய வாடிக்கையாளரைத் தக்க வைத்திருப்பதுடன் பல புதிய வாடிக்கையாளர்களையும் பெற்றுக்கொள்ள முடியுமாயுள்ளது. சந்தோமான நல்ல மனதுடன் நாம் வழங்கும் சேவையே வாடிக்கையாளருக்கு முழுமையான சேவையாக அமையும். எனவே நம்பகத் தன்மை, வாடிக்கையாளருகேற்ற சேவை வழங்கல் மற்றும் நல்ல மன நிலை, விருப்பத்துடன் சேவை வழங்கல் ஆகியவற்றை எமது பெரும்பலமாகச் சொல்லலாம்.

**6) தற்போது அழகுக் கலையானது முழு நேரத்தொழிலாக மட்டுமன்றி பகுதி நேரத் தொழிலாகவும் மக்கள் மத்தியில் பிரபலமடைந்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதிலும் குறிப்பாக முழுநேர உத்தியோகத்தர், மாணவர் இத்தொழிற்றுறையினை நோக்கி ஈர்க்கப்படுகின்ற போக்கு அதிகரித்துக் காணப்படுகிறது. வேறு துறையிலுள்ளோரும் இத்துறையை பகுதிநேரமாக மேற்கொள்வதனூடாக எத்தகைய நன்மைகளை அடையலாம்?**

இது ஒரு சுய தொழில். இதை நாம் விரும்பியவாறு எமது நேரத்திற்கேற்ற வகையில் செய்யலாம். இதன் மூலம் கிடைக்கும் முக்கிய நன்மையொன்றாக நான் கருதுவது திருப்தி, மன மகிழ்வு.

அழகுகலையை நாம் முழுமையாக நிறைவாக முடித்து விட்டு அதன் பெறுபேற்றை நோக்குகையில் எம்மையும் அறியாமல் ஒரு வித மகிழ்வை நாம் உணரலாம்.அழகுக் கலையை பகுதி நேரமாகச் செய்பவர்கள் தமது வெளிப்புற வேலை அழுத்தங்களிலிருந்து விடுபட்டு ஒரு நிம்மதியை உணரலாம். எமது மனமகிழ்வு மட்டுமன்றி இது ஒரு மேலதிக வருமான மூலம் , பெண்கள் இக்கலையைப் பயின்றிருப்பதால் வெளி நபரின் உதவியின்றி தமது வேலையைத் தாமே நிறைவு செய்து கொள்ளலாம்.இதனால் மேலதிக செலவீனங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**7) அழகுக் கலையை பகுதி நேரமாக மேற்கொள்வோருக்கும் முழு நேரமாக மேற்கொள்வோருக்குமிடையில் நிச்சயமாக பெருமளவு வேறுபாடு காணப்படும்.ஏனெனில் பகுதி நேரமாக இத்துறையை தெரிவு செய்வோருக்கு இத்துறையின் அனைத்து அம்சங்களையும் கற்றுக்கொள்ளலும் பிரயோகித்தலும் கடினமானது. எனவே வேறு தொழிற்றுறையிலிருந்த படி அழகுகலையை பகுதி நேரமாக மட்டும் தெரிவு செய்வோருக்கு நீங்கள் எவ்வாறான ஆலோசனைகளை முன்மொழிவீர்கள்?**

ஆரி வேர்க், சாறி பிளவுஸ், ஐசிங் கேக் ஆகிய பிரிவுகள் அழகுக் கலையை பகுதி நேரமாகத் தெரிவு செய்வோருக்கு மிகப் பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் இப்போது **facial, Hair Straightening** தொடங்கினால் முழுமையாகச் செய்து முடிக்கும் வகைக்குள் வரும். ஆனால் ஆரி வேர்க், சாரி பிளவுஸ் தைத்தல் ஆகியவற்றைப் பயில்வதன் மூலம் தமது ஓய்வு நேரங்களில் பகுதி பகுதியாகச் செய்து முடிக்கலாம்.

**8) கொரோனாப் பெருந்தொற்றுக் காலகட்டத்தின் பின் இலங்கை மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பெரும்பாலான தொழிற்றிறல்கள் வீழ்ச்சி மற்றும் ஸ்தம்பித நிலையை எதிர்கொண்டு திணறுகின்றன. ஒரு முனைவோராக இத்தகைய சவாலை நீங்கள் எவ்வாறு கையாள்கிறீர்கள்?**

கோவிட் பெருந்தோற்றால் எனது தொழில் வாழ்க்கை பெரிதாகப் பாதிக்கப்படவில்லை காரணம் நான் சுயமாக வீட்டில் இருந்து செய்யக்கூடியவற்றை குறிப்பாக ஆரிவேர்க் ஆகியவற்றில் கவனம் செலுத்தி செய்து கொண்டிருந்த படியால் கொரோனாக் காலம் சிறிது ஓய்வெடுக்கும் காலமாகவே காணப்பட்டது. இருப்பினும் எமது பொருளாதர நிலை அத்தனை பாதிப்புகளை சதந்திக்கவில்லை என்றே கூறலாம்.

**9)தற்போதைய இலங்கையின் பொருளாதார சூழ்நிலையில் பல இறக்குமதிப் பொருள்கள் தட்டுப்பாட்டு நிலையை எதிர்நோக்குகின்றன. ஒரு அழகுக் கலைஞராக எவ்வாறு இச் சூழலைக் கையாள்கிறீர்கள்? இதற்கான தீர்வுகளாக நீங்கள் கருதுபவை?**

இது எல்லாத் துறைக்கும் பொதுவான ஆனால் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு காலம் தான். சில தேவைகளுக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் நிறைய சிரமங்கள் காணப்படுகின்றன. இதற்கு நாம் நேரடியாக வெளிநாடுகளிலிருந்து பொருடகளைப் பெற்றுக் கொள்ளல் தீர்வாகலாம். இருப்பினும் அவற்றால் சேவைக்கட்டணம் உயர்வடையாக் கூடிய முக்கிய சவால் காணப்படுகிறது.

(19ஆம் பக்கம் பார்க்க)







# மன்னரும் வழிப்போக்கனும்

மன்னர் ஒருவர் ஊர் சுற்றிக் கொண்டு வந்தபோது சோர்வு காரணமாக வழியில் தென்பட்ட மாஞ்சோலையில் இளைப்பாறினார்.அவருடைய பரிவாரங்களும் அங்கயே தங்கின. அப்போது எங்கிருந்தோ வந்த கல் ஒன்று மன்னரின் தலையை தாக்கியது.காயத்தில் இருந்து குருதி வடிவதை கண்ட அமைச்சரும் ஏனையோரும் மன்னரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.காவலர்கள் கல் எறிந்தவனை தேடி சென்றனர். அப்போது சோலையிலிருந்த மாமரத்தின் கீழ் மாம்பழம் தின்று கொண்டு இருந்த வழிப்போக்கன் ஒருவன் கண்ணில்பட்டான்.அவனே கல்லை வீசி இருக்க வேண்டும் என்று முடிவு செய்து அவனை அரண்மனைக்கு அழைத்து சென்று மன்னர் முன் நிறுத்தினார்கள்.

வழிப்போக்கன் ஒன்றும் புரியாததுபோல் திகைத்து நின்றான். இந்த மனிதனை ஏன் அழைத்து வந்தீர்கள் என்று மன்னன் அமைச்சரிடம் வினவினான்.அதற்கு அமைச்சர் அரசனே உங்கள் தலையில் கல் வீசியவன் இவனே என்றார். வழிப்போக்கன் அரசனை பார்த்து பெருமானே, நான் பசியால் வாடிக்கொண்டு இருந்தேன். மரத்தில் பழங்கள் தொங்குவதை கண்டு தொலைவிலிருந்து கல் வீசினேன் என்றான்.

மரத்தின் மீது கல் வீசிய உனக்கு என கிடைத்தது என மன்னன் கேட்டான்.அதற்கு அவன் இரண்டு பழங்கள் கிடைத்தன என்றான்.மன்னன் சற்று நேரம் ஆழமாக சிந்தித்தான். பின்னர் அவர் அமைச்சரை பார்த்து இந்த வழிப்போக்கனை தண்டனையில் இருந்து விடுவியுங்கள் என்றார்.அமைச்சர் குழம்பிப்போனார். மன்னன் அமைச்சரிடம் குழம்ப வேண்டாம் நான் காரணத்தை சொல்கிறேன் என்று விட்டு கூறினார். அந்த அறிவே இல்லாத மரம் தன் மேல் கல் எறிந்ததற்தாகாக இரு பழங்களை கொடுத்த போது நான் என் மேல் பட்ட கல்லிற்காக தண்டனையோ கொடுப்பது என்று பல செல்வங்களை அவனுக்கு கொடுத்தார்.

பிரட்க்மன் - யாழ் இந்து கல்லூரி

# மூன்று தண்டனைகள்

இந்தப் பூமியில் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் அனைவருக்கும் தீங்கு செய்வதை மட்டுமே எண்ணுவான்.இதனால் இவன் இறந்தவுடன் நன்றாக உலகத்திற்குச் சென்றான். அங்கே எம தர்ம ராஜா அவனைப் பார்த்து உனக்கு மூன்று வகையான தண்டனைகள் சொல்கிறேன். அதில் விரும்பியதை நீ செய்யலாம் என்று கூறினார். அதற்கு அவனும் சரியென்று தலை அசைத்தான். உடனே அங்கிருந்த கிங்கரனொருவனை அழைத்து, அவனுக்கு மூன்று தண்டனைகளை காட்டுமாறு எம தர்ம ராஜா ஆணையிட்டார். அச் சமயம் முதலாவது அறைக்குள் அவன் சென்ற போது அங்கே எல்லாரும் தலை கீழாக நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். ஒவ்வொருவர் முகத்திலும் வலியின் அவஸ்தை பிரதி பலித்தது. ஐயோ இக்கொடுமை எனக்கு வேண்டாம் என அந்த அறையை விட்டு ஓடினான். இரண்டாவது அறையைக் காட்டிய போது அங்கே எல்லோரும் பனிக்கட்டியால் தமது உடலை மூடிய படி படுத்திருந்தனர். அவர்கள் பனிக்கட்டியின் குளிர்ச்சியில் சில்லென்று நடுங்கி கொண்டிருந்தனர். ஒரு நிமிடம் அந்த வேதனையைப் பார்த்து அவன் கண்ணிலிருந்து கண்ணீரே வந்து விட்டது. ஐயோ இதுவும் வேண்டாம் என மூன்றாவது அறைக்குச் சென்றான். அங்கே எல்லாரும் சுதந்திரமாகக் காபி குடித்துக் கொண்டு அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். ஆஹா! இதுவல்லவோ இடம் சொர்க்கம் சொர்க்கம் என்று கத்திய படி இங்கயே நான் இருந்து விடுகிறேன் என்று தன் முடிவையும் சொல்லி விட்டான். நீங்கள் இந்தக் குழுவில் சேர்ந்து கொள்ளலாம் என அனுமதி அளிக்கப் பட்டது. அவன் சந்தோசமாக உள்ளே நுழைந்தான். ஒரு கப் காபி வாங்கி சுவைக்கக் கையிலெடுத்தும் அங்கிருந்த ஒரு எஜமானரின் குரல் ஒகே! உங்களது காபி இடைவேளை உடைந்து விட்டது நீங்கள் அனைவரும் தீக் குவியலை கையிலெடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பிக்கலாம். என்கிறார் இதைக் கேட்டதும் இதற்கு முதலாவது அறையே மேலானது. நான் தவறான அறையை தேர்ந்தெடுத்து தவறு செய்து விட்டேன் என்று பின்னரே புரிந்தது. அதே போல் நாமும் தீர ஆராய்ந்த பின்னரே முடிவுகளை எடுக்க வேண்டுமென்பது இக்கதை மூலம் புலனாகிறது.

**கு.தர்சனன் - தரம் - 10C**
**யாழ். இந்துக் கல்லூரி.**


த.கஜீபன் - தரம் 10C
யாழ். இந்து கல்லூரி

# தெரிந்த தொழில்

ஓர் ஊரில் அக்பர், பீர்பால் என்ற இருவர் வாழ்ந்து வந்தனர் .ஒரு நாள் அக்பர் பீர்பாலிடம் இந்த ஊரில் பலர் செய்யும் வேலை எது என்று கேட்டார். அதற்கு பீர்பால் இந்த ஊரில் பலர் செய்யும் தொழில் வைத்தியத் தொழில் என்றார். அதற்கு அக்பர் இங்கு வந்த வருத்தங்களை தீர்க்கவே யாரு இல்லை ஆனால் அப்படி இருக்கும் போது எவ்வாறு வைத்தியத்தொழில் என்று கூறுகிறீர், இதை உம்மால் நிரூபிக்க முடியுமா என்றார்.

அடுத்த நாள் காலை பீர்பால் கையில் பெரியதொரு கட்டு ஒன்றை போட்டு வந்தார்.அதற்கு வழியில் ஒருவர் பார்த்துவிட்டு இது இவ்வாறு வைத்திருந்தால் கையை இழக்க நேரிடும் என கூறி மருத்துவ வழிகள் சிலவற்றை கூறினார். மற்றும் வழிகளில் காணும் அனைவரும் பலவாறான மருத்துவ வழிகளை கூறினர்.

அப்போது அரண்மனைக்கு வந்த பீர்பாலிடம் அக்பர் என்ன நடந்தது என வினவினார். அதற்கு பீர்பால் கை உடைந்துவிட்டது என கூறினார். வழிகளில் பலரும் பல உபாயம் கூறினார் என்றார். அரசரான அக்பர் அதை விடும் நான் சொல்லும் வழியை பின்பற்றும் என கூறினார்.

அதற்கு பீர்பால் சிரித்தார். அக்பர் ஏன் சிரிக்கிறீர் என கேட்டார். அதற்கு பீர்பால் நேற்று எல்லோருக்கும் தெரிந்த தொழில் எது என்று கேட்டீர்கள் அதற்கு நான் விளக்கம் அழித்தேன் என கூறினார். அதற்கு அக்பர் பீர்பாலை பாராட்டினார்.

# காகக் குஞ்சுக் கல்யாணம்

தா தெய்யத் தா தெய்யத்
தா தெய்யத் தா தா
தா தெய்யத் தா தெய்யத்
தா தெய்யத் தா தா

இரண்டு காகக் குஞ்சுகள்
இருந்து பேசி மகிழ்ந்தன
அரவம் கேட்ட பறவைகள்
அங்கே வந்து சேர்ந்தன!

பெற்று வளர்த்த காகங்கள்
பேசிச் சத்தம் செய்தன!

உற்றார் உறவுக் காகங்கள்
ஒன்றாய்க் கூடி வந்தன!

பேச்சு வார்த்தை நடந்தது
பாய்ந்து கத்தித் தத்தின
போற்றும் முடிவு கல்யாணம்
கூச்சல் மத்தியில் முடிவாச்சு!

காகம் நடந்து கரைந்தன
கண்ட குயில்கள் கூவின
மேகம் திரண்டு மோதின
மயிலும் சேர்ந்து ஆடின!

மரங் கொத்தி வாத்தியம்
மரத்தில் தட்டி முழங்கின
குரங்குக் கூட்டம் கூத்திட
கொண்டைக் கிளார் பாடின!

கண்ட தவளைக் கூட்டங்கள்
கண்டம் வாத்தியம் இயம்பின
கொண்டைச் சேவல் மயிலோடு
கதகளி ஆட்டம் போட்டன!

**கேணிப்பித்தன்**


பி.சாருகன் தரம் 2
சென்.ஜோன்ஸ் பொஸ்கோ
வித்தியாலயம்

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** **Sunday the 30th of January 2022**

**We welcome students' articles in word for publication**
**-Editor-**
kalaikkathiredu@gmail.com


















12th Jaffna International Trade Fair held on 21st to 23rd at the Jaffna Esplnade in which various Commercal Institutions participated.









Inaugration of Smart Class Rooms for all Grade 06 Divisions at Jaffna Hindu College Sponsored by1998 A/L Batch of students held on 21st January 2022.



The inaugural 44th batch of students, for the academic year 2020/2021 was welcomed by the Faculty of Medicine, University of Jaffna. The Inauguration Ceremony was held 24th January 2022 at the Hoover Auditorium under the prevailing Covid-19 guidelines.

## Casuarina Beach Jaffna



Jaffna Peninsula has a dedicated number of excellent beaches. Casuarina Beach is among the most impressive beaches in Jaffna, it is also known as Cashoorina and is located in Karainagar, on an average 20 Kms far from the town Jaffna and would hardly take minutes to drive here. One can wander a long walk in the dark blue water with gentle waves stirring the land upwards. The beach is located on the north side of Karativu island, is peninsula's biggest island that is joined to the continent over a highway.

The beach allegedly received its name because of the Casuarina Trees are planted beside the beach. The coast has a beautiful color with shallow water where no waves can move a lengthy space approaching the sea and a remarkably safe area to have a dip. The sailor in the city use sort of a flatboat built out of wooden timbers which favors a full boat ducked in half. These are utilized to fish in shallow lakes and go around prawn fields in the sea. The seashore itself is pretty distinctive to regular Sri Lankan beaches. Since this is a trendy beach near Jaffna, you notice some stores here with handicrafts and food.

## Charty Beach



Charty Beach is a white sand beach that is not so far from Jaffna. It will hardly take 30 minutes to cover up this 15km distance to reach at Charty Beach from Jaffna, the central city of North provides an impressive landscape to the remote area. The beach is arched & in the mini Island of Northern Region known as Velanai and few times, it also recognized as kayts.

Although the region was separated for 30 years due to civilian battle but appears to be a great holiday address with many resorts today. The beach is bordered with palmyrah, coconut, and various other species besides the beach. The sunny climate and sandy bank of the Charty/Chaddy pull travelers. Stay cabins, and dressing rooms are accessible for the guests across the beach. Charty is a calm, beautiful place to relax the mind and lose the crowd. The beach water combines with the calm flurry to entertain the bather.

Beaneries and eateries are located across the beach where the tourists can prolong their amusement. The peaceful Charty beach is an excellent holiday destination where anyone can experience moments of joy and happiness with their friends and family.

**Be a good person. But don't waste time proving to everyone - No Name**

# SYMPATHY

***BY CHARLES MACKAY***

I lay in sorrow, deep distressed;
My grief a proud man heard;
His looks were cold, he gave me gold;
But not a kindly word.

My sorrow passed - I paid him back
The gold he gave to me;
Then stood erect and spoke my thanks
And blessed his charity.



I lay in want, and grief, and pain;
A poor man passed my way;
He bound my head, he gave me bread,
He watched me night and day.


How shall I pay him back again
For all he did to me?
Oh, gold is great, but greater far
Is heavenly sympathy.



# A Time to Talk

***Robert Frost***

When a friend calls to me from the road
And slows his horse to a meaningful walk
I don't stand still and look around
On all the hills I haven't hoed
And shout from where I am "What is it?"
No, not as there is a time to talk.
I thrust my hoe in the mellow ground
Blade-end up and five feet tall
And plod : I go up to the stone wall
For a friendly visit.







# Importance of Micro-Organism

A micro organism or microbe is an organism of microscopic size, which can be only seen through a microscope which is unicellular and multi cellular. The possible existence of unseen microbial life was suspected since the ancient times. The scientific study of micro organisms began with their observation under microscope in the 1970s by Antonic Van Leeuwan Hoek. In the 1870s, Louis Paster found that micro organisms caused food spoilage in the 1880s Robert Kach discovered that micro -organisms caused diseases such as tuberculosis, cholera and diphtheria and lot more discoveries were made and being continued by scientists up to date.


Micro-organisms can have very different habitats and can live everywhere from the poles to equator, deserts, rocks, volcanos, deep ground and deep sea, some of them are adopted to thrive in extreme conditions such as very hot or very cold conditions. high pressure and as micro organism is believed to be the first living being on the earth.

Micro-organisms are important in human culture and health in many ways, serving food and to produce fuel enzymes and other bio activity compounds. Bacteria, Algae, fungi, or Fungal species, protozoa and Virus are main groups of micro organism. Yeast, Amoeba, Chlamydomonas, Paramecium are some of the example for micro organisms

Production of curd, production of cheese and diary products, production of antibiotic and vaccines, bakery products, production of vinegar and alcohol, making food (mushrooms), making compost, pest control, production of biogas and coir industry are a few to name.

The instances where micro organisms are used are of many types. Micro organisms have intimate symbiotic relationships with other larger organisms and can cause damage to the host organism. Micro organism tend to have relatively fast rate of evolutions and preproduction.

# Parts of Plants




**Roots:**

Roots are the most important part of a plant as they are responsible for transferring the necessary nutrients to the plant. They are the agents responsible for delivering water and minerals to the plants. Besides that, they are also the active support system of plants without which the plants would fail to stick to the soil. Moreover, they are also responsible for saving up food for later use for the plants.

**Stems:**

Stems are also support systems for the plants. Their main function is to act as delivery agents for the nutrients and water stored in the roots and transferring them to the other plant parts in the form of glucose. Stems also transfer food from the leaves to the other parts of the plant.

**Leaves:**

Leaves are a fundamental part of a plant as all the necessary food for the plants are stored in the leaves. A special part about leaves is that they are designed for the process of photosynthesis which contributes to the process of making food in the leaves.

**Flowers:**

Flowers are known as the reproductive products of plants. They are mostly responsible for producing fruits. The process is like this- the ovules present in the flowers get fertilized and produces fruit. They also contain pollen which helps in the pollination of the flower. After the combined process of fertilization and pollination, the ovules get transformed into a fruit.

**Fruits:**

Fruits are the products of reproduction in plants. The most essential component from which reproduction starts, that is the seed, is present in the fruit. Therefore, they act as a protective layer for seeds.

**Seeds**:

Seeds are the main agents for reproduction. They can be found most commonly in fruits from where they germinate and develop into new plants.

**Parts of Plants and Their Functions**

The Function of Roots: Roots have the most crucial function of absorbing water and minerals from the soil. Another of their most fundamental functions is to act as a support system for the plant so that it stands upright on the ground. Other secondary functions of roots include storing food for future use and regulating the growth of plants.

The Function of Stems: The function of the stem is to produce fruit, flowers and leaves. A primary function of the stem is to provide a foundational structure and protection to the plant. Another notable function of the stem is to aid in the vegetative reproduction of plants. Stems protect the plants from grazing animals by transforming their axillary buds into thorns. In hot and humid areas like deserts, there are a few plants whose stems are capable of transforming themselves into broad and pudgy structures. Such stems are capable of storing a huge amount of food for future purposes and prevent the excess loss of water.

**In Summary**

Plants are vital components of the environment that require food to live just like human beings.

A plant is comprised of different parts where each part has a unique function to perform.

The different parts of a plant include roots, stems, leaves, flowers, seeds and fruits.

Roots have the function of absorbing water and minerals from the soil whereas the primary functions of stems are supporting, transporting, storing and reproducing.

Leaves form a vital component of plants as food for plants is prepared in them. Leaves are capable of performing photosynthesis and transpiration.







ரி. ரதுசான்
யாழ். இந்து கல்லூரி

# யானைகள்

**யானை இனங்கள்**

1) ஆசிய யானை
2) ஆபிரிக்க புதர்வெளி யானைகள்
2) ஆபிரிக்க காட்டு யானைகள்

55 மில்லியன் வருடங்களுக்கு முன்னால் இயோசின் காலத்தில் ஆபிரிக்காவிலும், ஆசிய, ஐரோப்பா, தென் அமெரிக்கப் பகுதிகள் மற்றும் சில தீவுகளில் மட்டுமே காணப்படுவதில்லை. ஆனால் தற்போதைய உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகின்ற தரைச் சுழற் தொகுதிகளில் யானைகள் காணப்படுகின்றன.

**American Mastadom (Mamat American), woolly Mamooth (mamoothus S.P)** போன்றவை சரித்திரத்திற்கு முன் வாழ்ந்த யானைகளின் முன்னோர்களாகும். இவற்றிலிருந்தே தற்போது காணப்படுகின்ற **Elephas Maximus Loxodonto aficana** யானைகள் தோன்றின.

**ஆசிய யானைகள்**

ஆசிய யானைகள் மூன்று உப இனங்கள் உள்ளன. அவை இலங்கையில் காணப்படும் **Elephas Maximus** ஆசியாவின் பிரதான நிலங்களில் காணப்படும் **Elephas Maximus Indicus** மற்றும் சுமத்திராவில் காணப்படும். **Elephas Maximus** பொதுவாக எல்லா யானைகளும் ஏறத்தாழ 70 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.

# கல்விக்கதிர்



- அகரன் -

## மரங்களைப் பாதுகாப்போம்



வி .செந்தூரன் - தரம் - 10C
யாழ். இந்து கல்லூரி

ஒரு ஊரில் கண்ணனும் அவனுடைய தம்பி கஜனும் அருகருகே தமது குடும்பத்தோடு தமது வீடுகளில் வாழ்ந்து வந்தனர். அவர்களில் கண்ணன் தனது தோட்டத்தில் உள்ள மரங்களை வளர்ப்பதற்காக தனது நேரத்தை செலவழித்தான், ஆனால் அவனுடைய தம்பி கஜன் தனது வீட்டின் பின்புறத்தில் உள்ள மரங்களை வெட்டி அதனால் கிடைக்கும் மரக்கட்டைகளை கடையில் கொண்டு சென்று விற்று வந்தான்.

இப்படியே நாள்கள் சென்று கொண்டிருக்க ஒரு நாள், கஜன் தனது அண்ணன், கண்ணனைப் பார்த்து அண்ணே! ஏன் நீ இவ்வளவு கஷ்டப்பட்டு மரங்களுக்கு தண்ணீர் ஊற்றி அவற்றுக்குப் பசளையிட்டும் உனது வாழ்வினை ஏழையாகக் கழிக்கிறாய், ஆனால் என்னைப் பார் நான் ஒரு நாளுக்கு எவ்வளவு பணத்தை உழைக்கிறேன் தெரியுமா? என ஏளனமாகக் கூறினான். இப்படியே நாள்கள் சென்று கொண்டிருக்க, சில மாதங்கள் கழித்து தம்பியான கஜனிடம் இருந்த எல்லா மரங்களும் அழிந்து விட்டன. அதனால் அவனுக்கு பணம் கிடைக்காமல் போனது அதனால் அவன் தன் அண்ணனிடம் சென்ற போது, தம்பியே! நீ அன்று எனக்கு கூறியதை நினைத்துப் பார், நான் இன்று பல மரங்களை நட்டு அதனால் கிடைக்கும் பணத்தால் இன்றும் நான் எனது வாழ்க்கையை எளிமையாக வாழ்கின்றேன். ஆனால் நீயோ மரங்களைப் பாதுகாக்காது அவற்றை அழித்ததால் இன்று அதனுடைய பலனை அனுபவிக்கிறாய், என் அண்ணன் கஜனுக்கு கூறினான் எனவே நாமும் மரத்தை நட்டு பயனைப் பெறுவோமாக.

# பிரதேச வழக்குச் சொற்கள்

**நாம் அன்றாடம் பயன்படுத்தும் சொற்களுக்கு ஒவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள வழக்கில் (நியம வழக்கு) உள்ள சொற்கள்.**

**வடக்குப் பிரதேச வழக்கு**

காத்து – காற்று
தேள்வை – தேவை
கிழிஞ்ச – கிழிந்த
கறடி – கரடி
இண்டைக்கு – இன்றைக்கு
இதிலை – இதிலே
புத்தகம் – பொத்தகம்
காய்பிஞ்சு – மரக்கறி
மோன – மகன்

**கிழக்கு பிரதேச வழக்கு**

தரவை – ஆழங்குறைந்த நீர்ப் பகுதி
துரவு – சிறு கேணி
மறுகா – பின்பு , பிறகு
மனே – மகனே
பத்தை – பற்றை
களவெட்டி – சூட்டுக்களம்

**தென்னிலங்கை பிரதேசவழக்கு**

பசுந்து – அழகு
ஆணம் – சொதி
பெறகு – பின்பு

**மேற்கு பிரதேச வழக்கு**

அன்ன – அன்னம்
பொன்ன – பொன்னை

**மலையகப் பிரதேசவழக்கு**

வெரசா – விரைவாக
ஸ்ரோர் – தொழிற்சாலை
மடுவம் – கொழுந்து நிறுக்குமிடம்
காடி – மாடு



விஷ்ணுப்பிரியா ஸ்ரீகாந்தன்

## புதுமையான பூந்தோட்டம்

**வண்ண வண்ணப் பூக்கள் வாசம் வீசும் தோட்டம்
சின்னச் சின்னப் பூக்கள் சிரிக்கும் நல்ல தோட்டம்
கண்ணைக் கவரும் அழகோடு கனிந்த மரங்கள் இருக்குது
மண்ணையும் விண்ணையும் இணைக்கவே கொடிகள் பாலம் அமைக்குது**

**பள்ளி செல்லும் பிள்ளைகள் போல் மல்லிகைகள் சிரிக்குது
முத்துப் பற்கள் காட்டி முல்லை புன்முறுவல் பூக்குது
மண்ணில் ஒரு ஆதவன் போல் சூரியகாந்தி ஒளிருது
பாரிஜாதம் வீசும் வாசம் எல்லோரையும் இழுக்குது**

**கதிரவனின் வருகை கண்டு தாமரை தாளம் போடுது
நிலாப் பெண்ணின் நினைவினாலே நீல அல்லி தவிக்குது
தேனைத் தேடும் வண்டுகள் தென்றலிலே மிதக்குது
விந்தையான தோட்டமிது அனைவரையும் அழைக்குது**

**வண்ண வண்ண பூக்கள் காண சிறார்கள் ஓடி வாருங்கள்
கண்நிறைக்கும் பேரழகை வியந்து மகிழ்ந்து பாடுங்கள்
தோட்டக்கார மாமா நல்ல இளநீர் வெட்டித் தந்திடுவார்
இனிமையான அதை அருந்தி ஆடி விளையாடுங்கள்**

## ஒத்த கருத்துச் சொற்கள்

**அங்காடி - சந்தை
அகதி - கதியற்றவன்
அச்சம் - பயம்
அஞ்சலி - வணக்கம்
அடவி - காடு
அடிசில் - உணவு
அணங்கு - தெய்வப் பெண்
அண்மை - சமீபம்
அதரம் - உதடு
அந்தம் - முடிவு
அக்கினி - நெருப்பு
அழகு - எழில்
அபாயம் - ஆபத்து
அப்பு - நீர்
அமர் - போர்
அம்புயம் - தாமரை
அலுவல் - வேலை
அவனி - பூமி
அறம் - தர்மம்
அறிவாளி - அறிஞர்
அன்னம் - சோறு
ஆசை - விருப்பம்
ஆவி - உயிர்
இடுக்கண் - துன்பம்
இரை - உணவு
இறப்பு - மரணம்
இறுதி - முடிவு
ஈகை - கொடை
அமைதி - அடக்கம்**

சி. ஜனுஜன்
யாழ்ப்பாணம்
இந்து கல்லூரி

## புல்லாங்குழல்



நீ.கஜானன்
யாழ்ப்பாணம் இந்து
கல்லூரி

புல்லாங்குழல் முரளி,வேணு எனும் வட மொழிப் பெயர்களாலும் குழல் எனும் தனித் தமிழ்ப் பெயராலும் அழைக்கப்படுகிறது.

இது வாத்தியங்களில் இரண்டாவது இடம் வகிக்கிறது (வீணை, வேணு, மிருதங்கம் )

தாரதந்திரம் எனப்படுவது ஸ்வர துளைகளிலே உயர் ஸ்தாயி கொண்ட துளை ஆகும்.

மொத்தமாக 9 துளைகள் காணப்படுகின்றன. இதில் வாய் வைத்து ஊதும் துளை ஒன்றும் தார தந்திரத் துளை ஒன்றும் ஏழு ஸ்வரங்களைக் கொண்டது.

MODEL EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECT TO SCHOOL FOR THE AWARD OF BURSARIES.

## மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை

வினாத்தாள் ஆக்கம்
புலமைப்பாதை ஆசிரியர்
திரு.சு.அஜீந்தன் - BA

## வினாத்தாள் - II

1 மணித்தியாலம்

சுட்டெண் : .........




**01. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்குப் பந்தியிலிருந்து தெரிவு செய்து விடை எழுதுக.**

அண்மையில் வெளிவந்த பத்திரிகைச் செய்தியொன்றில் பெரிய காட்டுமிருகமான யானையும் பெரியகடல் மீனினமான திமிங்கிலமும் மனிதர்கள் பயன்படுத்திய பிளாஸ்டிக் பொலித்தீன் போன்றவற்றை உட்கொண்டமையினால் இறந்தன எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையை அறிந்திருப்பாய் என நினைக்கின்றேன். நீர் நிலைகளில் கைவிடப்படும் பிளாஸ்டிக், பொலித்தீன்களால் நீர் மாசுபடுவதுடன் நீரோட்டமும் தடைப்படுகின்றது. இதனால் நோய்கள் பரவுகின்றன.

1. பெரிய மீனினம் ஒன்றை தருக? ........................................................
2. பெயரடைமொழி சொல்லை தருக? ....................................................
3. இலகுவில் அழியாத பொருட்கள் இரண்டு தருக? .................................
4. மீனினமான என்பதை பிரித்து எழுதுக? ................................................
5. நோய் பரவ காரணமாக அமைவது எது? .............................................
6. தகவல் என்பதன் ஒத்தகருத்து சொல்லை தருக? ....................................

**02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி ......... ந்தன. (ஒளி, ஒலி, ஒலி)

(ii) காடுகளை ............ப்பதினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது. (அலி, அளி, அழி)

03. இளமைப் பெயர்களை எழுதுக.

(i) மூங்கில்: .......................... (ii) பலா : .....................

04. பொருத்தமான வினைச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i)அந்திவானம் செந்நிறமாகக் ................................ (காணப்பட்டது, காணப்பட்டன)

(ii) அணில் மாமரத்தில் ....................... (ஏறியது, ஏறியன)

05. தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியத்தினை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

நான் இலங்கை வங்கிக்குச் சென்றேன்.

..............................................................................................................

06. சரியான விடையினை எழுதுக.

வண்டு இரையும் என்பது போல குருவி ........................................................

07. சுருக்கக்குறியீட்டின் விரிவை எழுதுக.

இ.பெ.கூ: ..........................................................................

08. விழாக்களை எழுதுக.

(i) எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா :
..............................................................................................

(ii) ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா:
..............................................................................................

09. மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.

(i) தட்டிக்கொடுத்தல்
..............................................................................

10. பழமொழியினைப் பூர்த்தி செய்க.


உண்ணாச் சொத்து ................................................................

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) Road: ............................ (ii) Friday: ......................


12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)



................................

(ii)



................................

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) name / My/ Ravi / is : ...............................................

(ii) am / to / I / school/giong : ...............................................

14. 'வசிகிலிய கொஹேத' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

..............................................................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

'தண்ணீர் தாருங்கள்' ..............................................................

16. தரப்பட்டுள்ள எண்களில் உருவாக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக.

| 5 0 4 6 |
|---|

...................................................................

17. தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள இடைவெளியில் வரவேண்டிய எண்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| 1425 | 4226 | 5651 |
| 2318 | 1318 | i. .................. |
| 3743 | 5544 | ii. |

18. தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

5370, 8450, 8355, 5737 : .....................................................


19. இடைவெளியில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

47, 43, ......... , 35, 31

15, 21, 27, .......... , 39


20. வகுப்பு ஒன்றில் 46 மாணவர்கள் உள்ளனர். அவ்வாறான 4 வகுப்புக்களில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது? : ........................................

21. தனுவின் ஜனவரி மாதச்சம்பளம் ரூபா 20645.00 உம், பெப்ரவரி மாதச் சம்பளம் ரூபா 21025.00 ஆகும். ஜனவரி மாதச் சம்பளத்தை விட எவ்வளவு ரூபா பெப்ரவரி மாதத்தில் அதிகமாகும்? : .........................................




22. நிழற்றப்பட்ட குற்றியின் நீளம் யாது?...................................

23. நீளம் பாய்தல் போட்டியில் குமார் 1m 45cm தூரம் பாய்ந்தான். ஹரி 1m 68m தூரம் பாய்ந்தான். இருவரும் எவ்வளவு தூரம் பாய்ந்தார்கள்? : ..........................



24. இங்கே காட்டப்பட்டிருக்கும் நேரத்தை விட 1 மணித்தியாலம் 30 நிமிடங்களின் முன்னதாகவே பரீட்சை தொடங்கியது. பரீட்சை தொடங்கிய நேரம் யாது? : ............................................

25. 1 லீற்றர் 500 மில்லிலீற்றர் தண்ணீருக்கு, 800 மில்லிலீற்றர் பழச்சாறு சேர்த்து ஒரு பழப்பானம் தயாரிக்கப்படுகின்றது. தயாரிக்கப்பட்ட பழப்பானத்தின் அளவு யாது? ............................................

26. 2km 700 வீதிக்கும், 1km 800m தூரமுடைய வீதிக்கும் கார்பேட் போடப்படுகின்றது. இரண்டு வீதியினதும் மொத்த நீளம் யாது?................................................

27. தந்தை ஒருவர் தனது மகனுக்கு 1/3 பங்கு நிலத்தை தனது மகளுக்கு கொடுத்தார். மகளுக்கு கொடுத்த காணியானது 65 பேர்ச் அளவு உடையது. தந்தையிடம் இருந்த மொத்த காணியின் அளவு யாது? ......................................................

28. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருட்கள் | வாங்கிய அளவு | 1kg இன் விலை | விலை |
|---|---|---|---|
| அரிசி | 3kg | 77.00 | 231.00 |
| தேங்காய் | 2 | 55.00 | (1) ................ |
| தேயிலை | 250g | ................ | 90.00 |
| | | மொத்தம் | (2) ............... |

29. ஒரு கேக்கின் 2/3 பங்கை 8 பேருக்குக் கொடுக்கலாம். எல்லோருக்கும் சம அளவில் கேக்கை கொடுத்தால் எத்தனை பேருக்கு கேக் கொடுக்கலாம்?

..............................................................................................................

**(மிகுதி அடுத்த வாரம்)**


புதிய கல்வியாண்டு - 2022
LEARN EASY - KNOWLEDGE IS POWER - www.learneasy.lk
ZOOM வகுப்புக்கள்
Grade 2 - O/L
Medium
TAMIL / ENGLISH
ICT Maths English Commerce
Tamil History Science Sinhala
Learn Easy வெளியீடு புலமைவளரி
Call: 76667 4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 2 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk



# விவசாயி

- குளத்தூரான் -

# உலர் புல்



ஆக்கம் - நிரோஜா சத்திவேல்.
மாணவி, NVQ தரம் 6
யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்.





### அறிமுகம்

கால்நடை உணவாகப் புல் அநேகமாக பச்சையாகவே பயன்படுத்தப்படுகின்றது. எனினும் சரியான நேரத்தில் வெட்டப்பட்டு சரியான நேரத்தில் உலர்த்தப் பட்ட புல்லை கால்நடை உணவாகப் பாவிக்கமுடியும். இப்புல் உலர்புல் என அழைக்கப்படும். பச்சைப் புல்லில் 20 - 25% உலர் பொருள்கள் அடங்கியுள்ளதுடன் அது உலர் புல்லின் 75 - 80% ஆக உள்ளது. எனவே பச்சைப் புல்லில் இருந்து 50 - 60% ஆன நீர் வெளியேற்றப்படுகின்றது.

நம் நாட்டுப்பண்ணையாளர் மத்தியில் உலர் புல் பாவனை பிரபல்யம் அடையவில்லை. ஆனால் மற்றைய நாடுகளில் உலர் புல் பரவலாகப் பயன் படுத்தப்படுகின்றது. எந்தப்பிரதேசமாக இருந்தாலும் உலர் காலங்களில் புற்களுக்குத் தட்டுப்பாடு ஏற் படுவதுண்டு. இதற்குக் காரணம் இயற்கையான புல்



வளர்ச்சி மழை வீழ்ச்சியிலேயே முக்கியமாகத் தங் கியிருப்பதாகும். ஆகையால் நம் நாட்டிலும் கூட புல் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் உலர் புல் தயா ரித்து சேமித்து வைத்தால் புல் தட்டுப்பாடான காலங் களில் அதனைப் பயன்படுத்த முடியும்.

நன்கு சூரிய ஒளி கிடைக்கக் கூடிய சுவாத்திய நிலையே உலர் புல் தயாரிப்பதற்கு உகந்தது. எனினும் தூறல் மற்றும் மழையுள்ள காலங்களிலும் கூட உலர் புல் தயாரிக்கும் முறைகள் உள்ளன. உலர் புல் கன்றுகளுக்கும் மற்றும் சினைப்பசுக்களுக்கும் உகந்த உணவு ஆகும். கன்றுகளுக்கு உலர் புல் கொடுப்பதனால் அவற்றின் இரைப்பையில் செலுலோசு சமிபாடடையச் செய்யும் பற்றீரியாக்களின் பெருக்கம் ஆரம்பமாவதுடன் இரைப்பையின் விருத்தியும் நன்கு நடைபெறும்.

### உலர் புல் தயாரிக்கும் வெவ்வேறு முறைகள்

* திறந்த வெளியில் உலர் புல் தயாரித்தல்.
* ஆரம்ப இறாக்கை முறை.
* வேலி முறை.
* முக்காலி முறை.

### உலர் புல் தயாரிப்பின் நன்மைகள்

* புல்லைப் பாதுகாக்கும் முறைகளில் சிறிய அளவிலான பண்ணையாளர்களுக்கு உலர் புல் தயாரித்தல் சுலபமானதும், இலாபகரமானதுமாகும். இதற்கு விரயமாகும் காலமும், சிரமமும் குறைவானதே இதற்கான பிரதான காரணமாகும்.
* மிகவும் குறைந்த அளவிலான புல்லிலும் கூட உலர் புல் தயாரிக்க முடியும்.
* உலர் புல்லில் அதிகளவிலான உலர் பொருள்கள் உண்டு. ஆனால் அதிகளவு உலர் பொருள்களாக மாற்றம் பெறும் போது அதன் போசணைத் தரம் மிகவும் சொற்ப அளவிலேயே குறைவடைகின்றது.

### உலர் புல் தயாரிப்பதற்கு புல்லை உலர்த்தும் முறை

உலர் புல் தயாரிக்கும் படிமுறைகள்

* புல்லை அறுவடை செய்தல்.
* வயலிலே அவற்றைப் பரப்பி அல்லது மர ராக்கை, கம்பி பட்டம் போன்றவற்றில் அடுக்கி மூன்று நாள் களுக்கு உலரவிடுதல்.
* ஊரிய முறையில் உலர்த்திய புல்லை இரு கைகளாலும் பிடித்து முறுக்கும் போது இலகுவாக முறியாமலும் புல்லிலிருந்து நீர் வடிதலும் நடைபெறாது.
* உலர்த்திய புல்லை இறுக்கமான பிடிகளாகக் கட்டி களஞ்சியப்படுத்திக் கொள்ளல்.
* உரிய முறையில் தயாரித்து சேமித்த உலர் புல்லை 6 - 8 மாதங்கள் வரை வைத்திருக்க முடியும்.

### உலர் புல் பாவனை உள்ளூர் பண்ணையாளர்கள் மத்தியில் பிரபல்யம் அடையாமைக்கான காரணம்

* புல் மேலதிகமாகக் கிடைக்கும் காலமாயினும் இப் பாதுகாப்பு முறைக்காக அதிகளவு நேரத்தையும் சிரமத்தையும் செலவிட வேண்டியுள்ளது.
* உலர் புல்லை கற்றையாக்கல் களஞ்சியப்படுத்தல் போன்றவற்றிற்கு மேலதிக உபகரணங்கள் போன்றவற்றின் தேவை ஏற்படல்.
* உலர் புல் தயாரித்தல் பற்றிய அறிவு பண்ணையாளர் மத்தியில் இல்லாமை.
* மழைக்காலங்களில் உரிய முறையில் புல்லை உலர்த்த முடியாமல் போவதும் அவற்றில் பூஞ்சணம் ஏற்படலும்.

### சைலேஜ்

* புல் அவரையின தாவரங்களின் மற்றும் விலங்குகளுக்கு உணவாகக் கொடுக்கக் கூடிய இலை, குழைகளை காற்றின்றிய சூழலின் கீழ் நொதிக்க வைத்துப் பெறப்படுவது சைலேஜ் ஆகும்.
* லக்டோபசிலஸ் (Lactobacillas) பற்றீரியாக்கள் இதற்காக பயன்படுத்தப்படும்.
* தரத்தை அதிகரிப்பதற்கு மேலதிக பொருள்களை சேர்க்க முடிவது பயனுள்ளதாகும்.

### சைலேஜ் தயாரிக்கும் முக்கிய படிமுறைகள்

* புல்லை அறுவடை செய்து துண்டுகளாக வெட்டுதல் வேண்டும்.
* துண்டுகளாக வெட்டிய புல்லை படை படையாக அடுக்கி பீப்பாவில் இருந்து காற்று வெளியேறும் படி அமுக்க வேண்டும். (இதற்காக 200லீற்றர் அளவுடைய பீப்பாக்களைப் பாவிப்பது உகந்தது)
* வெட்டிய புல்லை நிரப்பி அமுக்கும் போது இடை இடையே மேலதிக போசணைக்கலவையை (சீனி, யூரியா, கனியுப்புக்கலவை போன்றவை) சேர்த்தல் வேண்டும்.



100 கி.கிராம் பச்சைப் புல்லுக்கு 1 கி.கிராம் சீனி, 500 கிராம் யூரியா மற்றும் 500 கிராம் கனியுப்புக் கலவை போதுமானது.

* புல்லை மீண்டும் நன்கு அமுக்கி பாத்திரத்தை மூடுதல் வேண்டும்.

45 - 60 நாள்களில் சைலேஜ் ஆக தயாராகிய புல்லை விலங்குகளுக்கு ஊட்ட முடியும். பாத்திரம் பாதிப்படையாமல் இருக்குமாயின் அவற்றைத் திறக்காமல் நீண்ட காலம் வைத்திருக்க முடியும்.

### பிளாஸ்டிக் பீப்பாயில் தயாரிக்கப்பட்ட சைலேஜ்

புல் (பசுந்தீவனம்) பாதுகாப்பின் நோக்கம்

* மேலதிகமாக கிடைக்கும் புல்லை எதிர்காலத்தில் பயன்படுத்தல்.

(மழைக்காலங்களில் கிடைக்கும் மேலதிக புல்லை வரட்சியான காலங்களில் பாவனைக்கு எடுத்தல்.)

* புல்லின் தரத்தை மேலும் உயர்த்தல்.

(உ+ம் :- சைலேஜ்)

* விலங்குகளுக்கு உணவின் சுவையை அதிகரித்தல்.

(உ+ம் :- சைலேஜ்)

* குறைந்த எடையில் அதிகளவு உலர் பொருளை ஊட்ட முடிதல்.

(உ+ம் :- உலர் புல்)








- இனியா -

# மணத்தக்காளியின் மருத்துவக் குணங்கள்



மணத்தக்காளி வியர்வையையும், சிறு நீரையும் பெருக்கி உடலிலுள்ள அழுக்கை அகற்றி உடலைத் தேற்றுகின்ற செய்கையை செய்கிறது. சமையலில் மணத்தக்காளி கீரையை பல வகைகளில் பயன்படுத்தலாம். அது சளியை நீக்குவதோடு இருமல், இரைப்பு முதலியவைகளிலிருந்தும் குணம் தரும். வாயிலும், வயிற்றிலும் உண்டாகும் புண்களை ஆற்றும் தன்மையும் இதற்கு உண்டு. மணத்தக்காளியின் இலை, காய் பழம், வேர் போன்றவற்றை ஊறுகாயாகவும், வற்றலாகவும், குடிநீராகவும் செய்து உண்டு வந்தால் நோய்கள் நீங்கி உடல் வன்மை பெறும்.

மணத்தக்காளி இலையை இடித்து சாறு எடுத்து 35 மி.லி. வீதம் தினம் மூன்று வேளை அருந்தி வர உட்சூடு, வாய்ப்புண் முதலியவை நீங்கும். சிறுநீரை வெளியேற்றும். தேகம் குளிர்ச்சியாகும். உடல் வசீகரம் ஏற்படும்.

மணத்தக்காளி இலைகளை பறித்து, தேவையான அளவு நெய்யுடன் சேர்த்து வதக்கி கொள்ள வேண்டும் பின்னர் துவையல் செய்து சோற்றுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண் குணமாகும்.

பசுமையான இலைகளை மென்று சாற்றை விழுங்கலாம். இதே போல் ஒரு நாளைக்கு 5 முதல் 6 இலைகளை பச்சையாக மென்று சாப்பிட்டால் வாய்ப்புண் வேகமாக குணமாகும்.

மணத்தக்காளி இலை சாற்றை 5 தேக்கரண்டி அளவில் தினமும் 3 வேளைகள் குடித்து வந்தால் உடல் உஷ்ணம் குறையும். நாக்குப்புண்,குடல்புண் குணமாக, மணத்தக்காளி இலையை ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்து கொள்ள வேண்டும். இவ்வாறு சாப்பிடும் போது அதிக காரம் சேர்க்கக்கூடாது.

நாக்கு சுவையின்மை, வாந்தி உணர்வு ஆகியவற்றை போக்கும் தன்மை மணத்தக்காளி வத்தலுக்கு உள்ளது. எனவே கர்ப்பிணிப் பெண்கள் குறைந்த அளவில், தினமும் இந்த வத்தலை உணவுடன் சேர்த்துக் கொண்டு சாப்பிட்டு வரலாம். மார்பு சளி இளகி வெளிப்படவும், மலச்சிக்கல் குறையவும் மணத்தக்காளி வத்தல் பயன்படுகிறது.

## மணத்தக்காளி வறை செய்யும் முறை

**தேவையான பொருள்கள்**

மணத்தக்காளி கீரை – 4 கப்
வெங்காயம் – 15 (நறுக்கியது)
சிவப்பு மிளகாய் – 4
வறுத்த நிலக்கடலை – 1/4 கரண்டி
உப்பு – தேவையான அளவு
துருவிய தேங்காய்
நல்லெண்ணெய் – 2 கரண்டி
கடுகு – 1/2 கரண்டி
உளுந்தம்பருப்பு – 1/4 கரண்டி
சீரகம் – 1/2 கரண்டி
கறிவேப்பிலை

**செய்முறை**

முதலில் கீரையை தண்ணீர் விட்டு நன்கு கழுவி கொள்ள வேண்டும்.

தாச்சியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், அதில் கடுகு, உளுத்தம்பருப்பு, சீரகம் சேர்த்து தாளித்து, கறிவேப்பிலை, வெங்காயம் மற்றும் மிளகாய் சேர்த்து நன்கு பொன்னிறமாக வதக்க வேண்டும்.

பின்னர் அதில் வெட்டி வைத்துள்ள மணத்தக்காளி கீரை சேர்த்து நன்கு வதக்க வேண்டும். அத்துடன் தேவையான அளவு உப்பு மற்றும் சிறிது தண்ணீர் சேர்த்து நன்கு வதக்க வேண்டும். கீரை நன்கு வெந்தவுடன் அதனுடன் வறுத்த நிலக்கடலை, சிறிது துருவிய தேங்காய் மற்றும் கறிவேப்பிலை போட்டு கிளறி இறக்கினால், மணத்தக்காளி கீரை சுவையுடனும் மணமுடனும் சாப்பிட இனிமையாக இருக்கும்.



## பிரண்டையின் மருத்துவமும் சிறப்பும்



பிரண்டை சதைப் பற்றான நாற்கோண வடிவமான தண்டுகள் கொண்ட, பொதுவாக ஏறுகொடி அமைப்பில் வளரும் தாவரம். மலர்கள் பச்சை கலந்த மஞ்சள் நிறமானவை. கனிகள் சிவப்பு நிறத்தில் உருண்டை வடிவமானவை, விதைகள் வழவழப்பானவை.பிரண்டைச் சாறு உடம்பில் பட்டால் அதிகமான அரிப்பும் நமைச்சலும் ஏற்படும். வேர், தண்டு ஆகியவை அதிகமான மருத்துவப் பயனுள்ளவை. தண்டு கார்ப்புச் சுவையும், வெப்பத் தன்மையும் கொண்டது.

பிரண்டையில் சாதாரண பிரண்டை, சிவப்பு பிரண்டை, உருட்டுப்பிரண்டை, முப்பிரண்டை, தட்டைப் பிரண்டை எனப் பல வகைகள் உள்ளன. சாதாரண பிரண்டை எனப்படும் நான்கு பட்டைகளைக் கொண்ட பிரண்டை அதிகமாகக் காணப்படும் வகையாகும்.

பிரண்டையில் இருந்து சாறு எடுத்து 6 தேக்கரண்டிஅளவுசாற்றுடன்ஒருதேக்கரண்டி நல்லெண்ணெய் கலந்து காலையில் மட்டும் ஒரு வாரம் சாப்பிட்டு வர மாதவிடாய் ஒழுங்காக வரும் பிரண்டைத் துவையலைக் குழந்தைகளுக்குத் தொடர்ந்து கொடுத்து வர எலும்புகள் உறுதியாக வளரும். மேலும், எலும்பு முறிவு ஏற்பட்டால் உடைந்த எலும்புகள் விரைவாகக் கூடவும் இது உதவுகிறது. பிரண்டையை நன்கு காய வைத்து தூளாக்கி வைத்துக் கொண்டு நீரில் குழைத்து எலும்பு முறிவுள்ள பகுதியில் பூசி வரலாம்.பிரண்டையின் வேரை உலர்த்தி பொடி செய்து வைத்துக் கொண்டு காலை, மாலை வேளைகளில் பத்து கிராம் அளவு சாப்பிட்டு வரவேண்டும். வஜ்ரவல்லி என்கிற பெயர்க் காரணம் உடைந்த எலும்புகளை ஒட்ட வைக்கும் பிரண்டையின் குணத்தினாலேயே ஏற்பட்டது.

அடிபட்ட வீக்கம் குணமாக பிரண்டையிலிருந்து சாறு எடுத்து புளி, உப்பு சேர்த்து காய்ச்சி பொறுக்கும் சூட்டில் அடிபட்ட இடத்தில் மேல் பூச்சாகப் பற்றுப் போட வேண்டும்.உடலைத் தேற்றும், பசியைத் தூண்டும், மாதவிலக்கைத் தூண்டும், மந்தம், குன்மம், இரத்தக் கழிச்சல், அஜீரணம் ஆகியவற்றைக் குணமாக்கும்.

## பிரண்டை துவையல்





**தேவையானவை**

**நார் நீக்கி துண்டுகளாக்கிய பிரண்டை - அரை கப்**
**தேங்காய் துருவல் - கால் கப்**
**காய்ந்த மிளகாய் - 6**
**புளி - சிறு அளவு**
**பூண்டு - 2 பல்**
**நல்லெண்ணெய் - 2 கரண்டி**
**உப்பு - தேவைக்கேற்ப.**

**செய்முறை**

*தாச்சியில் எண்ணெய் விட்டு, கொடுக்கப்பட்டுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் சேர்த்து (உப்பு நீங்கலாக) வதக்கவும். ஆறவிட்டு உப்பு சேர்த்து, சிறிதளவு தண்ணீர் விட்டு கெட்டியாக அரைத்துக் கொள்ளவும்.*

*பிரண்டை எலும்புக்கு பலம் தரும். பசியின்மை, வாய்க் கசப்பு போக்கும்.*

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir



# மரணத்தின் தூது

திருக்கோவில் கவியுவன்



பாகம் 03

ஒலி மிக அருகில் கேட்டது. என் மனைவியைச் சூழ்ந்திருந்த துப்பாக்கிகள் எல்லாம் ஒவ்வொரு திசையில் பதுங்கிக் கொண்டன. என்னை மிரட்டியவன் என்னிடம் வந்து,'பெரியவரே இங்கே நிற்க வேண்டாம் எப்படியாவது நழுவி ஓடி விடுங்கள்' காதில் குசுகுசுத்து விட்டு ஒரு மூலையாய்ப் பார்த்து ஓடிப் போனான். நான் மனைவியைத் திரும்பிப் பார்க்கிறேன். அவள் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எந்தவொரு முயற்சியும் செய்வதாக தெரியவில்லை என்னைப் பார்த்து மட்டும் ஏதோ கையசைத்தாள். என்னை அழைக்கின்றாளா? இல்லை என்னை ஒடிப் போகச் சொல்கிறாளா? கை அசையும் திசையைப் பார்த்தால் என்னை ஓடிப்போகச் சொல்வது போல தான் இருக்கிறது. 'ஓடுங்கள்! ஓடுங்கள்' என்பது போல் சத்தம் இல்லாத உச்சரிப்புகளின் அசைவு தெரிகிறது. அவள் விழிகளில் ஓர் ஏக்க உணர்வு தெரிகிறது. 'நீங்களாவது தப்புங்களேன்' என்ற கெஞ்சல் தெரிகிறது. அவளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே என் வீட்டுக் கூரையில் ஒடு ஒன்று உடைந்து துண்டு ஒன்று என் காலடியில் விழுந்தது. வெளியே சத்தங்கள் குறைவது போலவும் பின் திடீரென கூடுவது போலவும் ஒரு பிரமை, 'ஓடு!ஓடு.!என் உள்மனம் ஓலமிடுகிறது. நான் ஒடத்தான் வேண்டும். ஓடித்தப்பத்தான் வேண்டும். என் மனைவிக்கு ஆறுதல் சொல்ல, அவள் துன்பக் கடலினுள் முழுவதும் மூழ்கிப் போகுமுன் கரை சேர்க்க ஓடத்தான் வேண்டும். ஓடித்தப்பத்தான் வேண்டும். பின்வாசல் கதவைத் திறந்து கொண்டு அசுர வேகத்தில் ஓடுகின்றேன். சாபமிட்டுத் துரத்தும் நாகங்கள் போல் என்னைத் தொடரும் ரவைகள், கை, கால், தலை, முதுகு, முதுகுத்தண்டு எங்கும் ஒரே குறுகுறுப்பு. எதுவும் காயப்படலாம். எந்தவேளையும் காயப்படலாம். வலது காலில் முள்ளோ எதுவோ ஒன்று குத்தியது. வலியைப் பார்க்கும் போது குத்தியது கள்ளி முள் ளாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. இங்கே எப்போது கள்ளி முளைத்தது? அது எப்போதோ முளைத்துத் தான் இருக்கிறது. காலை வைத்தது என் தவறுதான். வலியையும் பொருட்படுத்தாது ஓடுகிறேன். கோழியின் எச்சம் போல் ஏதோ ஒன்று என்பாதத்தில் அப்பியிருப்பதை உணர்கிறேன். புரிந்து கொண்டேன். என்பாதத்தில் இருந்து குருதி கொட்டப்பட்டிருக்கின்றது. அந்தக் குருதியில் மண் ஒட்டப்பட்டிருக்கின்றது. அதுதான் அங்கே கோழியின் எச்சம்போல.

மாஸ்ரர் மாஸ்ரர்

மிகவும் குறைந்த ஸ்தாயியில் ஒரு குரல் என்னை அழைப்பது போல் இருக்கிறது. காதலனின் ரகசிய அழைப்பில் மருண்டு போய் வெருண்டு போய் பார்க்கும் காதலி போல சத்தம் வந்த திசையில் என் பார்வை திரும்பியது. அங்கே தாடியினுள் புதையுண்டு போன ஒரு கறுப்பு உருவம் ஆபிரகாம் லிங்கனை நினைவு படுத்துவது போல் ஒரு வரட்டுச் சிரிப்புடன் என்னைக் கைகாட்டி அழைத்தது.

பற்களை மட்டும் இலக்காகக் கொண்டு நான்நடக்கிறேன். அந்த உரு அணிந்திருக்கும் உடையும் கறுப்பாகத் தான் இருக்க வேண்டும். 'பளிச் செனத் தெரியும் பற்களைப் போல் சில வெள்ளைப் பொத்தான்களும் தெரிகிறது. நான் நெருங்க நெருங்க என்னை அழைத்த உருவத்தின் முகம் கொஞ்சம் கொஞ்சமாய் தெரிகிறது. எங்கோ பார்த்திருக்கிறாய்! பார்த்திருக்கிறாய்!' மனம் நச்சரித்தது. எங்கேயென்று தெரியவில்லை. முடிந்தவரை உறங்கிக் கிடந்த என் ஞாபகப்படுத்தலைத் தட்டியெழுப்பினேன். என் வாழ்க்கைப் புத்தகத்தை அவசர அவசரமாய்ப் புரட்டிப் பார்த்தேன் தோல்விதான் எஞ்சியது. 'என்ன மாஸ்ரர் என்னைத் தெரியவில்லையா, நான் உங்கட ரமேஷின் சினேகிதன்' மர்ம உரு என்னிடம் நம்பிக்கையை வளர்ப்பதற்காக தன்னை முந்திக் கொண்டே அறிமுகம் செய்தது. நான் எதுவும் பேசவில்லை. எதைப் பேசுவேன்? உன்னைப் பார்த்திருக்கிறேன் எங்கேயென்று தெரியவில்லை என்று என் மறதியை ஒப்புக்கொள்வேனா? அல்லது, என் மகனின் நண்பன் என்கிறாயே, என் மகன் மரணித்தது உனக்குத் தெரியாதா என்று என் துக்கத்திற்கு தூசுதட்டுவேனா? 'நீங்க ஏன் பேசாமல் இருக்கிறியள் என்று தெரியும் மாஸ்ரர் ரமேஷின்ரை மறைவ எங்களாலேயே ஜீரணிக்க முடியல்ல. நீங்க எப்பிடி.' அவன் சொல்லி முடிக்கவில்லை. மௌனமானான். அந்த மௌனத்தினூடே அவனிடமிருந்து விசும்பல் கேட்டது. அழுகிறானா?

(தொடரும்)



# இலக்கிய நயம்

யாழ். மகன் சைந்தலி


உண்மையாக காதலிக்கும் போது ஆண்களுக்கு தன் காதலி தேவதைபோல் தான் காட்சி அளிக்கிறாள். அவளின் ஒவ்வொரு அசைவும் ஓராயிரம் கவிதைகளை சொல்கிறது, அவளின் நெருக்கம் சுகமாக இருக்கிறது, சிறிய பிரிவும் பெரிதாக வலிக்கிறது. கோபமும் சின்ன ஊடலும் கூட சுவையாகத் தான் இருக்கிறது. காதலில் விழும் போது ஒருவனின் இதயம் வேலை செய்யத் தொடங்குகிறது, ஆனால் அவன் மூளை வேலை செய்வதை நிறுத்தி விடுகிறது, இதனால் தான் உலகில் உள்ளோர் காதல் பித்து பிடித்தவன் என்று கூறுகின்றனர். இப்படி காதலியின் நெருக்கத்தை உணர்ந்து காதல் பித்தேறிய தலைவன் கூறும் அழகான பாடல் இது குறுந்தொகையில் வருகிறது.

**ஒடுங்கு ஈர் ஓதி ஒள் நுதற் குறுமகள்**
**நறுந் தண் நீரள் ஆர் அணங்கினளே**
**இனையள் என்று அவட் புனை அளவு அறியேன்**
**சில மெல்லியவே கிளவி**
**அனை மெல்லியல் யான் முயங்குங்காலே**

அதாவது அழகாக ஒடுங்கிய அடர்த்தியான கூந்தலை உடையவள், பிறை போல் வளைந்த வாசனை நெற்றியை உடைய சின்னப் பெண், சுவையான குளிர்ந்த நீரைப் போன்றவள் என் தலைவி , அவளைப் பிரிந்தால் வருத்தம் தருகிறாள், அவள் இப்படிப்பட்டவள் தான் என்று எனக்கு சொல்லத் தெரியவில்லை , அவளைப் பற்றி சொல்ல வார்தையில்லை. கொஞ்சம் தான் பேசுகிறாள், ஆனால் திரும்ப திரும்ப அவள் பேச்சை கேட்க வேண்டும் என்று தோனுகிறது, அணைக்கும் போது மென்மையான இலவம் பஞ்சால் செய்யப்பட்ட தலையணை போல் மென்மையாக இருக்கிறாள் என்று கூறுகிறான் .

அதாவது ஒரு ஆடவனுக்கு உள்ள ஐம்புலன்களும் பெண்ணால் சுகப்படுகிறது என்று இந்தப் பாடல் அழகாகக் கூறுகிறது. தலைவியின் கூந்தலை காண்பது கண்ணுக்கு விருந்தாகவும், அவளின் வாசனை நெற்றியை உச்சி நுகர்தல் மூக்கிற்கு இன்பமாகவும், சுவையான குளிர்ந்த நீர் போல் இருக்கும் அதரம் சுவைக்க இன்பமாகவும், அவளின் சுவையான பேச்சு காதுக்கு இன்பமாகவும், அவளின் மென்மையான உடலை கட்டித் தழுவுவது உடலுக்கு (மெய்யுக்கு) இன்பமாகவும் இருப்பதாக இந்த பாடல் கூறுகிறது, அவளின் நெருக்கம் இன்பத்தையும் பிரிவு துன்பத்தையும் தருகிறது என்று குறுந்தொகை பாடல் அழகாக கூறுகிறது .

# நிலாந்தினி செந்தூரனின் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் வரலாறும் வழமைகளும் - நூலாய்வு




ஒரு சமூகம் தன் பண்பாட்டையும், நம்பிக்கைகளையும் அடையாளப்படுத்த முனையும் போது அங்கு ஆலயம் துளிர்விட்டுத் தழைக்கின்றது. பண்பாடும், நம்பிக்கைகளும் என்ற இரு எளிமையான சொற்களுக்குள் ஒரு சமூகத்தின் மிகப் பெரிய தொன்மம் வித்துக்களாக புதைந்திருக்கும். இந்திய ஞான மரபுகளில் கிளர்ந்தெழுந்த ஆலயங்கள் நெஞ்சுருகி ஆணவங்களைக் கரைத்து முத்திக்கு வழிதேடும் கூடங்கள் என்ற மனச்சித்திரமே நமது பொது பண்பாட்டில் உண்டு. ஆனால், அங்கு தான் இசையும் நாட்டியமும் செவ்வியலாகின. பக்தி இலக்கியங்கள் தமிழுக்கு செறிவூட்டின. சிற்பங்கள் பேச ஆரம்பித்தன. கட்டடக் கலையின் பெருமையாக கோபுரங்கள் உயர்ந்து நிமிர்ந்து நிற்கத் தொடங்கின.

மலைகள், நதிகள், விருட்சங்கள் என இயற்கையோடு ஒட்டியதாக எழுந்த ஒவ்வொரு தலங்களும் மானுட வரலாற்றையும், சிந்தனைகளையும் உரத்துக் கூவத் தொடங்கின. விருட்ச வழிபாடு சைவ நெறிக்குள் உள்வாங்கப்பட்ட காலத்தில் இருந்து ஆலயங்கள் பல விருட்ச அடைமொழியுடன் சேர்த்து அழைக்கும் மரபும் உருவாகத் தொடங்கியது.

இந்து வழிபாட்டு மரபில் ஒவ்வொரு மூலவரும், தலங்களும் விருட்சங்களினால் அடையாளப்படுத்தப்படுவது பொது வழக்காகியது. ‘கொக்கட்டிச் சோலை’ தான்தோன்றீஸ்வரம் விருட்சத்தினால் அடையாளப்படுத்தப்படும் கிழக்கின் தொன்மை மிகு ஈஸ்வரமாகும்.

இதுவரை வெளிவந்த இலங்கைத் தல வரலாற்று ஆய்வுகளில் அநேகமான ஆலய வரலாறுகள் செவ்வியலாக்கம் பெறவில்லை. இதற்கு மரபு வழிச் செய்திகளையும் புராண இலக்கியங்களையும் வரலாற்று ஆவணங்களாக கையாள்வதில் மிக நுட்பமான திறன் தேவைப்படும்.

இல்லையேல் ஆய்வுகள் வரலாற்றின் பக்கங்களைத் தடையுடைத்து முற்றிலும் பக்தியின் பக்கம் சாய்த்துவிடும். புராணங்களும், இதிகாசங்களும் சைவ நெறிகளையும், அறநெறிகளையும் பாமர உள்ளங்களுக்குள் எடுத்து துரைக்கப் பயன்பட்ட இலக்கியச் சித்திரங்களாகும். எனவே தல புராண இலக்கியங்களில் இருந்து வரலாற்றுச் சான்றுகளைத் கட்டமைக்கும் போதும் இந்த எச்சரிக்கை உணர்வு அடிப்படை அறிவாக அவசியமாகின்றது.

மிக நீண்ட காலமாக இலங்கை வரலாறு ஒரு கோட்டோவியமாக பெரு வரலாற்றையே பேசுகின்றது. அநேகமான வரலாற்றாய்வுகளில் சிற்றூர்களும், சிறு தலங்கள், குளங்கள் அதிகம் கவனிக்கப்படுவதில்லை. சிற்றூர்கள் பெரு வரலாற்றோடு இணையும் போது தான் தேச வரலாறு மக்களோடு நெருக்கமடையும். தங்கள் காலடிபட்ட மண்ணின் தொன்மங்களை அம்மக்கள் உணரும் போது அகவெழுச்சி கொள்வார்கள். அந்த மண் அடிமைப்பட்டிருந்தால் அதன் தொன்மத்தை மீட்க போரிடுவார்கள். அதன் வழியாக தங்கள் அடையாளங்களை தக்க வைக்கத் துடிப்பார்கள். இதுவே இதுவரை நடந்த உலகப் போர்களின் வேர்களில் பிறந்த கதைகள். இந்த வரிசையில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமும் அடங்குகின்றது.

இந்நூல் தல வரலாற்றில் இருந்து மண்ணின் வரலாற்றைத் தேட முற்படுகின்றது. அதன் வழியாக நம் முன்னோர்களின் கதையைப் பேச முயல்கின்றது.

வரலாற்று ஆய்வாளர்கள் இதை நுண்வரலாற்றியல் ஆய்வு எனக் கூறுகின்றார்கள். சிறு அலகுகள் வழியாக பெரு வரலாற்றை செறிவுபடுத்தும் முயற்சி தமிழுக்கு இப்போது தான் அறிமுகமாகின்றது.

இலங்கை வரலாற்றாய்வாளர்களில் வெகு சிலரே நுண்வரலாற்றியலில் ஆர்வம் காட்டுகின்றார்கள். சிற்றூர்களையும், தலங்களையும் பெரு வரலோற்றோடு இணைக்கும் போது பிரதேச வரலாறு மாத்திரமன்றி பெரு வரலாறும் செறிவூட்டப்படுகின்றது. நுண்வரலாற்றியலில் அதன் உச்சத்தை தொட்டிருக்கின்றார் திருமதி நிலாந்தினி செந்தூரன்.

இந்நூலில் கொக்கட்டிச் சோலை திருபடைப்பத்ததி இன்னும் முழுமையான வரலாற்று வாசிப்புக்கு உள்ளாகவில்லை என்ற ஆசிரியரின் ஆதங்கம் ஆழமான கவனத்தை ஈர்க்கின்றது. குறிப்பாக அவர் ஒப்பிட்டுக் குறிப்பிடும் கோணேசர் கல்வெட்டு வரலாற்றாய்வுக்கு உட்பட்டதன் மூலமே கோணேஸ்வரத்தின் மரபுகளும், வழக்காறுகளும் உயிர்ப்படைந்தன.

13ஆம் நூற்றாண்டில் இருந்து நமது பண்பாட்டில் தல புராணங்கள் வழியாக வரலாற்றைப் பதிவு செய்தல் பெரு வழக்காக தொடங்கியது. ஆக, கொக்கட்டிச்சோலை ஈஸ்வரத்தின் உண்மை வரலாறு மீட்டெடுக்கும் போது சமூகமும் தலமும் நெருக்கமடையும். பொதுவாக நாம் ஆல யங்களின் பரிணாம வளர்ச்சி, தோற்ற அமைப் புகள் குறித்த மிக எளிமையான புரிதல் கூட இல்லாமல் வாழ்கின்றோம். சைவ ஆலயங்க ளின் தோற்றமும் வளர்ச்சியும் இந்திய பெரு நிலப்பரப்பில் முகிழ்விட்ட காலங்களில் இலங்கை மண்ணிலும் தளிர்த்திருக்கவேண் டும். இன்றைய வளர்ச்சியை பல்லவர், சோழர் காலத்தில் இருந்து தெளிவாக அவதானிக்க முடியும். அவ்வாறே தேர்களின் பரிணாம வளர்ச்சி சோழர்காலத்தில் உச்சத்தை அடைந்திருக்க வேண்டும். எனினும் பேராசிரியர் சி.பத்மநாதன் இந்த ஆலயத்தின் இன்றைய கட்டடத் தோற்றக்காலம் பதின்மூன்றாம் நூற்றாண் டுக்கு உரியது எனவும் இலங்கையில் உள்ள தேர்களில் மிகப் புராதனமானது என்ற இந்த ஆலயத் தேர்கள் என வரலாற்றுச் சான்றளிக் கின்றார்.

தல இலக்கியங்களின் மையச் சரடான இதிகாசங்கள் சார்ந்த வரலாறும், மக்களிடையே புழங்கு வழக்காறுகளும் பக்திமயமான சித்திரத்தையே மக்களுக்கு அளித்துவிடுகின்றது. அநேகமாக அவை கேள்விகளுக்கும் உட்படுத்தப்படுவதில்லை. ஆலயங்களைச் சார்ந்தே பெரு நகரங்கள் மாத்திரமன்றி சிற்றாலயங்களும் எழுந்தன. மட்டக்களப்பின் தனித்துவத்திற்கு ஆலயங்கள் அளித்துள்ள மகத்தான பங்களிப்புக்கள் ஊர்தோறும் ஆராயப்பட வேண்டும்.

இந்நூலில் மன்னர்கள், பொதுமக்கள் அளித்த நிலதானங்கள் ஊர்க்கொடைகள் ஆகியவற்றின் செய்திகளை எடுத்து தல வரலாற்றுடன் ஆசிரியர் பிணைக்கின்றார். பின்னிணைப்பு அளிக்கும் தகவல்கள் இவை. இந்நூலில் உள்ள சிறப்பான கூறு என்பது அரசர்களை மட்டுமல்ல பெரும்பாலான தேசத்து வன்னிமைகளையும், பொதுமக்களையும் தொகுத்து நிலாந்தினி விரிவாகச் சொல்லிச் செல்கிறார் என்பது தான். இது இயல்பு வாத வரலாற்றின் மற்றொரு எல்லையாகப் பார்க்க முடியும். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர வரலாற்றைப் பற்றிய ஓர் ஒட்டுமொத்த மனச் சித்திரத்தை அடைய விரும்புபவர்களுக்கு மிக ஆதாரமான நூல் நிலாந்தினி செந்தூரனின் இந்த ஆக்கம்.

**ஆய்வு: கலாநிதி. கனகசபாபதி சரவணபவன்**





## கலைக் கதிர்

# எழுத்துத் துறையிலும் கலைத் துறையிலும் அதிக நாட்டம் காட்டிய தருமு சிவராமு

திருகோணமலையில் 1939 ஆம் ஆண்டு பிறந்த தர்மலிங்கம் சிவராமலிங்கம் என்ற தருமு சிவராமு, இ.கி.ச. இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் காலத்திலிருந்தே எழுத்துத் துறையிலும், கலைத் துறையிலும் அதிக நாட்டம் காட்டிய இளைஞராகக் காணப்பட்டார்.

சிவராமு, தன் மாணவப் பருவத்திலிருந்து எழுதத் தொடங்கினாலும் அவரை இலக்கிய உலகிற்கு அறிமுகமாக்கிய பெருமை, சி.சு.செல்லப்பாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த எழுத்து சஞ்சிகையையே சாரும்.

தனது இருபதாவது வயதில் நான் எனும் தலைப்பில் இவர் எழுதிய கவிதை முதன்முதலில் வெளிவந்தது எழுத்து எனும் சஞ்சிகையிலாகும்.

பிறேமிள், தருமு, ஆரூப் சிவராம், பானுச் சந்திரன், பானு, அஜித்ராம் என்ற பல்வேறு புனைப் பெயர்களில் இவர் எழுதிய போதும் ‘தருமு சிவராமு’ என்ற பெயரே பிற்காலத்தில் பிரபல்யம் பெற்றது.

இவர் கவிதைத் துறையில் அதிக நாட்டம் கொண்டது மட்டுமல்லாமல் விமர்சனம், நாடகம், சிறுகதைக் கட்டுரையென பலதளங்களில் தனது ஆற்றலைக் காட்டி வந்தார். அதுமட்டுமன்றி சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளிலும் தனது திறமையைக் வெளிக்காட்டி வந்துள்ளார். 1960களில் எழுத்து, நடை, ஞானரதம், செய்தி, வீரகேசரி, தினகரன் ஆகியவற்றில் எழுதி தன்னை வெளிப்படுத்திக் கொண்டவர் சிவராமு.

புதுக் கவிதைக்கு செழுமையும் அர்த்தமும் சேர்த்த இவர் படிமக் கவிஞராக புகழ் பெற்றார். தனிமனித முறுகல்களும், உடைந்து போன மனக் குமுறல்களும் இவர் கவிதையில் வெளிப்படுவதைக் காணலாம்.

**கடலும் சுருங்கும்**
**நெருப்பும் தடுமாறும்**
**காற்றின் விரல்களும்**
**வெறும் வெளி வீணையில்**
**பேசாமல் மடங்கும்**
**வானத்தில் பரிதியே நின்று**
**கிணற்றுள் தன்பிம்பத்தை**
**பட்டம் விட்டாலும்**

இவர் எழுதிய நூல்களாவன கைபிடியளவு கடல் (கவிதை), மேல் நோக்கிய பயணம் (கவிதை)

குறுநாவல் நூல்களான - லங்காபுரி ராஜா, ஆயி.

விமர்சன நூல்கள் – விமர்சன ஊழல்கள், தமிழின் நவீனத்துவம், விமர்சன மீட்சிகள்

நவீன நாடகம் – படிமம், தியனதாரா, நட்சத்திரவாஷி

கட்டுரை நூல்கள் – கண்ணாடியுள்ளிருந்து, சிறிலங்காவின் தேசிய தற்கொலை.

சிவராமு திருகோணமலையிலிருந்து 1972ஆம் ஆண்டு புலம்பெயர்ந்து விட்டமையால் இவர் ஈழத்தைச் சேர்ந்தவர் என்ற உண்மை மறைந்து விட்ட போதும், சிவராமு என்னும் தலைசிறந்த கவிஞனையும், விமர்சகனையும், நாடக முன்னோடியையும் பெற்றெடுத்த பெருமை திருகோணமலையையே சாரும்.

வாசிப்பையும், எழுத்தையும் தவிர வேறெந்த வேலையையும் தன் வாழ்வில் செய்திராத, ஒருநாளில் 24 மணிநேரத்தையும் கவியாகவே வாழ்ந்து கழித்த சிவராமுவின் கடைசி நாள்கள் பற்றிய தகவல்கள் திகிலூட்டுவதாகவே அமைந்தன. மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு, தன்னுடைய அறையில் கவனிக்க யாருமின்றி கிடந்த போது, அவரை சூழ கவிந்திருக்கக் கூடிய தனிமையும், அமைதியும் நட்சத்திரங்களை விட நிறையவே பேசும் அவற்றிடையேயுள்ள இருளை விடப் பயங்கரமானாக நிசப்தம் இருக்கும் என்று தோன்றுகிறது என சேரன் குறிப்பிட்டிருந்தார்.

**க.மங்களேஸ்வரி**

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir



# மரணம் என்பது வாழ்க்கையின் கசப்பான உண்மை

யாழ் மகள் சைந்தவி

எல்லோரும் ஒருநாள் இறக்கப்போகிறார்கள். எனவே உங்கள் குடும்பத்தை ஒருபோதும் அலட்சியமாக எடுத்துக் கொள்ளாதீர்கள் – இறப்புதான் எல்லா பயங்களுக்கும் அடிப்படை.

இறப்பு இல்லையென்றால் பயம் என்பது இருக்காது, ஏனென்றால் துண்டு துண்டாக வெட்டினாலும் நீங்கள் இறக்க போவதில்லைதானே. ஆனால் பயம் கொள்வதற்கு என்ன இருக்கிறது? மரணம் என்பது ஒரு அற்புதமான விடயம். பல விடயங்களை அது முடிவுக்கு கொண்டு வருகிறது.

தற்போது நீங்கள் இருக்கும் நிலையில் அதை ஒரு கொடுமையான வியம் என்று நினைக்கலாம். ஆனால் 1,000 வருடங்கள் வாழக் கூடிய நிலையில் நீங்கள் இருந்தால் மரணத்தை ஒரு விடுதலையாக நினைப்பீர்கள்.

நீண்ட காலம் இங்கே இருந்தீர்கள் என்றால் நீங்கள் எப்பொழுது கிளம்புவீர்கள் என்று மற்றவர்கள் யோசிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

எனவே மரணம் என்பது ஒரு பெரிய விடுதலை, என்ன அது அகாலமாக நிகழக் கூடாது, அவ்வளவுதான். உலகில் ஏதோ ஒன்றை உருவாக்கும், ஏதோ ஒன்றில் பங்களிக்கும், ஏதோ ஒன்றை நிகழச் செய்யும் திறனோடு இருக்கும் பொழுது நாம் இறந்து போக விரும்புவதில்லை.

சரியான நேரத்தில் இறந்து போக விரும்பினால், யோகப் பயிற்சிகள் செய்தால் உங்கள் மரணம் எப்பொழுது சம்பவிக்க வேண்டும் என்பதை நீங்களே நிர்ணயம் செய்யலாம். இல்லையென்றால், ஒரு புறா இறந்து கிடப்பதை பார்த்தாலும் உங்களின் இறந்து போகும் தன்மை நினைவுக்கு வரும்.

நேற்று பறந்து கொண்டிருந்த ஒன்று இன்று இல்லை, இறந்து விட்டது. உங்களுக்கும் ஒரு நாள் அதே நிலைதான் என்று கற்பனை செய்வது பயம் தருவதாக இருக்கலாம். ஏனென்றால் நீங்கள் எதை எல்லாம் சேகரித்து வைத்திருக்கிறீர்களோ அவற்றுடனான உங்கள் அடையாளம் அந்த அளவுக்கு ஒரு நிர்பந்தமாக மாறிவிட்டது.

நீங்கள் சேகரித்த அடையாளம் என்று சொல்லும் பொழுது, நீங்கள் சுமந்து கொண்டிருக்கும் இந்த உடல் இந்த பூமியின் ஒரு சிறு துண்டுதான். மண்ணை சேகரித்து நீங்கள் உருவாக்கிய இந்த உடல் மற்றும் அடையாளங்கள் எந்த அளவு வலுவாகி விட்டது என்றால், அதை இழப்பது என்பது இப்போது ஒரு கொடுமையான வியமாகத் தெரிகிறது.

உதாரணமாக நீங்கள் அதிக உடல் எடையோடு இருந்து, உங்களை ஒரு 10 கிலோ எடை குறைக்க உதவினால், அதை கொடுமையான வியம் என்று நினைத்து அழுது கொண்டிருப்பீர்களா? நிச்சயம் இல்லை. 10 கிலோ குறைந்தால் அது மக்களுக்கு ஒரு பரவசமான விடயம் தான். இதேபோல் மொத்தம் 50, 60 கிலோவையும் உதறினால் அதில் இழப்பதற்கு என்ன இருக்கிறது? வாழ்க்கையை நீங்கள் அதன் போக்கில் உணர்ந்திருந்தால், உங்கள் சேகரிப்புகளில் நீங்கள் தொலைந்து போகாது இருந்தால், உடலை விடுவது என்பது பெரிய விடயமாக இருக்காது.

இறந்த பறவையின், பூச்சியின், நாயின், மனிதனின் உடல் என்பது மண் மீண்டும் மண்ணுக்கு போவது. இதில் பெரிய நாடகம் ஒன்றும் இல்லை. இது ஒரு இயற்கையான நிகழ்வு. நீங்கள் எடுத்துக் கொண்டதை திருப்பி கொடுத்து மறுசுழற்சிக்கு வழி செய்ய வேண்டும். உங்கள் பிறப்பு, வாழ்க்கை, இறப்பு உங்களுக்கு மிக முக்கியமானதாக இருக்கலாம். ஆனால் பூமித் தாயை பொறுத்த வரை அது ஒரு மறுசுழற்சிதான். அது உங்களை வெளியே தள்ளி மீண்டும் உள்ளே இழுத்துக் கொள்கிறது. உங்களை பற்றி நீங்கள் பலதும் நினைத்துக் கொள்ளலாம். ஆனால் வாங்கியதை திருப்பிக் கொடுத்தாக வேண்டும், அது ஒரு நல்ல பழக்கம்தானே. யாரிடம் இருந்தாவது ஏதாவது வாங்கினால், ஒரு காலகட்டத்தில் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். மரணம் என்பது ஒரு நல்ல பழக்கம்தான்.

இறந்தபின் நம் உடல் அடிப்படை சேதன (organic), அசேதன (inorganic) மூலக்கூறுகளாக மண்ணில் உள்ள உயிரிகளால் சிதைக்கப்படும்.

பின்னர் இந்த மூலக்கூறுகள் பிற உயிரிகளின் உடலில் சேரும். ஒருவர் இறந்த பின் அவரது உடலின் மூலக் கூறுகள், வைரஸ் பாற்றீரியா, புழு, தாவரம், விலங்கு என்று பல உயிர்களிடம் போய் சேரும். மனிதருக்கும் உணவாக வந்து சேரும்.

இதை மறுபிறவி என சொல்ல முடியாது. ஏன் என்றால் அந்த மனிதரின் உடலில் பிறக்கும் போது இருந்த மூலக் கூறுகள் அவருடையது இல்லை. அவையும் பிற உயிர்களில் இருந்து வந்தவையே.

எனவே நீங்கள் எதையும் இந்த உலகுக்கு கொண்டு வரவில்லை. எதையும் கொண்டுபோகவும் முடியாது. உங்களிடம் இருப்பது எல்லாம் இங்கேயே எடுத்ததுதான். நீங்கள் போகும் போது அவற்றை இங்கேயே விட்டுச் செல்லத்தான் வேண்டும்.

## மறுமணம் செய்ய போகிறீர்களா?

விவகாரத்திற்குப் பிறகு இரண்டாவது திருமணம் செய்வது, வாழ்வில் புத்துணர்ச்சியைத் தருவது மட்டுமல்லாமல், நீண்ட நெடிய நமது வாழ்க்கையில் நமக்கென ஒரு துணை இருக்கிறதென்ற மனஉறுதியையும் தருகிறது. ஆனால், மறுமணம் செய்வதற்கான இணையைத் தேர்ந்தெடுப்பதிலும் பலருக்குக் குழப்பமான சூழல் நிலவுகிறது.

அன்பு, நம்பிக்கை, மரியாதை இந்த மூன்றும்தான் தம்பதியர் பரஸ்பரம் எதிர்பார்க்கும் விடயங்கள். குறிப்பாக, பரஸ்பர நம்பிக்கை திருமண வாழ்க்கைக்கு மிகவும் அவசியம். அது மணமுடிக்க எண்ணும் இருவரிடையே ஏற்படுகிறதா என்பதைக் கவனியுங்கள். விவாகரத்து செய்தவுடன், குறிப்பிட்ட ஒருவரிடம் அன்பைச் செலுத்துவதும், நம்புவதும் இயல்பான ஒன்றாகும். இப்படியான கடினமான சூழ்நிலையில், உங்களது இணை உங்களுக்கு முன்னுரிமை அளித்து, பரஸ்பர நம்பிக்கையுடன் உங்களைத் திருமணம் செய்பவராக இருக்க வேண்டும்.

எவ்விதமான நிர்ப்பந்தம் காரணமாகவும், மீண்டும் ஒருவரைத் திருமணம் செய்துகொள்ளும் முடிவை எடுக்க வேண்டாம். விவாகரத்துக்குப் பிறகான இரண்டாவது திருமணம் என்பது அன்பையும், ஆறுதலையும் உள்ளடக்கிய உங்களின் சுய முடிவாக மட்டுமே இருக்க வேண்டும். உங்கள் வாழ்நாள் முழுவதையும் அந்த நபருடன் வாழ நீங்கள் விருப்பமாக இருக்கிறீர்கள் என்பதில் உறுதியாக இருந்தால், இரண்டாவது திருமணம் செய்துகொள்ளுங்கள்.

பிரச்சினைகள் வரும்போது கோபத்துடன் முடிவெடுக்கிறாரா அல்லது நிதானமாக உள்ளாரா என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.



# வாழ்க்கையில் முக்கியமானது பணம்?

பணம் இல்லாதபட்சத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் பராமரிப்பை கூட நிறுத்திவிடுவார்கள் ஆகையால் வாழ்க்கையில் பணம் மிக முக்கியமானது. பணம் வாழ்க்கையில் மகிழ்ச்சியை வழங்காது என்று கூறும் நபரை ஒருபோதும் நம்பாதீர்கள்.

உங்களுக்கு தேவை என்றபோது யாரும் உங்களுடன் நிற்க மாட்டார்கள்.

நீங்கள் சொந்தமாக போராடவும், வாழவும் கற்றுக்கொள்ளவேண்டும்.

எந்த நண்பனும் உங்களை உண்மையில் நேசிப்பதில்லை. மக்கள் தங்கள் முன்னுரிமைகள் மாறும்போது மாறிவிடுவார்கள்.

உங்கள் குடும்பத்தினர் மட்டுமே உங்களை மனதோடு நேசிப்பார்கள், மற்றவர்கள் அனைவரும் சுயநலவாதிகள். தங்கள் உறவினர்களை ஒருபோதும் நம்பாதீர்கள், அவர்கள் உங்களின் மேல் தீய நோக்கங்களைக் கொண்டவர்கள். உங்களின் வெற்றிகளைப் புகழ்வதை விட அவர்கள் உங்களுக்கு தேவையில்லாத அறிவுரைகளை வழங்கி உங்களை கீழிறக்க முயற்சி செய்வார்கள்.

ஒருவரின் தோற்றம் என்பது வாழ்க்கையில் மிக முக்கியமானது.

நீங்கள் அழகாக இருந்தால் வாழ்க்கையில் நிச்சயம் உங்களுக்கு சில பலன்கள் உண்டு. அழகு குறைந்தவர்கள் புத்திசாலியாக இருந்தாலும் விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. சமூகத்தில் போலி மக்கள் அதிக மதிப்புடையவர்கள்.

நீங்கள் எவ்வளவு போலியாக நடிக்கிறீர்களோ உங்களுக்கு அவ்வளவு அதிக நண்பர்கள் இருப்பார்கள்.

உங்கள் இரகசியங்களை உங்கள் நெருங்கிய நண்பர்களிடம் கூட சொல்லாதீர்கள். யாரும் உங்களின் நலன் கருத மாட்டார், அனைவரும் கிசுகிசு என்று உங்கள் முதுகின் பின்னால் பேசவும், சிரிக்கவும் தான் ஆர்வமாக காத்திருப்பர்.

ஒருபோதும் கடன் வாங்காதீர்கள். சரியான நேரத்தில் அவற்றை திருப்பித் தர முடியாவிட்டால், உங்கள் வாழ்க்கை நரகமாகிவிடும்.

ஒரு முட்டாள் நபருடன் விவாதித்து உங்கள் நேரத்தை ஒருபோதும் வீணாக்காதீர்கள்.

அவர்கள் இறுதியில் உங்களையே ஒரு முட்டாள் என்று நிரூபித்து விடுவர் அவன் தவறு என்று உங்களுக்குத் தெரிந்தாலும் சில நேரங்களில் அமைதியாக இருங்கள்.





- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம். ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர்- யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

# சர்வதேசத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்

## அவர் புனிதரான கதையும் அவரைச் சந்தித்த புதுமையான அனுபவமும்

சர்வதேசத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பர் (இனி இரண்டாம் யோவான் பவுல் என இவ்வாக்கத்தில் பயன்படுத்தப்படும்) புனிதரான கதையும் அவரைச் சந்தித்த புதுமையான அனுபவமும் என்ற கடந்த வார ஆக்கத்தில் நான் திருத்தந்தையை சந்திக்க புனித பேதுறுவானவர் சதுக்கத்திற்குச் சென்ற ஆரம்ப கட்டத்தையும் விளக்கினேன்.

வத்திக்கானில் பணியாற்றும் யாழ் மறைமாவட்டத்தை சோந்த மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளாரின் ஏற்பாட்டில் அமல மரித்தியாகிகள் இல்லத்தில் தங்கி கல்வி கற்றுக் கொண்டிருந்த எனது வகுப்பு நண்பர் சந்திரபோஸ் குறூஸ் அ.ம.தி அடிகளார்



வத்திக்கான் புனித பேதுறுவானவர் சதுக்கத்திற்கு என்னை அழைத்துச் சென்று விட்டார். அங்கே மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார் என்னை திருத்தந்தையைச் சந்திக்க அழைத்துச் செல்ல வேண்டும்.

மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார் இந்தப் பெரிய கூட்டத்தில் என்னை எப்படி இனங்காண முடியும் என எண்ணிக் கொண்டு அந்த உலகப் பிரசித்தி பெற்ற புனித பேதுறுவானவர் சதுக்கத்தைப் பற்றிப் படித்துத் தயரர் செய்த விடயங்களை நினைத்துப் பராக்கிறேன் என அந்த சதுக்கம் பற்றிய விடயங்களை தெரிவித்திருந்தேன்.

கடந்த வார ஆக்கத்தைப் படித்த சிலர் அவரைச் சந்தித்த புதுமையான அனுபவம் பற்றி எதுவும் எழுதவில்லையே என தொலைபேசி மூலமும் மின் அஞ்சல் மூலமும் கேள்வி எழுப்பினர்.

குறிப்பாக கனடா ரொறென்ரோவில் வசிப்பவரும் 'கனகத்தூதன்' என்ற கத்தோலிக்க சஞ்சிகையின் ஆசிரியருமான அன்ரன பிலிப் அவர்கள் கனடா ரொறென்ரோவில் இருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இவ்வாக்கம் பற்றிக் கலந்துரையாடினார். அவர் ஆக்கத்தின் இறுதியில் இன்னும் மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார் வரவில்லை காத்துக் கொண்டே இருக்கிறேன் என்று முடித்திருக்கலாம். இல்லாவிட்டால் ஏதோ நோக்கில் விடயத்தை மறந்து விட்ட மாதிரி அல்லவா தோன்றுகின்றது எனத்தெரிவித்திருந்தார்.

மேலும் திருத்தந்தை இரண்டாம் அருள் சினனப்பர் என்பதை தற்போது பாவிக்கும் பெயரான திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் எனப் பாவிப்பதே சிறந்தது என்றார். உண்மை தான் என எற்றுக் கொண்டேன். இருப்பினும் தலைப்பில் அதனை மாற்றினால் தொடர்ச்சியாகப் படிப்பவர்கள் குழப்படையாமல் தலைப்பில் அப்படியே வைத்துக் கொண்டு உள்ளே மாற்றியுள்ளேன்.

தினசரி மற்றும் ஒன்லைன் மூலம் வெளிவரும் காலைக் கதிர் பத்திரிகையில் ஞாயிறு தினங்களில் வெளியாகும் கிறிஸ்தவ செய்தி இதழை ஒன் லைன் மூலம் பலரும் படிப்பதும் உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்தும் குறிப்புத் தெரிவிப்பதும் மகிழ்வாக உள்ளன.

தொடர்ந்து படியுங்கள். குறிப்புக்களையும் விருப்புக்களையும் தெரிவியுங்கள். குறிப்புக்களைத் தெரிவித்த அனைவருக்கும் எல்லோரின் பெயர்களையும் இங்கு குறிப்பிடாது விடினும் அனைவருக்கும் குறிப்பாகக் கனடா ரொறென்ரோவில் வசிப்பவரும் கனகத்தூதன் என்ற கத்தோலிக்க சஞ்சிகையின் ஆசிரியருமான அன்ரன் பிலிப் அவர்களுக்கும் அன்பான நன்றிகள்.

### புனித பேதுறுவானவர் சதுக்கத்தில் கமிலஸ் நிர்மலன் அடிகளாருடன் சந்திப்பு

இன்னும் மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளரீ வரவில்லை. எந்த நேரமும் வரலாம் என்று காத்துக் கொண்டு இருந்தபோது பின்புறத்தில் இருந்து ஒரு கரம் என் தோள் பட்டையைத் தொட்டது.

இங்கு என்னை யாருக்குத் தெரியும்? இது மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார்தான் என்ற நம்பிக்கையுடன் திருப்பினேன். வெளிநாடுகளில் கத்தோலிக்க குருக்கள் அணியும் 'றோமன் கொளர்' என அழைக்கப்படும் 'கோட் சூட்'டுடன் வெள்ளைக் கொளர் அணிந்து அதன்மேல் நீண்ட கறுத்த கோட் அணிந்து நின்றார்.

திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்கனைச் சந்தித்தது மறக்க முடியாத அருள் நிறைந்த அனுபவம். அப்போது அவர் புனிதராவரர் என்ற எண்ணம் எனக்கு இருக்கவில்லை. ஆனால் மேலும் அவர் அப்பணியை ஆற்றி வந்த விதத்திலும் எனக்கு மிகுந்த விருப்பு இருந்தது. அவரைப்பற்றி நிறையப் படித்து, நிறைய எழுதி இருந்தேன். அவை பற்றியும் தெரிவிப்பேன்.

அரவணைப்பதற்கு நீட்டப்படுகின்ற கைகளைப் போல புனித பேதுறுவானவர் சதுக்கம் இரு பக்கங்களும் நீண்டு அமைந்துள்ளன. திருச்சபை என்னும் அன்னை தன் இரு கைகளையும் விரித்து மக்களை அரவணைப்பதாக இவ்வெளிமுற்றத்தை அமைத்ததாக பெர்னீனியே கூறியுள்ளார். அந்த புனித பேதுரு பெருங்கோவில் முகப்பின் அகல் பரப்புக் காட்சியும் வெளிமுற்றத்தின் விரிபார்வையும் இவ்வாக்த்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வத்திக்கான் புனித பேதுறுவானவர் சதுக்கத்தில் கடுங்குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. சதுக்கம் மக்கள் வெள்ளத்தால் நிறைந்திருந்தது. திருத்தந்தை ஒருவரைச் சந்திக்கும் நிகழ்வு ஒருவரது வாழ்வில் நடக்கும் ஓர் அபூர்வ வாய்ப்புத்தான். எப்போது திருத்தந்தையைச் சந்திக்கப் போகிறோம் என மனது ஆர்வத்தில் துடித்துக் கொண்டிருந்தது.

நீண்ட நேரக் காத்திருப்பின் பின்னர் சோதனைகள் முடித்து உள்ளே அனுமதிக்கத் தொடங்கினார்கள். திருத்தந்தை அவர்கள் அப்போது ஓரளவு வயது முதிர்ந்து இருந்தமையால் தனியான சந்திப்புக்கள் நிறுத்தப்பட்டு பொதுவான சந்திப்பு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது.

அதுவும் ஒரு நீண்ட மண்டபத்தில் அவர் வந்து காட்சி தருவார். அப்போது அவரைப் பராக்கலாம். முடிந்தவாறு படம் எடுக்கலாம். முதல் நான்கு வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் மட்டும் மேடைக்கு ஏறிச் சென்று அவரை வாழ்த்திக் கைகொடுத்து ஓரிரு வராத்தைகள் பேசலாம். நாம் வேண்டினால் அந்தச் சந்திப்பை அவர்களின் அதிகார பூர்வப் படப்பிடிப்பாளர்கள் அழகுறப் படம் பிடித்துத் தருவார்கள். மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார் படங்கள் தரும்படி வேண்டியமையால் நான்கு படங்களை எடுத்துத் தந்தார்கள். திருத்தந்தையைச் சந்திக்கும் போது எடுக்கப் பட்ட அப்படத்தை திரும்பவும் இங்கு இணைக்கிறேன்

அழகுற அமைந்திருந்த பெரிய மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம். எங்கோ ஒரு மூலையில் இருந்து தூரமாகத்தான் இருந்து திருத்தந்தையைப் பராக்க முடியும். அதுவே பெரும் பாக்கியம்

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

எனக்கருதி நின்றேன்.

செய்தியாளருக்கு இவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

அப்போது உள்ளே சென்று அதிகாரிகளிடம் பேசிவிட்டு வந்த மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார் கிட்ட நெருங்கிப் போக முடியாது, எப்படி உம்மை திருத்தந்தைக்குக் கிட்டக் கொண்டு போவது என்று சொல்லிக் கொண்டே, உம்மிடம் நீர் யாழ்ப்பாணம் மறை மாவட்ட அதிகார பூர்வ ஏடான பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் என்ற அட்டையோ கடிதமோ கொண்டு வரும்படி நான் சொல்லி இருக்க வேண்டும், நான் யோசிக்கவில்லை என்றார்.

உடனே நான் "யாழ் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை நான் பாதுகாவலன் ஆசிரியர் என்பதை நிருபிக்கும் எனது செய்தியாளர் அட்டையைத் தந்திருக்கிறார். தேவை வரும் கட்டாயம் கொண்டுபோம் எனச் சொன்னவர். இதோ இருக்கிறது" – என எனது கோட் பையில் இருந்து எடுத்துக் காட்டினேன். "வெரிகுட், வெரிகுட், வெல்லலாம்" – என மகிழ்வோடு நான் பாதுகாவலன் ஆசிரியர் என்பதை நிருபிக்கும் எனது செய்தியாளர் அட்டையை வாங்கிக் கொண்டு உள்ளே போனார்.

திரும்பி வந்த அவர் நீண்ட வரிசையில் இன்னும் ஏராளமான மக்கள் காத்திருந்த போதும் என்னை வேறு விசேட பாதையால் அழைத்துச் சென்றார். செய்தியாளருக்கு இவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியரக 10 ஆண்டுகள் பணியற்றியுள்ளேன். இப்போது நினைக்கின்ற போது அதன் பயன் இதுதான் என எண்ணுகிறேன். ஒருவர் வந்து என்னை சோதனை இட்டு உள்ளே அனுப்பினார்.

மேதகு கமிலஸ் நிர்மலன் அடிகளார் உம்மை முதல் நான்கு வரிசைக்குள் விடுவார்கள். மேடையில் ஏறி திருத்தந்தையைச் சந்திக்கலாம். இலங்கையில் இருந்து வந்துள்ளேன் என்று சொல்லும். சந்திப்பு முடிய வெளியே வாரும் ஜெபரட்ணம் அடிகளார் வந்து உம்மைக் கூட்டிப் போவர் என்றார். நான் உள்ளே நுழைகிறேன். (தொடரும்)

# இலங்கையில் அழகுக்கலையில் ..........

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**10) ஏனைய துறைகளுடன் ஒப்பிடும் போது அழகுக் கலையானது விரைவான மாற்றங்களைச் சந்திக்கும் ஒருதுறையாகக் காணப்படுகிறது. இவ்வாறு உடனுக்குடன் மாற்றம் காணும் துறையில் 21 வருடங்கள் நீடித்து நிலைத்திருப்பதென்பது ஒரு சாதாரண விடயமல்ல நீங்கள் எவ்வாறு உங்களை காலத்திற்க்கேற்ப தக்கவைத்து நிலைத்து நிற்கிறீர்கள் ?**

நான் தொடர்ந்து கற்றுக் கொண்டுடிருப்பதன் மூலமே என்னால் என்னை தக்கவைத்து இத்துறையில் நிலைத்து நிற்க கூடியதாக உள்ளது. நான் தலைநகர் கொழும்பிலும் இந்தியாவிலும் பயிற்சி வகுப்புகளில் கற்றுக் கொண்டுடிருக்கிறேன். கூடுதலாக 2 – 3 மாதங்களுக்கு ஒரு முறை புதிய கற்கை நெறிகளில் என்னை முன்னெடுத்து கற்றுக்கொண்டு இருப்பேன். தற்போது நான் யாஎல பகுதியில் ஒரு புதிய கற்கை நெறி ஒன்றை தொடர்ந்து கொண்டு இருக்கிறேன். மேலும் சென்ற வருடம் அமெரிக்காவின் **young scientist** பல்கலைக்கழகங்களிலிருந்து **associate cosmetology** பட்டபடிப்பினையும் நிறைவு செய்து அதற்கான படத்தினையும் பெற்றுக் கொண்டேன். இவ்வாறு தொடர்ந்து கற்றுக் கொள்வதன் ஊடாக மட்டுமே என்னால் இத்துறையில் கால மாற்றங்களை எதிர்கொள்ளக் கூடியதாயுள்ளது.


**11) தொழில் சார்ந்த வாழ்க்கையில் சாதனைப் பெண்மணியாக மட்டுமன்றி ஒரு சிறந்த தாயாகவும் குடும்பத் தலைவியாகவும் இருத்தலென்பது மிகச் சவாலானது. இத்தகைய சவாலான இரு வகிபாகங்களையும் எவ்வாறு சரியான, வெற்றிகரமான முறையில் சமமாகக் கையாள்கிறீர்கள். என்பது பற்றிப் பகிர்ந்துகொள்வீர்களா?**

என்னைப் பொறுத்தவரை ஆரம்ப காலங்களில் நான் மிகவும் கடினமான சூழ்நிலைகளை எதிர்கொண்டேன் என்பதைக் கூறியாக வேண்டும். நான் எனது இருபதாவது வயதில் இத் துறையில் பிரவேசித்தேன். எனது இருபத்தியிரண்டாவது வயதில் எனது முதல் குழந்தைக்குத் தாயானேன். எனக்கு மொத்தம் நான்கு பிள்ளைகள் .சராசரியாக அவர்களிற்கிடையில் 2 வயது வேறுபாடு தான் காணப்பட்டது. எனவே அவர்களைப் பராமரித்துக் கொண்டு இத்தொழிலையும் செய்தது மிகவும் சவலாகக் காணப்பட்டது. இருப்பினும் இத் துறையில் காணப்பட்ட ஆர்வம் காரணமாகவே நான் வெற்றிகரமாக இத் துறையில் ஈடுபட்டேன். ஆனால் இப்போது பிள்ளைகளும் வளர்ந்து விட்டார்கள். மூத்த மகளின் வயது 19. அவரும் எனக்கு மிக்க உதவி புரிவார். எனவே நான் மிக்க மகிழ்வுடன் இத் தொழிற்றுறையில் வெற்றிகரமாக இத் துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். எனவே கொஞ்சம் கடினமான ஆரம்ப காலத்தைக் கடந்தால் பின்பு தொழில், குடும்ப வாழ்க்கையைக் கையாளுதல் மகிழ்ச்சியானதாகவும் இலகுவானதாகவும் இருக்கும்.

**12) உங்களைப் போன்று சாதிக்கத் துடிக்கும் பெண்கள் இன்றி நீங்கள் வழங்க கூடிய ஆலோசனைகள் எத்தகையவை?**

என்னை பொறுத்த வரையியில் இக்காலத்தில் முயற்சியெடுக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறன. இன்னொருவரின் உழைப்பில் தங்கியிராது நம் சொந்த முயற்சிகளினாலேயே நமது குடும்பத்தையும் பொருளாதார நிலையில் அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல பெண்களின் பங்களிப்பு அவசியம். எனவே அனைத்து பெண்களும் தங்களுக்கு தெரிந்த தொழிற்துறைகளில் முயற்சி மேற்கொள்ளல் இன்றியமையாதது ஆகும்.

காலைக்கதிர்
Kalaikkathir




# நீதி அமைச்சின் நடமாடும் சேவைக்கு எதிராக காணாமல்போனோரின் உறவுகள் போராட்டம்

## யாழ். மத்திய கல்லூரி முன் தள்ளுமுள்ளு

(ரு.லோகதயாளன்,
இ.கலையமுதன்)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி அமைச்சின் நடமாடும் செயலமர்வில் காணாமல்போனோர் விவகாரத்தைக் கையில் எடுக்கக்கூடாது எனத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட நீதிக்கான அணுகல் எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை நேற்று யாழ். மத்திய கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக் கப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே காணாமல்போனோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்பாகக் கூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், உறவுகளைத் திருப்பித்தா, நடமா டும் செயலமர்வில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தைக் கையில் எடுக்காதே போன்ற பல கோஷங்களை எழுப்பி னார்.

இந்நிலையில், போராட்டக்காரர்கள் நிகழ்வு மண்டபத்துக்குள் செல்ல முற்படுகையில் பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன் அங்கு தள்ளுமுள்ளு நிலை ஏற்பட்டதுடன் குழப்பமான நிலை ஏற்பட்டது.

காணாமல்போனோரின் உறவுகள் யாழ். மத்திய கல்லூரி முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வந்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் விவரங்களைத் தன்னிடம் தருமாறு ஆளுநர் கூறியபோது அதற்கு மறுப்புத் தெரிவித்த போராட்டக்காரர்கள் பலமுறை நாங்கள் விபரங்களைக் கொடுத்துள்ளோம். இதுவரை எதுவும் நடக்கவில்லை எனத் தெரிவித்தனர். இதையடுத்து ஆளுநர் அங்கிருந்து விலகிச் சென்றார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ந்தும் அங்கு கூடியிருந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.




# சபாநாயகருக்கும் கொரோனா



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட கொரோ னாப் பரிசோதனையின் பின்னர், சபாநாயகருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கடந்த சில நாள்களாகச் சபாநாயகருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.01.2022இல் வெளியிடப்பெற்றது.

சிறுகதை

சம்பூர் சமரன்

# விடியலைத் தேடி

இரவு எட்டு மணியிருக்கும் படிப்பறையின் ஓரத்தில் ஒரு அழுகைக் குரல். விம்மி விம்மி அழும் சத்தம் கேட்ட பிரபு அங்கு சென்று பார்க்கிறான். அங்கே கௌசிகன் புத்தகத்தை மார்போடு அணைத்த வண்ணம் அழுதுகொண்டிருந்தான்.

ஏன் அழுவுற என்ன நடந்து இங்கு யாரு உனக்கு அடிச்சாங்களா.

கௌசிகன் பதில் எதுவும் சொல்லாமல் இருந்தான். மீண்டும் பிரபு, கௌசிகன் அருகில் வந்து என்ன நடந்தது சொன்னா தானே தெரியும், நானும் உண்ட வகுப்புதான், உன்னையும் எங்க பள்ளிக்கூடத்துல தான் சேர்க்கப் போறாங்க, என்னோட வகுப்புல தான் நீயும் சேர்ந்து படிக்கப் போற, எண்டு ஐயா சொல்லி இருக்கார், திங்கட்கிழமை நம்ம ஒண்ணா தான் பள்ளிக்குப் போவோம்

என்று ஆறுதலாக அருகிலிருந்து சொன்னான். அதற்கு பதிலளித்த கௌசிகன்.

நான் அம்மா, அப்பாவை விட்டு ஒருநாளும் பிரிஞ்சி இருந்ததில்ல, அதனாலதான் கவலையா இருக்கு, அதோட நான் அவங்கள விட்டு எவ்வளவு நாள் இருக்க போறானோ எண்டு நினைக்க பயமா இருக்கு, என்னை வீட்ட போக விடுவாங்களா?

நம்ம இப்ப எட்டாம் வகுப்பு படிக்கிறம், ஆனா என்னைய ரெண்டாம் ஆண்டு படிக்கும் போதே கொண்டு இங்க விட்டுதாங்க, எனக்கு அப்பா இல்லை வயலிலே வேலை செய்யக்குள்ள பாம்பு கடிச்சி செத்திற்றாரு, அம்மா என்னை நம்பி என்னைய நல்லா படிக்கணும் எண்டு தான் இந்த ஹோம்ல கொண்டு விட்டாங்க, நானும் முதல் உன்னை போலதான் கிடந்து புரண்டு புரண்டு அழுதான், தங்கச்சிகளை பார்க்காமல் ஒருமாதிரியா இருக்கும், அப்படியே இருந்து அது பழகி போச்சு, ஒவ்வொரு தவணை தீவுக்கும் வீட்ட போறதுக்கு விடுவாங்க, அப்பத்தான் எனக்கு சந்தோசமா இருக்கும். நீயும் இப்பதானே இங்க வந்திருக்க உனக்கும் போகப் போக அதுவே பழகிடும் இங்கே இருந்து படிச்சி நல்ல நிலைக்கு வரலாம் எண்டு அம்மா சொல்லுவா!

ஆ, எனக்கும் தான் வீட்ல சரியான கஷ்டம் ரெண்டு அக்காவும் ஒரு தம்பியும் எனக்கு இருக்கு. நான் நல்லா படிப்பன் ஆனா வீட்டால என்ன படிக்க வைக்க வசதி இல்ல. அதனால எங்க டீச்சர் மூலமா இந்த ஹோம்ல என்னைய அப்பா சேர்த்துவிட்டார். இங்க வாறதுக்கு முதல் சந்தோசமாத்தான் இருந்தன், ஆனா இப்ப வீட்டு நினைப்பாவே இருக்கு அதான் அழுகையா வருது கவலப்படாத இங்க நம்மளப் போல 30 பேர் இருக்காங்க, எல்லோரும் கஷ்டத்தாலதான் இங்க வந்து இருக்காங்க, இந்த ஹொம் நல்லம், நல்ல சாப்பாடு, நல்ல இடம், நல்லா கவனிப்பாங்க, இந்த ஹோமுக்கு பொறுப்பான ஐயா நல்ல மனிசன், ஒவ்வொரு நாளும் பின்னேரம் நம்ம எல்லோரையும் பார்க்க வரும் போது வடை, கேக் எண்டு சாப்பிட கொண்டு வருவார். நம்மள நல்லா படிக்க சொல்லுவார்

ம்ம்ம்.. நானும் நல்லா படிச்சு அம்மா அப்பாவை வைச்சு பாக்கணும், பாவம் அவங்க எங்கள வளர்க்க சரியா கஸ்டப்படுறாங்க.

சரி நேரம் போயிட்டு நித்திரை கொள்ள போவம், இங்கே எல்லாமே டைம் டேபிள் படிதான் நடக்கும் நம்மளும் அதுக்கு ஏத்த போல நடக்கணும் சரியா

ஓம் சரி என்று இருவரும் நித்திரைக்கு சென்றார்கள். கௌசிகன் மிகவும் கஸ்டப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பத்தைச் சேர்ந்தவன். அப்பா சாதாரண கூலித்தொழிலாளி அவனுக்கு இரண்டு சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரனும் உண்டு.

கௌசிகன் படிப்பில் கெட்டிக்காரன், பாடசாலையில் எப்போதும் முதலாம் பிள்ளையாகவே வருவான். ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் கூட வெட்டுப்புள்ளியை விட 2 புள்ளிகள் குறைவாகப் பெற்று சித்தி அடையாமல் விட்டாலும் கூட தனது திறமையை அதில் அவன் வெளிக்காட்டியிருந்தான். இப்போது தரம் எட்டில் படிக்கிறான். அவனது எதிர்காலத்தை எண்ணி பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் கவலைப்படுவதுண்டு. நல்லா படிக்கிற பிள்ளை அவனுக்கு நம்ம ஊக்கம் கொடுத்தா நல்லா இருப்பான். என்று அப்பா ஒவ்வொரு நாளும் அம்மாவிடமும் சொல்லுவார். கௌசிகனின் வகுப்பாசிரியரிடமும் இது பற்றி கூறினார். வகுப்பாசிரியரும் கௌசிகனிடம் நல்ல அன்பாகப் பழகுவார். அவனின் எதிர்கால படிப்பு பற்றி சிந்தித்து தனக்கு தெரிந்த ஒரு சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மூலமாக அவனை இந்த ஆதரவற்றோர் பிள்ளைகள் படிக்கின்ற இல்லத்தில் சேர்த்து விட்டார். அன்று தான் அவனை சேர்த்துவிட்டு பெற்றோர்கள் வீட்டுக்குச் சென்றார்கள். ஆனால் பெற்றோரை விட்டுப்பிரிந்து இருக்கின்ற சோகத்தில் கௌசிகன் அழுதுகொண்டிருந்து உறக்கத்திற்குச் சென்று விட்டான்.

கௌசிகன் இருக்கின்ற இல்லத்து முகாமையாளர் அடுத்த நாளே நகரத்தின் பெரிய ஆண்கள் பாடசாலையில் அவனைச் சேர்த்துவிட்டார். முதலில் வகுப்பில் நுழைந்தவுடன் எல்லோருமே அவனை ஒருமாதிரியாக பார்த்தார்கள். நாட்கள் செல்லச் செல்ல கொஞ்சம் கொஞ்சமாக அவனிடம் அவர்கள் பழக்கமானார்கள். அந்த முறை இடம்பெற்ற தவணைப் பரீட்சையில் வகுப்பில் முதலாம் பிள்ளையாக வந்தான். எல்லோரும் அதிசயித்துப் போனார்கள். அவ்வாறே தொடச்சியாக கா.பொ.த சாதாரண தரம் வரை வகுப்பில் முதலாவதாகவே அவன் வந்தான். அதிபர் ஆசிரியர் உட்பட எல்லோரிடமும் அவனுக்கு நல்ல மதிப்பு இருந்தது.

கௌசிகனின் இல்லத்தில் மிகுந்த கட்டுப்பாடுகள் உண்டு. காலையில் வான் மூலமாக பாடசாலை நுழைவாயிலிலேயே கொண்டு விடுவார்கள். பின்னர் பாடசாலை மூடும் நேரம் வந்து அந்த வான் ஏற்றிச் செல்லும். நண்பர்கள் பாடசாலைக்குள் மட்டுமே இருக்க வேண்டும். வெளியே யாருடனும் பழக வாய்ப்பில்லை. மாலை நேர வகுப்புகள் கூட அவர்களது இல்லத்துக்குள் தான் நடைபெறும். இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதையுண்டு. சிலர் தாய் தந்தையை இழந்தவர்கள், தாய் – தந்தை பிரிவு, குடும்ப வன்முறை, குடும்ப ஏழ்மைநிலை மற்றும் விசேட தேவை என்று பல காரணங்கள் அவர்களின் பின்னே இருக்கும். இருந்தாலும் இல்லத்தில் ஒரே குடும்பமாக அவ்வப்போது சிறுசிறு சண்டை கோபங்கள், மகிழ்ச்சி என்று தருணங்கள் நகர்ந்து கொண்டே இருக்கும்.

இங்கு சாப்பாடு சுமாராக இருக்கும், நினைத்த உணவு கிடைக்காது கிடைப்பதை தான் அவர்கள் உண்ண வேண்டும். யாராவது ஒருவரின் வீட்டிலிருந்து பார்க்க வரும் போது உணவு கொண்டு வந்தால் அதை ஒன்றாக பகிர்ந்து உண்ணுவார்கள். விடுமுறை தினங்களில் இல்ல முகாமையாளர் பிள்ளைகளை கோயிலுக்குக் கூட்டிச் செல்வார். இப்படி சில கட்டுப்பாடுகளும் ஒழுக்கமும் நிறைந்த இடத்தில் எதற்குமே ஆசைப்படாமல் படிப்பு ஒன்று மட்டுமே தனது எதிர்கால வாழ்வுக்கான மூலதனம் என்று கௌசிகன் கடுமையாக படித்து கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுடன் சித்தியடைந்தான். அவனது குடும்பத்தினர், இல்லத்தினர், அதனால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். தனது சிறுவயதுப் போராட்டத்திற்கு கிடைத்த முதல் மிகப்பெரிய வெற்றியாக அவன் இதனை கருதினான்.

கௌசிகனின் பாடசாலை அதிபர் மிகவும் கண்டிப்பானவர், அவனிடம் தனி அக்கறை காட்டுவார். உயர்தரம் படிப்பதற்கான பாடப்பிரிவை தெரிவு செய்வதற்கான விண்ணப்பத்தில் அவன் கலைப்பிரிவை தெரிவு செய்திருந்தான். குடும்பத்தினரோ அவனை வர்த்தகப்பிரிவினை படிக்கச் சொன்னார்கள், ஏனென்றால் அதில் வங்கித் துறை சார்ந்த வேலை வாய்ப்புக்களும் வர்த்தகம் சார்ந்த வேலைவாய்ப்புகளும் அதிகம் உள்ளன என்பதால், ஆனால் அதிபரோ உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் அவனை படிக்குமாறு அவனிடம் கூறினார். அதற்கு தன்னால் முடிந்த உதவிகளையும் பெற்று தருவேன் எனவும் உறுதியளித்தார். என்றாலும் கௌசிகன் தனது மனதையும் முடிவையும் மாற்றிக்கொள்ளவில்லை. அதிபர் கூறியதையோ அல்லது குடும்பத்தினர் சொன்னதையோ அவன் கேட்கவில்லை, இருந்தாலும் மனதில் ஒரு பயம் பற்றிக் கொண்டது. ஏனென்றால் ஏனைய பாடப் பிரிவுகளை விட கலைப் பிரிவில் அதிக பரீட்சார்த்திகளுடன் போட்டி போட வேண்டும்.

அத்தோடு பல்கலைக்கழக வாய்ப்பு என்பது அதிகமானவர்கள் என்பதால் கடினமாக இருக்கும் எனவே கலைப்பிரிவில் கூடிய திறமையை தான் காட்டினால் மட்டுமே வெற்றி பெற முடியும். அவ்வாறு வெற்றி பெற முடியாவிட்டால் அதிபர் மற்றும் தன்குடும்பத்தினர் மனவேதனை அடைவார்கள் மேலும் அவர்கள் படிக்கச் சொல்லிய துறையில் முயன்றிருந்தால், உதவியும் கிடைத்திருக்கும் அத்தோடு அவர்களும் சந்தோசப்பட்டிருப்பார்கள். மேலும் வேலை வாய்ப்பும் அதிகமாக இருந்திருக்கும் என்று பலவித எண்ணங்களும் இடையிடையே வந்து சென்றன. இருந்தாலும் தன் விடியலுக்கான வழியை தன் முடிவினாலே கண்டுபிடித்து விடுவேன் என்ற வைராக்கியம் அவனை வலிமைப்படுத்தியது. எனவே கலைத் துறையிலே தனது விடியலினை அவன் தேட முற்பட்டான்.

கலைப்பிரிவில் படிக்கும் போது இல்லத்தினரால் மாலை நேர வகுப்புக்களுக்குத் கௌசிகன் அனுப்பப்பட்டான். வகுப்பிற்கான கட்டணங்களை இல்லத்தில் ஒரு பகுதியும் வீட்டாரிடமிருந்தும் பெற்றுக்கொண்டான். உயர் தரத்திலும் தனது திறமையினால் வகுப்பில் முதலாவதாகவே வந்தான். ஒவ்வொரு தவணை முடிவிலும் மாணவர் தேர்ச்சி அறிக்கை அதிபரால் வழங்கப்படும் போது அவர் கௌசிகனின் தவணை புள்ளிகளை மட்டும் நன்றாக உற்று நோக்கிவிட்டு தான் கொடுப்பார். இறுதித் தவணையின் போது துரதிஷ்டவசமாக அதிபர் தனது வயது மூப்பினால் ஓய்வூதியகாரராக மாறி விட்டார். அம்முறை புள்ளிகளை கண்காணிக்க யாருமே இல்லை. கௌசிகனின் வகுப்பாசிரியர் அவனின் தேவைகளுக்காக அவ்வப்போது பண உதவிகளும் செய்தார். அத்தோடு அவனது நாடகப் பாடஆசிரியரும் அவனில் நல்ல அபிப்பிராயம் வைத்திருந்தார். அவனை நன்றாக ஊக்குவிப்பார். கட்டாயம் கௌசிகன் பல்கலைக்கழகம் செல்வான் என அடிக்கடி வகுப்பில் உள்ள ஏனைய மாணவர்களிடமும் சக ஆசிரியர்களிடமும் அவர் சொல்லுவார். அவனும் அதற்கேற்றாற்போல் பாடசாலை மட்ட, வலய மட்டப்போட்டிகளிலும் பாடசாலை சார்பில் போட்டியிட்டு வெற்றி பெறுவான்.

இவ்வாறு உயர்தர பரீட்சைக்கு தன்னை அவன் சிறந்த முறையில் தயார் படுத்தி வந்தான். வகுப்பில் உள்ள அவனது நண்பர்களும் அவனுக்கு சில பாடம் சம்பந்தமான நூல்களை கொள்வனவு செய்ய உதவி செய்வார்கள். வகுப்பில் ஏனைய நண்பர்களை விட அவனுடன் நால்வர் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். இவர்கள் ஐவரும் இடைவேளை நேரம் கூட ஒன்றாகத் தான் திரிவார்கள். அந்நேரங்களில் பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் பகோடா, பற்றிஸ், வடை, சோடா என பலவகைப்பட்ட உணவுகள் விற்பார்கள். நகரத்துப் பிள்ளைகள் இந்த பாடசாலையில் அதிகம் படிப்பதனால் சற்று பணவசதி கூடியவர்களாக இருந்தார்கள். அதனால் மற்றைய பிள்ளைகள் நினைத்த உணவை வாங்கி உண்பார்கள். சிலர் கௌசிகனிடம் பணம் கொடுத்தால் அதை அவன் வாங்கி தனது மேலதிக வகுப்பு கட்டணமாக பயன்படுத்திக் கொள்வதற்காக பத்திரப் படுத்திக் கொள்வான். நண்பர்கள் ஐவரும் கஷ்டப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் சிற்றுண்டிச்சாலை பக்கம் செல்ல அவர்கள் எத்தனிப்பதில்லை. சில வேளைகளில் ஐந்து அல்லது பத்து ரூபாய் வரை யாரிடமாவது இருந்தால் இரண்டு பகோடா பக்கெட்டுகளை வாங்கி அதனை ஒன்றாக பகிர்ந்து உண்பார்கள். அதுதான் அவர்களின் அதிகபட்ச செலவாக இருக்கும். பெரும்பாலும் தண்ணீர் குழாய் அடியில் நிலத்தடி நீர் குழாய் என்பதால் ஒவ்வொருவர் மாறி ஒருவர் தண்ணீர் அடித்து அதனை பருகுவார்கள். அந்த தண்ணீர் அவர்களைப் பொறுத்தவரை இடைவேளைக்கான உற்சாக பானமாக இருக்கும் இவ்வாறு பலவித அனுபவங்களை சுமந்தது கௌசிகனின் வாழ்வு. கௌசிகனது இல்லமும் சரி அவனது பாடசாலையும் சரி அதிகமாகவே அவனுக்கு பல அனுபவங்களைக் கொடுத்தது எனலாம்.

தன் பாடசாலையின் மீது அவனுக்கு அதிக பற்று இருந்தது. காலை நேர கூட்டத்தில் கூட பாடசாலை கீதம் இசைக்கப்படும் போது ஏதோ நாட்டின் தேசியகீதம் இசைப்பது போல பெருமிதத்துடன் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு கீதத்தை பாடுவான். இவ்வாறு காலம் நகர்ந்து உயர்தரப் பரீட்சைக்கான காலமும் நெருங்கி வந்தது. இன்னும் நான்கு மாதங்களே அதற்கு இருந்தன. பரீட்சைக்காக எல்லோரும் தீவிரமாக படிக்கின்ற காலப்பகுதியாக அது இருக்கும். சில வகுப்புநிலையங்களில் இறுதிக் கட்ட மீட்டற் பயிற்சிகள் தீவிரமாக இருக்கும். அதேநேரம் இறுதி கருத்தரங்குகளும் நடைபெறும். அதிலே அனைத்து பாடங்களையும் ஒரே நாளிலே மீட்டிப்பார்த்து மீட்டற்பயிற்சிகளை வழங்கி அதற்கான விளக்கமும் கொடுப்பார்கள்.

கௌசிகன் குறித்த கருத்தரங்கு ஒன்றிற்காக தனது நண்பர்களுடன் சைக்கிளில் நகரத்தின் வீதிவழியே அவசர அவசரமாகச் சென்று கொண்டிருந்த வேளை வளைவான சந்தி ஒன்றில் முன்னே சென்ற சைக்கிளை அவன் சற்று முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர்பாராமல் எதிரே வந்த ஓட்டோ ஒன்று கௌசிகனின் சைக்கிளோடு வந்து மோதியது. கண்ணிமைக்கும் நேரத்தில் இது நிகழ்ந்துவிட்டது. கீழே விழுந்தவனின் காலில் ஓட்டோவின் முன் சில்லு ஏறிவிட்டது. வலி தாங்க முடியாமல் வீதியில் கிடந்து துடிதுடித்தான். அவனுடன் சென்ற நண்பர்கள் அந்த ஓட்டோவின் சாரதியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அதே வண்டியில் உடனடியாக அவனை வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றார்கள். தகவல் அவசரமாக கௌசிகனின் இல்லத்திற்கும் அவனது வீட்டிற்கும் விரைந்தது.

குடும்பத்தினர் பதறியடித்துக் கொண்டு வந்தார்கள். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உடனடியாக தீவிர சிகிச்சை பிரிவில் வைத்து சத்திரசிகிச்சை இடம் பெற்றது. முச்சக்கர வண்டியின் முன்சில்லு காலில் ஏறிச் சென்றதால், கால்எலும்பின் மூட்டுகள் விலகி எலும்பில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் கூறினார்கள். அதைக் கேட்டு அனைவரும் பயந்து போனார்கள், எப்படியும் எழுந்து நடக்க மூன்று மாதங்கள் வரை செல்லலாம் என வைத்தியர்கள் தெரிவித்தார்கள். வைத்தியசாலையில் ஒரு வாரம் இருந்து சிகிச்சை பெற்ற பின்னர் கௌசிகன் இல்லத்தினரின் அனுமதியுடன் அவனது வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

அம்மாவும் அப்பாவும் கௌசிகனது நிலையைக் கண்டு நிதமும் கண்ணீர் விட்டு அழுதார்கள். கோயில்களுக்குச் சென்று நேர்த்திக் கடன்களை வைத்தார்கள். தமது பிள்ளை மீண்டும் பூரண நலம் பெற்று வரவேண்டும் என்பதே அவர்களது பிரார்த்தனையாக இருந்தது. கௌசிகனின் கால் முடிந்தாலும் கூட மனம் முறிந்து தளர்ந்து போகவில்லை. தனது பாடக் குறிப்புகளை வீட்டிற்கு நண்பர்கள் மூலமாக கொண்டு வரச்செய்து, மிகுந்த வேதனை இருந்தாலும் கூட நம்பிக்கையை விடாமல் படிக்கத் தொடங்கினான். காலை மாலை என்று உணவு உண்ணுவதற்கு கூட நேரமில்லாமல் படித்த பாடங்களை கவனமாக குறிப்பெழுதி நன்றாக மனனம் செய்தான்.

ஒரு விடியலுக்கு இவ்வளவு தடைகளா? பல்கலைக்கழக வாய்ப்பான அந்த விடியலுக்கு இன்னும் அதிகம் போராட வேண்டியிருந்தது. காயமும் வலியும் உடலுக்கு தானே மனசுக்கு இல்லையே! எனவே கனவு சிதைந்து போக அவன் இடம் கொடுக்கவில்லை. தான் விரும்பித் தெரிந்த அவனது பாடத்துறை எப்படி விடிவு பெறாமல் போகும். அவனது தன்னம்பிக்கைக்கு சவாலான தருணம் அது.

இவ்வாறு மூன்று மாதங்களாக உழைத்த கடின உழைப்பின் அரங்கேற்றம் உயர்தரப் பரீட்சையின் போது அரங்கேறியது. கௌசிகனின் உடல் இப்போது சற்று தேறிவிட்டது. மனமும் அதை மீறிவிட்டது. எவ்வித சலனமுமின்றி உயர்தரப் பரீட்சையை சிறப்பாக செய்து முடித்தான். பரீட்சைப் பெறுபேறு வருவதற்கான காலம் வரும் வரை இலக்கிய வானில் சற்று சஞ்சரித்தான். கவிதை, கட்டுரைகள் என அதிகம் எழுதினான். அதற்கான அங்கீகாரமும் ஆங்காங்கே சில இடங்களில் அவனுக்கு கிடைத்துக் கொண்டுதான் இருந்தது.

இன்று பரீட்சையின் முடிவுகள் வெளிவருவதாக ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தது. மிகுந்த எதிர்பார்ப்போடு கௌசிகனும் அவனது குடும்பத்தினரும் காத்திருந்தார்கள். மாலை ஆறு மணியளவில் பரீட்சை முடிவுகள் வெளியாகின. கைத்தொலைபேசியின் ஊடாக தனது சுட்டெண்ணை பதிவு செய்து விட்டு கண்களை மூடிக்கொண்டான். எங்கும் இருள் மயம் அவன் உலகம் இருண்டிருந்தது. பரீட்சை முடிவுகள் தொலைபேசி திரையில் விழுந்தன. கண்களைத் திறந்தான் உலகமும் விடிந்தது. இருள் விலகியது, அவனது உழைப்பின் அறுவடை மிகை விளைச்சலை கொடுத்திருந்தது.

ஆம், மாவட்ட நிலையில் முப்பத்தியொராவது இடம் கிடைத்திருந்தது. இரண்டு அதிவிசேட சித்திகள் ஒரு விசேட சித்தியும் பெற்றிருந்தான். மகிழ்ச்சியில் மனம் துள்ளிக் குதித்தது. கால்கள் துள்ளிக்குதிக்க முடியாமல் தடுமாறியது. குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்தனர். சந்தோஷ மிகுதியால் அப்பா கடைக்கு சென்று பட்டாசு வாங்கி வந்து கொளுத்தினார். கௌசிகன் தொலைபேசியை எடுத்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள முதல் அழைப்பாக தனது அதிபரை அழைத்து தனது உயர்தரப் பரீட்சை பெறுபேற்றை கூறினான்.

அதிபர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். பரவாயில்லை நாங்க சொல்லியும் கேட்காம நீ உண்ட விருப்பத்துக்கு தேர்ந்தெடுத்த பாடப்பிரிவில் வென்றுவிட்டாய் மகனே! உனக்கு விடியல் பிறந்துவிட்டது

என்று வாழ்த்தினார். பல்கலைக்கழக வாய்ப்பு நிச்சயமாக உண்டு எனவும் கூறினார். அதை கேட்டவுடன் கௌசிகனுக்கு அவனது விடியலை வென்றுவிட்ட மகிழ்ச்சி ஏற்பட்டது. இவ்வளவு நாள்களாக குடும்ப வறுமையை தாங்கிக் கொண்டு ஆதரவற்றோர் இல்லத்தின் ஆதரவையும் ஏற்றுக் கொண்டு நல்ல பல உள்ளங்களின் உதவியினையும் பெற்று தன் வாழ்வு விடிந்து அதிகாலை விடியலின் கீற்றுக்கள் வானில் தெரிவதைப்போல மனதிலே புது வசந்தம் பிறந்தது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் - 267

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**679.புலம்பெயரில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படும் அமைப்புக்களோ அல்லது அவர்களில் எஞ்சியுள்ள அமைப்பாளர்களோ இறங்கியோ அல்லது பொது நிலைப்பாடு ஒன்றிற்கு இணங்கியோ வருவார்கள் என எண்ணலாமா?**

1983 - 2009 வரையான காலங்களில் ஒவ்வொரு நாட்டிலும் புலம்பெயர்ந்து




வாழ்ந்த தமிழ் மக்கள் பல அமைப்புக்களை அமைத்து அமைப்பாளர்களின் கட்டுப்பாட்டிலும் வழிகாட்டலிலும் பல உதவிகளை வழங்கினார்கள். முள்ளிவாய்க்காலின் நிகழ்ச்சிகள் எல்லோரையும் விரக்திக்குத் தள்ளி என்ன செய்வது என்று தெரியாத நிலைக்கு இட்டுச் சென்றது.

விடுதலைப் புலிகளின் அமைப்பாளர்கள் கூட போராட்டத்தின் புதிய கட்டத்தில் ஜனநாயக முறையில் சர்வதேசத்துடன் எப்படி ஒத்துழைத்து தமிழ் மக்களின் விடுதலையை - அபிலாஷையை வென்றெடுப்பது என்றுதான் சிந்தித்தார்கள். இப்படியான சிந்தனைகளால் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு பிரதிநிதிகளாகச் செயற்பட்டோர் பலர் இந்தப் போராட்டத்தை ஜனநாயக ரீதியாக நாடு கடந்த தமிழீழ அரசு என்ற வடிவத்தில் முன்னெடுக்கத் தீர்மானித்தனர். புலம்பெயர்ந்த அமைப்புகளின் பல நாட்டு பிரதிநிதிகள் பலர் போரின் பின் பாரிஸிலில் சந்தித்துப் போராட்டத்தின் புதிய உருவம் சர்வதேச மயப்பட்டதால் உலகத் தமிழர் பேரவை (Global Tamil Forum) என்ற அமைப்பைத் தோற்றுவித்தனர். தத்தமது நாட்டு அரசாங்கங்களுக்கு தமிழ் மக்களின் போராட்டத்தின் உண்மையான தன்மையையும் தொடரும் நிலைமையையும் தெரியப்படுத்துவதே நோக்கமாக இருந்தது. அங்குரார்ப்பண தினத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் கூட இருக்க, கலாநிதி எதிர்வீரசிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். சில மாதங்களிலேயே அவர் பதவி விலக, வணபிதா இம்மானுவேல் தலைமை ஏற்றார். பேரவையில் ஒரு நோக்கம் தமிழ்க் கட்சிகளையும் அமைப்புக்களையும் தமிழ் மக்களது இலட்சிய ஒற்றுமைக்கு ஊக்குவிப்பதும் ஒரே இலட்சியத் திசையில் பயணம் செய்ய உதவுவதும் என்பது. அதற்காக சில தடவைகள் பேர்லினிலுள்ள பேர்க்கோவ் அமைப்பின் ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் முழு வெற்றிகள் காணப்படவில்லை. இடையில் மஹிந்த அரசினை மாற்றும் பணியில் சர்வதேச நாடுகளுக்கு ஆதரவளித்த இவர்கள், மைத்திரி - ரணிலின் அரசுக்கு 'விமர்சித்து ஒத்துழைப்பை' வழங்கினர். இந்தப் பணிகளைத் தாயகத்திலிருந்து தொடரலாம் என வணபிதா இம்மானுவேல் அடிகள் நாடு திரும்ப, அவரது விடுதலைப் புலிகள் சகோதரர்களோ அவர் அரசாங்கத்துக்கு விலைபோயுள்ளார் எனக் குறிப்பிட்டு, தலைவர் பிரபாகரன் பெயரால் மரணதண்டனையும் விதித்தார்கள். ஆகவே வணபிதா பேரவையின் பதவிகளிலிருந்து விலகி நாட்டிலிருந்து பார்வையாளராகவும், இறை பணியிலும், மனிதனாகவும் தமிழனாகவும் வாழ்கிறேன் என்று அறிவித்துள்ளார். ஆகவே புலம்பெயர் மக்கள் வருங்கால 'மனிதரைக்' கட்டியெழுப்புங்கள் என அறை கூவல் விட்டார். அவர் கடந்து வந்த பாதையில் அது அவரது அனுபவம் என்றால், புரையோடிப் போயுள்ள இந்த உணர்வை அகற்றி இணக்கம் ஏற்படுத்துவது கடினம். ஆனால் எழுந்துள்ள புதிய சர்வதேசச் சூழலிலும் அடைந்துள்ள ஒருமைப்பாட்டு நிலையிலும் இந்த முயற்சிகளை மேலும் அயராது தொடர்தல் வேண்டும். ஒரு விவேகமானதும், நிதர்சனமானதுமான அணுகுமுறை என வரும்போது தமிழ் பகுதிகளின், தமிழ் மக்களின், உண்மை நிலையை அறிந்து அதற்கேற்ப செயற்படும் தலைமைத்துவத்தைப் பேண வேண்டும்.

**680.ஜனநாயக முறையில் வன்முறையற்று விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் மக்கள் தேடும் நீதி எப்படியானது? எவற்றுக்கு சர்வதேச சமூகம் அனுசரணை கொடுக்கும்?**

இன்றைய சர்வதேச சூழலில் நாட்டில் வளரும் மக்களும் புலம்பெயர் மக்களும் கூட்டாக, உணர்ச்சிகளை விட்டுப் பொறுப்புணர்வுடனும் பகுத்தறிவுடனும் சிந்தித்து முன்னேற வேண்டும். ஐ.நாவின் விளக்கத்தின் படி ஒரு சமூகம் தாங்கள் அனுபவித்த கொடுமைகளிலிருந்து விடுபட்டு மீளவும் அவை நடை பெறாதிருக்கவும், குற்றம் செய்தவர்களை உண்மை, நீதி அடிப்படையில் அவற்றை இனங்கண்டு பொறுப்பேற்கவும், உண்மையான ஒப்புரவைக் கொண்டுவரக் கூடியவைகளைச் செய்யவும் ஏதுவாகப் பொருத்தமான, நம்பகத்தன்மையுடையவற்றைச் செய்யும் உரிய அமைப்புகளைச் செயல்படுத்துவதே மார்க்கம் எனக் கூறுகிறது. இனங்களுக்கிடையேயான மாற்றுநிலை நீதி (Transitional Justice) என்று சுருக்கமாக இது அழைக்கப்படும். சமாதானமாகத் தொடர்ந்து வாழ வழி வகுக்கும் பாதையாக இது பார்க்கப்படும். ஆகவே சர்வதேச ஆதரவை ஜனநாயக வழியில் நீதி தேடி நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்விதமான முயற்சிக்களுக்கு குந்தகம் விளைத்துத் தொடர்தும் பழிவாங்கலை அடிப்படையாகக் கொண்ட முயற்சிகளையே நம்பியிருப்பாராயின் அவர்களின் நீதி தேடும் பயணம் முட்டுக்கட்டைகளையே சந்திக்கும்.

வணபிதா இம்மானுவேல் தனிமனிதரல்லர், ஓர் இயக்கம், எரிமலை என காசி ஆனந்தன் எழுதினார். பிரபாகரன் பெயரினால் தரப்பட்ட மரணதண்டனையின் நிமித்தம் இந்த எரிமலை உறங்கிவிட்டதோ, என்னவோ. மீளாய்வுகளில் அவரினால் காணப்பட்டவைதான் இவற்றுக்கான காரணம் என்பதை அவர் வெளிப்படையாகப் பேசாமல் அறிவது முடியாது. அவர் அவற்றைத் தன்னுடனே, தன் தேவனுக்கும், பிரபாகரனுக்கும் கொண்டு செல்ல விரும்பலாம். அவர் தலைமை தாங்கிய பேரவை விடுதலைப் புலிகளின் அமைப்பாளர்களின் உறைவிடமாக இருக்கச் சாத்தியமில்லை. நாடு கடந்த தமிழீழ அரசுடன் இயங்காத விடுதலைப் புலிகளின் அங்கத்தினர்களோ அமைப்பாளர்களோ தமிழர் ஒருங்கிணைப்புக் குழு என்றும் இயங்குகிறார்கள்.

ஆகவே முதலில் இந்தத் தரப்புக்களிடையே புரிந்துணர்வு வேண்டும். இவர்கள் எல்லோரையும் ஒரு பொது நிலைப்பாட்டில் இணைக்கக் கூடிய கட்டமைப்பு அதற்கான ஊக்கத்தைத் தர வேண்டும்.

**681.கஜேந்திரகுமார் தன் வழி தான் என்று 13 ஆம் திருத்தத்திற்கு சமாத. கட்ட மோட்டார் பவனி தொடங்கி விட்டாரே?**

இது துரதிர்ஷ்டமோ துர்ப்பாக்கியமோ அல்ல. தமிழ் மக்களது தலைவிதி. இதை யொட்டி நடத்தப்பெற்ற ஊடகவியலாளர்கள் கூட்டத்திலே கூட்டமைப்புத் தலைவர்கள் கஜேந்திரகுமார் ஜனாதிபதி கோட்டாபயவின் நிகழ்ச்சி நிரலில் இயங்குகிறார் என்ற சாரப்பட கருத்துத் தெரிவித்தார்கள். அவர் கோட்டாவின் நிகழ்ச்சி நிரலுக்கு நேரடியான பணிப்புகளில் நடக்கிறார் என்ற எண்ணத்தை நான் மேற்கொள்ள வில்லை. அது கட்சி அரசியல். ஆனால் விரும்பியோ விரும்பாமலோ கஜேந்திர குமாரின் நடப்புக்கள் அந்த வியூகங்க



ளுக்கு உதவி செய்து கடைசியில் அந்தப் பலனைத்தான் தமிழ் மக்களுக்குப் பெற்றுத்தரும் என்பது விளங்கிக் கொள்ள முடியாததல்ல.

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. விலைவாசி ஏற்றங்களால் மக்கள் நொந்து உணவுக்காக ஏங்குகிறார்கள். மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு என வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஏராளம். ஆனால் பேரினவாத சக்திகள் தங்களிடையே உள்ள கட்டமைப்புக்களில் ஒன்றாக நாட்டிலுள்ள விகாராதிபதிகள் எல்லோரையும் குழுமமாக இணைத்து மின் அஞ்சல், குறும் செய்திகள் மூலம் செய்திகளும் பணிப்புரைகளும் அந்த விகாராதிபதிகளுக்குத் தெரிவிக்கின்றன. அதில் விகாராதிபதிகள் மக்களுக்கு அவர்கள் பஞ்சத்தையோ, வாழ்வாதாரக் கஷ்டங்களையோ பொருட்படுத்தாது நாட்டின் இறைமைக்கு வரும் பேராபத்துக்களை அறிந்து, அவற்றுக்குப் பாதுகாப்பு தர வல்லவரான ஜனாதிபதிக்குத் தொடர்ந்து ஆதரவு தரவேண்டும் என அறிவிக்கக் கேட்கப்படுகிறார்கள். இதற்கு கூட்டமைப்பு, கஜேந்திரகுமார் ஆகிய இரு தரப்புகளுமே பாவிக்கப்படுகிறார்கள். கூட்டமைப்பினர் சமஷ்டியே தீர்வு என்று கேட்டு 13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல் நடத்த இந்தியாவைக் கோருகின்றார்கள். அது இறைமைக்கான ஆபத்து என்றும் அதற்கு மேலே போய் கஜேந்திரகுமார் இரண்டு தேசம் கேட்கிறார். அது இன்னும் மேலான ஆபத்து. இருவரும் இணைந்தே செயல்படுகிறார்கள் என்ற பரப்புரை வேறு.

ஆனால் தமிழ் மக்களுடைய நிலையோ அவர்களிடையேயான இப்படியான தேர்தல் அரசியல் (23ஆம் பக்கம் பார்க்க.)



# இந்தியாவில் பிறந்து வளர்ந்து இலங்கையில் அரசியலில் மிளிர்ந்த நடேசன்

● யாழ் மகள் சைந்தவி

சுப்பையா நடேசபிள்ளை அல்லது சு. நடேசன் என்ற இந்தியாவை பிறப்பிடமாகக்கொண்ட இலங்கையின் அரசியல் தமிழ் தலைவர். இலங்கையின் தமிழ்த் தலைவர்களில் ஒருவரும், அரசியல்வாதியும் ஆவார். இலங்கை அரசாங்க சபை, நாடாளுமன்றம், செனட் சபை ஆகியவற்றில் உறுப்பினராக இருந்தவர்.1895 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி பிறந்த நடேச பிள்ளை, ஜனவரி மாதம் 15, ஆம் திகதி 1965 ஆம் ஆண்டு மரணம் அடைந்தார். சேர் பொன். இராம நாதனும், சேர் பொன். அருணாசலமும் தமிழ்நாடு சென்றிருந்த வேளை அருள்பரானந்த சுவாமிகள் மூலம் இலக்கணம் இராமசாமிப்பிள்ளை குடும்பத்துடன் தொடர்பு ஏற்பட்டு நாகநாதனைப் பற்றி அறிந்தனர். இராமநாதன் நாகநாதனை நடேசன், இங்கே வா என்று அழைத்தாராம். அன்றில் இருந்து அவர் பெயர் நடேசன் ஆகியது. இராமநாதனுடன் 1923 ஆம் ஆண்டில் இலங்கை வந்தார் நடேசன். 1924 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரிய ராகி, பின்னர் அதன் அதிபரானார். 1926 ஆம் ஆண்டில் இராமநாதனின் புதல்வி சிவகாமசுந்தரியைத் திரும ணம் புரிந்தார் .

தமிழ்நாடு, நாகப்பட்டணத்தைச் சேர்ந்த சுப்பையா என்பவருக்கும், தஞ்சாவூரைச் சேர்ந்த இலக்கணம் இராமசாமிப்பிள்ளை என்பவரின் மகளுக்கும் தஞ்சா வூரில் பிறந்தவர் நடேசன். இவரின் இயற்பெயர் நாக நாதன். 19 வயதில் பட்டதாரியான நாகநாதன் சட்டம் பயின்று இளமையிலேயே நகராண்மைக்கழக உறுப்பி னரானார். முத்துக்கிருஷ்ண பரமஹம்சர் என்பவரிடம் சமயம் பயின்று தரிசனத்திரயம் என்ற நூலையும் எழுதி னார்.

நடேசன் பிரித்தானிய இலங்கையின் அரசாங்க சபை உறுப்பினராக 1934 முதல் 1947 வரை யாழ்ப்பா ணப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக 1947 தேர்தலில் காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்டு செல்வநாய கத்திடம் தோற்றார். ஆனாலும், பின்னர் 1952 நாடாளு மன்றத் தேர்தலில் சா. ஜே. வே. செல்வநாயகத்தை எதிர்த்து காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று 1952 முதல் 1956 வரை சுதந்திர இலங் கையின் அஞ்சல், தந்தி, மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சரானார்.

இவர் சார்ந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி சிங்களம் மட்டும் சட்டத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டமையினால் அவர் அக்கட்சியில் இருந்து பின்னர் விலகினார் . பின் னர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் இலங்கை சுதந்திரக் கட்சியின் அரசில் 1960 முதல் இறக்கும் வரை செனட் சபை உறுப்பினராக இருந்தார்.

சு. நடேசபிள்ளை பல நூல்களை எழுதியுள்ளதோடு - தமிழுக்கும் அரசியலுக்கும் அதிகம் தொண்டுசெய்த வராக விளங்கினார் .

ஆங்கிலப் பாடல்கள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தார். வடமொழியும் நன்கறிந்தவர். வடமொழி யில் காளிதாசர் இயற்றிய சகுந்தலை நாடகத்தைத் தழுவி சகுந்தலை வெண்பா என்ற காப்பியத்தை எழுதி வெளியிட்டார் நடேசபிள்ளை.

343 செய்யுள்களில் இது அமைந்துள்ளது. இது அவர் 1934 ஆம் ஆண்டில் கலாநிலைய வெளியீடான ஞாயிறு என்னும் முத்திங்கள் இதழில் தொடராக வெளி வந்து, பின்னர் நூலாக வெளிவந்தது. இவரின் கட்டு ரைகள் பல ஞாயிறு, கல்கி போன்ற இதழ்களில் வெளி வந்துள்ளன. கலாநிலையம், ஆரிய திராவிடாபிவிருத் திச் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இவர் இருந் தார்.



அவர் எழுதிய நூல்களாக சகுந்தலை வெண்பா கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி ஆகியன முக்கியம் பெறுகின்றன .

சிதம்பரத்தில் இடம்பெற்ற சென்னை சைவசித்தாந்த சமாசத்தின் பொன்விழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினார். சென்னையில் நடந்த தமிழ் விழாவில் பேருரை நிகழ்த்தினார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் சொர்ணம்மாள் ஞாபகார்த்தப் பேருரை நிகழ்த்தினார். மதுரை நான்காம் தமிழ்ச்சங்கப் பொன்விழாவிற்குத் தலைமை வகித்தார். சிறந்த தமிழ் ஆளுமையும், அரசியல் ஆளுமையும் கொண்ட சு .நடேசன் இலங் கையின் தமிழ் அரசியல் வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கிறார்.

---

## இனப்படுகொலையும்...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட பிரிவினைகளால் தரித்திரமாகவே தொடர்கி றது.

**682.இந்த விதமான அரசியல் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு ஆளாகினார்கள் என்ற கணிப்புக்கு மனித உரிமைகள் மன்றம் வருதைப் பாதிக்குமா?**

கஜேந்திரகுமாரும் அவரை அண்டியுள்ள தரப்புகளும் இனப்படுகொலை எனக் காணப்படுவதில் வரும் பரிகாரத் தீர்வில் சுயநிர்ணய கோரிக்கையை முன்னெடுக்க நம்பிக்கை கொண்டுள்ளார்கள். சர்வதேச சட்ட நியதி களில் இது நடக்க முடியாததல்ல. அல்லது முரணானதும் அல்ல. ஆனால் நடைமுறைச் சாத்தியங்களைப் பற்றி பேசும்போது அவற்றை அவர்கள் தெளிவுபடுத்துவதில்லை. ஏதோ ஐ.நா. மூலம் இரண்டொரு மாதங்களிலோ அல்லது வருடங்களிலோ நடந்து விடும் என சூடான், கொஸோவோ, கிழக்குதிமோர் போன்றவற்றை உதாரணம் காட்டி, அவை போல் இவை நடக்கும் என்ற பிரமை யையும் நம்பிக்கையையும் உண்டாக்குகின்றார்கள். இவை நடந்தவைதான். ஆனால் அவற்றுக்கு எடுத்த காலங்கள், அவற்றின் பின்னணிகள், அவற்றினால் அதில் ஈடுபட்ட சர்வதேச நாடுகள் கணித்துப் பெற்ற ஆதாயங்கள் என்பதைப் பற்றிப் பேசிக்கொள்வதில்லை. மகப்பேறு என்பது வார்த்தையளவில் எல்லாவற்றுக்கும் பொதுதான். தாயும் சிசுவும் சுகமாகப் பிரசவத்தில் வெவ் வேறு ஆவதுதான். ஆனால் ஒவ்வொரு மகப் பேறும் அந்தத் தாய்க்கும் சிசுவுக்கும் தனித்துவமானது. கோடா னுகோடி. பிறப்புக்களில் அது அவர்கள் இருவருக்கும் இடையே இருக்கும் மரணத்தின் விளிம்பிலான போராட்ட மாகவே பார்க்கப்பட்டு, பிறந்ததும் ஆசுவாசப்படுகிறோம். அதுபோலவே சூடானுக்கு, திமோருக்கு, கொஸோவோ வுக்கு நடந்தது. அப்படியான மகப்பேறு தமிழீழத்துக் கும் கிடைக்கும், கிடைக்க வேண்டும் என்ற கணிப்புக் கள் தவறானவை. இது அவற்றை ஒட்டிய தனித்துவத் திலேயே, சர்வதேசத்தின் எண்ணப் பாங்குகளிலே தங்கியிருக்கின்றது என ஆபிரிக்காவின் பல போராட்டங் களை, குர்திஷ் மக்கள், நாகலாந்து, திபெத் போன்றவை களையும் கணக்கெடுத்து புத்திசாரியமாக முன்னேற வேண்டும்.

இன்று போர் முடிந்து 13 வருடங்களாகிவிட்டன. பலத்த குரலில் இனப்படுகொலை என்று கூக்குரலிடப்பட்டது. ஆனாலும் அதன் விசாரணைகளையும் ஸ்ரீலங்கா தனது சாணக்கியத்தனத்தால் தமிழ் மக்களது அரசியலையும் பாவித்துத்தான் இவ்வளவு காலமும் இழுத் தடித்தது. இன் னும் எவ்வளவு காலம் இழுத்தடித்து தூர்ந்து போகச் செய்யலாம் என்ற வியூகங்களில் இயங்குகின்றது.

இந்தியப் படைகளை அப்புறப்படுத்த பிரேமதாஸா பாவித்த யுக்திகளும் காலங்களும், சந்திரிகாவின் பேச்சு வார்த்தைகள், அவை இழுத்த வருடங்கள், நோர்வே பேச்சுவார்த்தைகள், பின்னர் போர், 13+என்ற வாக்குறுதி கள், அவற்றின் பின் சிங்கள, பௌத்தத்தின் காவலனாக ஜனாதிபதி கோட்டாவின் தோற்றம், தொடர்ந்த நில அபகரிப்புக்கள், பௌத்த திணிப்பு என போருக்கு பின்னான இழப்புக்களைக் கணக்கிட்டால் ஜனாதிபதியின் கட்ட மைப்புக்களின் கணிப்பில் இன்னும் மிகுந்திருக்கும். அவரது காலப்பகுதியில் தமிழ் மக்களது தனிப்பட்ட காணிகள் தவிர மற்றவை அபகரிக்கப்பட்டு விட்டால் அடுத்த தேர்தலின் பின் தமிழ் மக்கள் தமது பிரதேச மெனக் கோருவதற்கு எதுவுமே இல்லை என்ற வாதம்தான் தரப்படும். ஆக, தமிழ் மக்கள் தீவிர சிகிச்சை பிரிவில் பிழைக்கலாமா என்ற வியூகங்களைத் தீட்ட ஆகக் கூடி யளவில் ஐந்து வருடங்களைப் பார்க்கலாம். 13 வருடங்களே இழுத்தடிக்கப்பட்ட நிலையில் வரக்கூடிய 5 வருடங்க ளுக்குள் தமிழ் மக்களுக்காக கஜேந்திரகுமார் தரப்பு நடத்தும் அரசியலால் அவர் முரசறையும் தீர்வை ஏற் படுத்திக் கொள்வாரா? தீவிர சிகிச்சைகளுக்குப் போவ தையே பிடுங்கி எறிபவரிடம் என்ன உத்தரவாதங்களை எதிர்பார்க்கலாம்? தந்தை செல்வாக்கு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் உளமார்ந்த நம்பிக்கை கிடையாது. அதன் பின் தனது அந்திய காலங்களில் தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காக்க வேண்டும் என்ற சொல்லிக் கண் களை மூடினார். இப்பொழுது நடக்கும் அரசியலைப் பார்த்தால் சர்வதேசம் விரும்பினாலும் தமிழ் மக்களின் கடவுள்கள் விடுவார்களோ தெரியாது.



பல சமயங்களில் இந்த ஆக்கங்களைப் பற்றி நண் பர்கள் கலந்துரையாடி அபிப்பிராயங்கள் தரும் போது நான் கூட மரக்கிளையில் இருந்து கரையும் காகம் போல கரைகிறேனோ என்ற ஆதங்கங்கள் எழுவது உண்டு. வரலாறுகளின் படிப்பினைகளை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அவற்றை மக்கள் முன் வைத் தேன். அந்த வரலாறுகளிலிருந்து படிப்பினை பெற்று கொள்ளாதவர்கள், விமோசனம் பெறுவதையும் வீணாக்கி விடுகிறார்கள் என்பதை சரித்திரங்கள் தெளிவாகச் சொல்லுகின்றன.

ஆக, ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி இதனை முடித்து விடலாம் என்றும் தொடர்கின்ற அரசியலையும் அதன் பெறுபேறுகளையும் தமிழ் மக்களே தீர்மா னித்துக் கொள்ள வேண்டும் என்றும் எண்ணுகின் றேன்.

(வளரும்)

